
கல்கி

KALKI 24-2-1974 50 காசு





உறுதியும் வேகமும் உள்ள ஹெர்குலிஸ் சைக்கிளில் சவாரி செய்யுங்கள்

TIC/H-7678R



உண்மை! ஹெர்குலிஸ் சைக்கிளை அதிக பாரத்தை தாங்கும் அமைப்பு களுடன் உறுதியாக உருவாக்கியுள்ளோம். உதாரணமாக உறுதியான எஃகுக் குழாய்களாலான அதன் ஃபிரேம், வலுவேற்றிய எஃகு செயின், இலகுவாக ஓட்டும் வகையில் ஃப்ரீ-வீல், சிறப்பான பிடிமானத் துக்கும் சுலபமாக பிரேக் பிடிக்கவும் தகுந்த வகையில் சரியான வளைவுகளுடன் கூடிய ஹாண்டில் பார்.

ஹெர்குலிஸின் ஒவ்வொரு பகுதியும் இலகுவான சவாரிக்கு ஏற்ற வகையில் விஞ்ஞான முறைப்படி அமைக்கப்பட்டது.



HERCULES PHILLIPS BSA

டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை 600053

உங்கள் பணியில் 25 ஆண்டுகள் — 1949-1974

ஹெர்குலிஸ்

—உலகிலேயே உறுதியான சைக்கிள்.


கல்கி

பொருளடக்கம்

பிரமாதீச, மாசி 12 ■ பிப்ரவரி 24, 1974



கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



ravikunj
வாஷ் அண்ட் வியர், பிளீச்ட்,
டைட் மெர்ஸிரைஸ்ட் பாப்ளின்கள்
BELAIR
வாஷ் அண்ட் வியர் பிளீச்ட்,
டைட் மெர்ஸிரைஸ்ட் பாப்ளின்கள்
Shafalee
ப்ளோரியான் பிரின்ட்டட் மெர்ஸிரைஸ்ட் பாப்ளின்
தாவண்கெரே
துணிவகைகள்
ஸ்ரீ தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்
•••பண்டைய மரபை இன்றைய வடிவாய்ப் படைக்குமிடம்!
Thomas/OCM/14 dTam

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 30

சிவசேனை வெறியாட்டம்

பம்பாய் மாநகரில் சிவசேனைக் குண்டர்கள் புரிந்துகொண்டு வரும் அட்டூழியங்களையும் வெறியாட்டங்களையும் கேரள அரசும், தமிழ்நாடு அரசும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. இது போதாது. மற்ற எல்லா மாநிலங்களும், மத்திய அரசும் கூட மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டும். கண்டிப்பதுடன் நின்று விடாமல், இவற்றைத் தவிர்க்கத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியப் பிரஜைகளுக்கு அரசியல் சாஸனம் அளிக்கும் உரிமைகளில், 28 திருத்தங்களால் பறிக்கப்பட்டதும் குறைக்கப்பட்டதும் போக, மிஞ்சியுள்ளவற்றில் முக்கியமானது எந்த மாநிலத்தவரும் எந்த மாநிலத்திலும் வசிக்கவோ, தொழில் செய்யவோ சொத்துக்கள் ஆர்ஜிதம் செய்யவோ விளியோகிக்கவோ, தடங்கலின்றி நடமாடவோ வழங்கப்பட்டுள்ள உரிமை. இந்தியப் பிரஜைகள் என்றுதான் அரசியல் சாஸனம் நம்மைக் கருதுகிறது. மாநிலப் பிரஜைகள் என்த் தனி அந்தஸ்து மக்களுக்கு இல்லை.

சிவசேனைக் குண்டர்கள் விஷயத்தில் மஹாராஷ்டிர மாநில அரசு தன் கடமையை முழுப் பொறுப்புடன் ஆற்றத் தவறி விட்டது. இதைக் கண்டித்து நிலைமையைச் சீராக்கவும், துயரமும் கோபமும் கொண்டுள்ள பம்பாய் வாழ் தென்னிந்திய மக்களின் அவநம்பிக்கையைப் போக்கவும் பாதுகாப்பு அளிக்கவும் மத்திய அரசு சுறுசுறுப்புடன் செயல்படவில்லை.

சட்டமும் ஒழுங்கும், பாதுகாப்பு உணர்ச்சியும் கண்டிப்பாக நிலைநாட்டப்படவேண்டும். சிவசேனை வெறியாட்டங்களால், பாதிக்கப்பட்டவர்கள் கேரளப் பகுதி மக்களும் தமிழர்களுமே. இவர்கள் மராட்டியர்களுக்கு இதுவரை இல்லாது இப்போது திடீரென்று என்ன தீங்கு இழைத்தனர் என்பது யாருக்குமே விளங்கவில்லை. மற்ற இனத்தவர்களான பாரசீகர்கள், முகம்மதியர்கள், கிறிஸ்தவர்களைப் போலவே தென்னாட்டு மக்களும் இம்மாநகரில் தலைமுறை தலைமுறையாகப் பல துறைகளில் பணியாற்றி வசித்து வருகின்றனர். இவர்களின் உழைப்பால் பம்பாய் இந்தியாவின் பிரதான நகரம் என்பதுடன் உலக நகரங்களில் ஒன்று என்ற ஸ்தானத்தையும் அடைந்துள்ளது.

அந்தந்த மாநில மக்களுக்கு மட்டுமே அந்தந்த மாநிலங்களிலுள்ள வேலை வாய்ப்புக்களும் தொழில் வாய்ப்புக்களும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்து, தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் ஒவ்வாதது. பம்பாயில் நூற்றுக்கணக்கானவர்கள் பணியாற்றும் ஒரு நெசவு ஆலையில் ஒரு சில தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்றால் அங்கு தயாராகும் துணியைத் தமிழ்நாட்டில் பலர் வாங்குவதன் மூலம் வடநாட்டு ஊழியர் கூலி பெறுவது மட்டும் நியாயமாகுமா? இப்படியே குறுகிய நோக்கில் தர்க்கவாதங்களைச் செய்துகொண்டு போனால் கண்ணிருந்தும் குருடர்களாவோம். பம்பாய் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றம் இந்தக் குறுகிய அடிப்படையில் ஏற்பட்டதல்ல.

ஒரு மாநில மக்களின் வாய்ப்புக்களை, மற்ற மாநிலத்தவர்கள் தட்டிக்கொண்டு போகின்றனர் என்று பூச்சாண்டி காட்டிப் பகைமையை வளர்ப்பதில் அரசியல் காரணங்களும் கலந்துள்ளன. ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் இந்த விஷ சர்ப்பத்தை ஆரம்பத்திலேயே ஒடுக்கி விடுவதுதான் அரசியல் விவேகமாகும்.

மத்திய, மாநில அரசுகள் பலாத்காரத்தால் சிவசேனைக் கிளர்ச்சியை அடக்க நினைப்பதோ அல்லது அதற்குப் பயந்து போய் அடங்கிவிடுவதோ முறையல்ல. அகில இந்திய ரீதியில் செல்வாக்குடைய சர்வ கட்சித் தலைவர்களை ஒன்று சேர்த்து அவர்களைக் கொண்டு இந்த ஆபத்தான போக்குக்குக் கொஞ்சமும் இடந் தரலாகாது என்று மக்களிடையே வலுவான பிரசாரம் செய்ய வேண்டும். இது மத்திய அரசின் ஆதரவுடன் கட்சி வேறுபாடுகளை மறந்து பெரிய அளவில் தொடர்ந்து பலகாலம் நடத்தப்பட வேண்டும். விஷத்துக்கு முறிவு இதுவே.

தமிழ் நாட்டிலே...

தீரன்

தபால் தலையும் தேர்தலும்

பாண்டிச்சேரியில் நடைபெறும் தேர்தலில் தி. மு. க. வும் அதன் தலைவர் திரு மு. கருணாநிதியும் செய்கிற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் 'கவிஞர் பாரதிதாசனுக்குத் தபால்தலை வெளியிடாத காங்கிரஸுக்கா உங்கள் ஓட்டு?' என்று கேட்டு வருகிறார்கள். தபால் தலை வெளியிடாதது ஒரு மாபெரும் பிரச்னையாகப் பேசப்படுகிறது. திருவள்ளுவர், கம்பர், பாரதியார், அண்ணாதுரை, ராஜாஜி ஆகியவர்களுக்குத் தபால் தலை வெளியிட்டதைச் சொல்லாமல், மத்திய அரசு ஏதோ அறவே தமிழ் நாட்டுப் பிரமுகர்களுடைய தபால் தலைகளையே வெளியிட மறுத்தது போல் பேசியும் ஏசியும் வருவது தேர்தல் 'ஸ்டண்ட்' ஆகப் பயன்படலாம். ஆனால் நியாயமான பேச்சு ஆகாது. மக்கள் இதில் ஏமாந்துவிடும் அளவுக்குச் சிறுபிள்ளைகளாக இருக்க மாட்டார்கள். தபால் தலை வெளியிடாததால் பாரதிதாசனின் மதிப்போ பெருமையோ குறைந்து விடப் போவதில்லை. விலைவாசிகளின் ஏற்றத்தில் மக்கள் சிக்கித் தவிக்கும் அபாயமான வேளையில் மக்களுக்குப் பயனுள்ள – உடனடி நன்மைகளைச் சொல்கிற தேர்தல் பிரசாரம்தான் பயனளிக்கும். தபால் தலைப் பிரச்னையை எழுப்புவது, பெயர் மாற்றுவது ஆகியவையெல்லாம் மக்களின் உடனடியான எந்தக் கவலைகளையும் தீர்த்துவிடப் போவதில்லை.

ஆபாசப் படங்கள்

சென்னைத் திரைப்படச் சங்கத்தின் 16வது ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய போது தமிழ்நாடு கவர்னர் திரு கே. கே. ஷா திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் இன்று மிக மிகத் தேவையான அறிவுரைகள் சிலவற்றை அழுத்தமாகக் கூறியிருக்கிறார். ''திரைப்படங்கள் கலைப் படைப்புக்களாக இருக்க வேண்டும். நல்ல மையக் கருத்துள்ள கதையைக் கொண்டு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். காமிரா திறமையாகக் கையாளப்பட வேண்டும். இவ்வாறு கலையம்சங்களோடு படம் தயாரிக்கப்பட்டாலும் படுக்கையறைக் காட்சிகள், ஆடை அவிழ்ப்புக் காட்சிகள் உள்ள வேறு தரக் குறைவான படங்களோடு இந்த நல்ல படங்கள் வியாபார ரீதியில் போட்டி போட முடியாது போய் விடும். இது வருந்தத் தக்க நிலைமையாகும். நல்ல படங்களுக்கு நல்ல படங்களின் போட்டி இருந்தால் பரவாயில்லை. நல்ல படங்களுக்குத் தரக் குறைவான படங்களின் போட்டி இருப்பதுதான் பரிதாபமான நிலைமை. ஆகவே தரக் குறைவான படங்களைத் தயாரிப்பவர்கள் திருந்த வேண்டும். ஆபாசக் காட்சிகள் தான் வசூலில் தொகை பெருக வழி என நினைக்கும் மனப்பான்மையை வளர விடக் கூடாது. அது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதில்லை.''

திரைப்படத் துறைக்கு இவ்வாறு ஆளுனர் வழங்கியுள்ள அறிவுரை வேறு சில கலைத் துறைகளுக்கும் பொருந்தும். சம்பந்தப்பட்டவர்கள் ஆன்ம சோதனை செய்துகொள்ளட்டும்.

கம்யூனிஸ்டுகளும் தமிழ்நாடும்


புதுச்சேரியில் தேர்தல் பிரசாரம் செய்யும் போது திரு காமராஜ் அவர்கள் தமிழ்நாட்டு அரசியலைத் தொடர்ந்து கெடுத்து வருகிற கம்யூனிஸ்டுகளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று மக்களை வேண்டியிருக்கிறார்.

''கம்யூனிஸ்ட் கட்சி நடிகர் பின்னால் சென்று தமிழ்நாட்டு அரசியலைக் கெடுத்து

ராஜாஜி சிந்தனை

மனிதனுடைய தேகம் ஒரு பானை. பானைக்குள் வேகும் அரிசியும், பருப்பும் தண்ணீரும் போன்றன மனிதனுடைய மூளையும் இந்திரியங்களும். அடுப்பின் மேல் பானை கொதிக்கிறது. பானையைத் தொட்டால் சுடும். சோற்றில் கை வைத்தால் கை வெந்துபோகும். பானையிலும் சோற்றிலும் உள்ள சூடு உண்மையில் பானையுடையதுமல்ல, சோற்றினுடையதுமல்ல. கீழே உள்ள அடுப்பின் நெருப்பே இவற்றின் சூடாகிறது. அவ்விதமே பிரம்மம் உயிர்களுக்குள்ளும் அசேதனப் பொருள்களுக்குள்ளும் அவற்றின் குண விசேஷங்களாக உருவெடுக்கிறது. மூளையும் புலன்களும் செய்யும் வேலையனைத்தும் பிரம்மத்தின் வேலையே. அதுவன்றி அணுவும் அசையாது.

எந்தச் சிறு பொருளைத் தீர ஆராய்ச்சி செய்யப் போனாலும் கடவுள் பேரில் மோதுகிறோம். சேலம் ஜில்லாவில் எங்கே கிணறு வெட்டினாலும் ஓர் ஆழத்துக்கு மேல் பாறைதான். அந்தப் பாறையைப் போலத்தான் பிரம்மமும். எந்தச் சிறு பொருளாயினும் அடியில் வெட்ட முடியாத அந்தப் பாறை நிற்கிறது.


மார்க்ஸ்
லெனின்
தமிழக
ஜனநாயகம்
இரு காங்கிரஸ் ஒத்துழைப்பு
கைவிட மாட்டோம்!
உணவு தானிய வர்த்தகம்
பொய்கள் வசவுகள்
பொய்கள் வசவுகள்
தேர்தல்கால நாராசம்!

விட்டது. நண்பர் கல்யாணசுந்தரம் தம் போக்கில் யாரையும் கேட்காமல் செயல்படுகிறார். தமிழகத்தில் ஏற்படுத்திய நிலையைப் புதுச்சேரியிலும் ஏற்படுத்திவிட்டார். இங்கேயுள்ள கம்யூனிஸ்ட் கட்சியும் நண்பர் சுப்பையாவும் அதனை எதிர்த்துக் கேட்க முடியவில்லை. கல்யாணசுந்தரம் முன்பு தி.மு.க.வுடன் உறவு வைத்துக் கொண்டார். என்ன பயன் விளைந்தது? பின் அங்கிருந்து பிரிந்து வந்த நடிகருடன் உறவு வைத்துக் கொண்டார். அடுத்து வேறு ஏதாவது கட்சி வந்தாலும் அதனுடன் கூடச் சேருவார். அவருக்கு நிலையான கொள்கை கிடையாது. சந்தர்ப்பவாதி. உலகத்திலேயே இந்தக் கம்யூனிஸ்டுகளைப் போல் நாளுக்கு ஒருவருடன் கூட்டுச் சேரும் கட்சி கிடையாது என்று கூறலாம். 'ஏழை பாட்டாளி வாழ வேண்டும். ரத்தத்தை உறிஞ்சும் பணக்காரர்கள் ஒழிய வேண்டும்' என்றெல்லாம் மேடையில் கம்யூனிஸ்டுகள் வீரமாகப் பேசுவார்கள். இங்கே கூட்டணி மந்திரிசபையில் இருந்து என்ன செய்தார்கள்? எதைச் சாதித்தார்கள்? வறுமை ஒழிந்ததா? வேலையில்லாத் திண்டாட்டம் அகன்றதா?'' என்பது புதுவையில் திரு காமராஜ் அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம். திரு காமராஜ் அவர்கள் கூறியிருக்கும் கருத்துக்களை யோசித்து மக்கள் நல்ல விதத்தில் செயல்படுவார்கள் என நம்புகிறோம்.

சிறுவர் பூங்கா மோசடி

கிண்டியில் தமிழக அரசின் நிர்வாகத்தில் உள்ள சிறுவர் பூங்காவில் விலங்கினங்களுக்குத் தீவனம் வாங்கிப் போடுவதில் பெருந்தொகை மோசடி புரிந்ததாக அங்கே பணி புரிந்த விலங்கினக் கண்காணிப்பாளர் ஒருவரை லஞ்ச ஒழிப்புப் பிரிவுப் போலீஸார் கைது செய்திருக்கின்றனர். தினசரி சிறுவர் பூங்காவில் உள்ள விலங்கினங்களுக்குத் தீவனம் வாங்கிப் போடுவதாக ரூ. 300 வரை போலியான ரசீதுகளைத் தயாரித்துக் கடந்த இரண்டு வருடங்களில் பல்லாயிரக் கணக்கில் மோசடி நடந்திருக்கிறது. உண்மையில் விலங்கினங்களுக்குத் தினசரி ஆகும் தீவனச் செலவு ரூ. 30தான். ஒரு பூஜ்யம் சேர்த்து மோசடி செய்தவர்களுக்கு மனச்சாட்சி பூஜ்யமோ?

திலகர் பெயர்

தஞ்சையில் உள்ள திலகர் திடல் என்ற பெயரை வேறு விதமாக மாற்ற முயன்று மக்கள் எதிர்ப்பின் விளைவாக இப்போது தி. மு. க.வினர் அந்த முயற்சியைக் கைவிட நேர்ந்துள்ளது. ஆனால் திலகர் திடலின் பெயரை மாற்ற மாட்டோம் என்று கலைஞர் அறிக்கை கொடுத்து விட்டுத் திலகர் திடலின் உள்ளே கட்டும் அரங்கத்துக்கு வேறு பெயர் சூட்டப் போவதாகத் தெரிகிறது. இது தந்திரமான காரியமாகும். சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரை திலகர் திடலில் 'சீரணி அரங்கம்' என்று ஒரு மேடையைப் போட்டு விட்டு அதன் பழைய பெயரை மெல்ல மெல்ல மறைக்க முயற்சி செய்வது போலவே தஞ்சையிலும் ஆகிவிடலாம். திலகரைப் போன்ற மாபெரும் தேச பக்தரின் திருநாமம் சூட்டப்படுவதற்குப் புதிய ஞாபகச் சின்னங்களை நாம் ஏற்படுத்த முடியாவிட்டாலும் ஏற்கனவே இருக்கும் பழைய சின்னங்களையாவது பாதுகாக்கத்தான் வேண்டும்.

காந்திய விழா

திருச்செங்கோடு அருகே ராஜாஜி அவர்களால் நிறுவப்பட்ட புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்துக்கு அடுத்த ஆண்டு பிப்ரவரி 6ந் தேதி பொன் விழா. அதற்குப் பூர்வாங்கமாக இந்த வருஷம் மார்ச் முதல் தேதி நடக்கின்ற ஆண்டு விழாவே பல விதங்களிலும் சிறப்புப் பெறுகிறது. ஆளுநர் கே. கே. ஷா இங்கு இன்றைக்கும் தொடர்ந்து நடந்து வருகிற நற்பணிகளைப் பார்வையிடவும் ராஜாஜியின் உருவச் சிலையைத் திறந்து வைக்கவும் விஜயம் செய்கிறார். ராஜாஜி பக்தர்களான சிற்பிகள் வேங்கடேசனும் ஜகந்நாதனும் இந்தச் சிலையை ஆசிரமத்துக்குப் பரிசாக அளித்துள்ளனர். ஆதி நாளில் ஆசிரமத்துடன் தொடர்பு கொண்டிருந்தவரும் இன்று பம்பாயில் காதி, கிராமத் தொழில் கமிஷனின் தலைவராகவும் விளங்கும் திரு ஜி. ராமச்சந்திரன் விழாவுக்குத் தலைமை தாங்குகிறார். ஆரம்ப நாளிலிருந்து ஆசிரமத்தின் நிர்மாணப் பணிகளில் கலந்துகொண்டு அருந்தொண்டாற்றியவர்களை ராஜாஜியின் புதல்வரும் ஆசிரமத் தலைவருமான திரு சி. ஆர். நரசிம்மன் பாராட்டிக் கௌரவிக்கிறார். இந்த விழாவின்போது ஒரு விசேஷ மலரும் ராஜாஜியின் நூல்களான கண்ணன் காட்டிய வழி, கைவிளக்கு ஆகியவற்றின் புதிய பதிப்புக்களும் வெளியிடப்பெறும். இதற்கு முன்னதாக பிப்ரவரி 28ந் தேதி சர்வோதயக் கருத்தரங்கும் நடைபெறும்.

சென்னை நகர பஸ்கள்

டாக்ஸி, ஆட்டோ கட்டணங்கள் உயர்ந்தபின் எந்நேரமும் சென்னை நகர பஸ்களில் கூட்டம் பிதுங்கி வழிகிறது. முன்னால் இருந்தது போல் 'பீக் அவர்' என்று ஏதும் இல்லாமல் காலை எட்டு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை 'பீக் அவர்' போலவே கூட்டம் அதிகமாகியுள்ளது. 'இன்ஸெண்டிவ்' இருப்பதனால் பஸ்ஸில் எவ்வளவு பேர் ஏறினாலும் மறுக்காமல் ஏற்றிக் கொள்ளுகிறார்கள். ஃபுட்போர்டுகளில் கூடக் கூட்டம் பொங்கி, தொங்கி நிற்கிறது. பல பஸ்கள் சுமை தாங்க முடியாமல் பஸ்ஸே ஒரு பக்கமாகச் சாய்ந்து கவிழ்ந்து விடுமோ என்று நினைக்கத் தக்கபடி பிரயாணம் அபாயமாகி விருக்கிறது.

நகர பஸ்களில் பயணம் செய்வோர் தொகை அதிகமாக இருப்பதைப் புரிந்து கொண்டு பஸ்களின் எண்ணிக்கையை உடனே அதிகரிக்க வேண்டும். பழைய குறைந்த என்

ணிக்கையிலான லொட லொட பஸ்களை வைத்து இனியும் காலம் தள்ள முடியாது.

வக்கீலை அடித்த போலீஸ்காரர்

விழுப்புரம் நகரைச் சேர்ந்த வக்கீல் ஒருவரை ஒரு போலீஸ் அதிகாரி தாக்கியதைத் தொடர்ந்து அந்நகர வக்கீல்கள் அனைவரும் அதைக் கண்டித்து வேலைநிறுத்தம் செய்ய நேர்ந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரியை 'சஸ்பெண்ட்' செய்யும்படி வக்கீல்கள் கோரியுள்ளனர். சமூகத்தின் கண்ணியமான அங்கங்களுள் ஒன்றான வழக்கறிஞர் அமைப்பினிடம் போலீஸார் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். பாளையங்கோட்டை பேராசிரியர் தாக்கப்பட்டது சம்பந்தமான தீர்ப்பின் இறுதியில் கூட 'பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களிடம் போலீஸார் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும்' என்பதைத் தீர்ப்பு எழுதிய நீதிபதி வற்புறுத்தியுள்ளார்.

தமிழகப் போலீஸார் அந்த மரியாதையையும், கண்ணியத்தையும் கட்டிக் காத்து நல்ல பெயர் எடுக்கட்டும்.

வட்ட மேஜை

சம்ஸ்கிருதக் கல்வி

சமஸ்கிருதக் கல்வியை எல்லா மட்டங்களிலும் ஊக்குவிக்க ஒரு திட்டம் வகுக்க எண்ணியிருக்கிறோம். இதில் முதல் கட்டமாக ஓய்வு நேரத்தில் தங்கள் வட்டாரத்தில் சமஸ்கிருத போதனையை மேற்கொள்ளக் கூடிய சமஸ்கிருத அறிஞர்கள், பண்டிதர்கள் ஆகியோரைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க முற்பட்டிருக்கிறோம். எனவே, தமிழ் நாட்டிலுள்ள சமஸ்கிருத பண்டிதர்களும் அறிஞர்களும் தங்கள் பெயர் விலாசம், தகுதிகள், அனுபவங்கள் ஆகியவை பற்றிய விவரங்களை ஒரு தபால்கார்டில் எழுதி இந்தச் சங்கத்துக்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு கோருகிறோம். இத்தகைய அறிஞர்கள், பண்டிதர்களின் மகாநாடுகள் கருத்துப் பரிமாற்றத்துக்காகவும் சமஸ்கிருதக் கல்வியை ஊக்குவிக்கும் திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கிலும் பல்வேறு ஊர்களில் அவ்வப்போது கூட்டப்படும்.

நவஸ-ஜா — வைத்திய சுப்பிரமணிய அய்யர்
ராஜா அண்ணாமலைபுரம் — துணைத் தலைவர்
சென்னை-28 — தென்னிந்திய சமஸ்கிருத சங்கம்
5-2-74

கடிதமும் பதிலும்

கல்கி 3–2–74 இதழில் திரு கோவி. மணிசேகரன் எழுதிய ''அன்னை பவானி'' என்ற சிறு கதை படித்தோம். அந்தக் கதை கற்பனை தான் என்றாலும் சிவாஜியின் உயர்தரமான கல்யாண குணங்களுக்கு மாசு கற்பிக்கும் வகையில் உள்ளது. முல்லா முஹம்மது என்பவனை சிவாஜியின் தளபதி ஆபாஜி மஹாதேவ் என்பவர் கைது செய்து கொணர்ந்த போது அவனுடைய மருமகள் ஷமியாவையும் சேர்த்துக் கொணர்கின்றான். அதைக் கண்டு கோபம் அடைந்த சிவாஜி, அந்தப் பெண்மணியிடம் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு பின், ''அம்மா! தாயே! என்னைப் பெற்றவள் மட்டும் உன் மாதிரி அழகாக இருந்திருந்தால், நான்கூட அழகாக இருந்திருப்பேனே என்னவோ?'' என்று கூறி வெகு கௌரவமாக அந்தப் பெண்மணியைத் திருப்பி அனுப்புகின்றார். இச்சம்பவத்தை வெளிநாட்டு சரித்திர ஆராய்ச்சியாளர்களும், ஏன், முஸ்லீம் சரித்திர ஆசிரியர்களும்கூட வரலாற்றில் பதித்துள்ளனர். அப்படியிருக்க கற்பழிக்கவும் ஒரு பெண் மீது பழி வாங்கவும் சிவாஜி நினைத்தார் என்பதே ஏற்றுக் கொள்ளத் தக்கதாய் இல்லை. இறுதியில் சிவாஜி அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்று கூறிக் கதை முடிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த எண்ணம் அவர் உள்ளத்தில் உதித்தது என்பதே அந்த மகாபுருஷனின் குண சித்திரத்துக்கு இழுக்குக் கற்பிப்பது போலிருக்கிறது.

ஆர். ராமசாமி
சென்னை–5 — வை. சங்கரநாராயணன்
வி. ஹரிஹரன்
1–2–74 — வி. பாமா
ஆர். பார்வதம்

மேற்படி கடிதத்தைக் கதாசிரியர் திரு கோவி. மணிசேகரனுக்கு அனுப்பி அவரது பதிலையும் கோரிப் பெற்றுக் கீழே பிரசுரித்திருக்கிறோம்.

''என்னைப் பெற்றவள் மட்டும் உன் மாதிரி அழகாக இருந்திருந்தால், நான்கூட அழகாக இருந்திருப்பேனே என்னவோ!'' என்ற வரிகளை நானும் படித்திருக்கிறேன். அந்தத் தளபதியிடம் ராவணனைப் பற்றியும் வாலியைப் பற்றியும்கூடச் சொல்லி அறிவுரை வழங்குகிறார். இவை யாவும் புனைந்துரைகள்.

சிவாஜியின் தாயார் அழகை ஒரு சரித்திராசிரியன் தாமரைக்கு ஒப்பாக வருணிக்கிறான். Kincaid என்பவன் சிவாஜியின் வீரம் எப்படியோ அப்படியே அழகும் கம்பீரமானது என்கிறான். முன்னுக்குப் பின் முரண்! எனவே மேலே கண்ட வசனம் ஒரு கதாநாயகனுக்குக் கற்பிக்கும் பாடப் புத்தகக் கல்யாண குணங்கள்.

பொதுவாக சிவாஜி ஒரு முரடன், கொள்ளைக்காரன் என்று எழுதிய சரித்திர நூல்களும் உண்டு. பத்தினி விரதமுள்ளவர் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. பின்னாளில் சிவாஜி இப்படிப் பல பெண்களின் கற்பைப் பாதுகாக்கும் கல்யாண குணங்களைப் பெற்றார் என்பதற்கு என் கதை ஒரு முன்னோடி என்பதாகக் கற்பனை செய்யப்பட்டது. முல்லானுவின் கப்பப் பணத்தை வழிமறித்துக் கொள்ளையடிப்பது மட்டும் கல்யாண குணமாகுமா? அதற்காக மாசு தேடாவண்ணம் நான் செய்த கற்பனையையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சிவாஜி ஒரு மாவீரர்; மக்களுக்காகப் பாடுபட்டவர். மற்றபடி ஸ்ரீராமனுக்கு ஒப்ப கல்யாணகுணங்களைப் போதித்தது, பின்னாளில் சிலர் வரிந்து எழுதிய கூற்றாகும்.

- கோவி. மணிசேகரன்

காமாக்ஷியின் கண்கள்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்.

காமாக்ஷியின் கைகளில் மன்மதனின் வில்லும் அம்பும் இருப்பதாகச் சொல்கிறோம். அவளுடைய கைகளில் மட்டுமில்லை. கண்களிலும் கூட இவையே இருக்கின்றன என்று ஆசார்யாள் 'சௌந்தரிய லஹரி'யில் மிகவும் கவித்வத்தோடு சொல்கிறார். ('ப்ருவௌ புக்நே கிஞ்சித்' என்கிற ச்லோகம்.)

என்ன சொல்கிறார்? அம்பாளுடைய புருவம் கொஞ்சம் நெரிந்திருக்கிறதாம். கவலை இருந்தால்தான் புருவம் நெரியும். லோக மாதாவுக்கு ஜனங்கள் எல்லாரும் கெட்டுப் போகிறார்களே, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற கவலை. அதனால் புருவம் வளைந்திருக்கிறது. அதைப் பார்த்தால் வில்லை வளைத்தாற்போல் இருக்கிறது. அம்பாளுடைய பரம லக்ஷணமான புருவங்கள் வில் மாதிரி இருக்கின்றன. இரண்டு வளைந்த பாகங்களைக் கொண்ட தநுசைப் போல் அவை உள்ளன. ஆனால் புருவ மத்தியில், நாசி தொடங்கும் இடத்துக்கு மேலே ரோமம் இல்லை. அப்படி இருந்தால் அது உத்தம சாமுத்திரிகா லக்ஷணம் ஆகாது. கூடின புருவம் கெடுதல் உண்டாக்கும் என்பார்கள். அப்படியானால் அம்பாளுடைய புருவங்களின் மத்தியில் தொடர்ச்சி விட்டுப் போயிருப்பது வில்லுக்கு ஊனம் செய்தாற்போல் தோன்றலாம். அப்படித் தோன்றாமல் ஆசாரியாள் ஒரு காரணம் சொல்கிறார். வில் என்று ஒன்று இருந்தால், அதை எய்கிறவன், அதன் மத்தியில் தன் முஷ்டியால் அதைப் பிடித்துக் கொண்டுதானே, நாணில் அம்பு பூட்டி இழுப்பான்? முஷ்டி பிடித்திருக்கிற இடம் வில்லின் இரண்டு பாகங்களுக்கு மத்தியில், அந்த வில்லை மறைக்கத்தானே செய்யும்? இப்படித்தான் அம்பாளின் புருவ வில்லையும் எவனோ மத்தியில் பிடித்துக் கொண்டு அம்பைப் பூட்டுகிறான். அந்த மத்திய பாகம்தான் ரோமம் இல்லாத இடைவெளியாக, உத்தம ஸ்திரீ லட்சணமாகத் தெரிகிறது.

இப்படி அம்பாளின் புருவத்தை வில்லாக வளைப்பவன் யார்? மன்மதன்தான். அவனுடைய கரும்பு வில் போலத்தான் லோக மாதாவின் கருணையால் வளைந்த புருவம் இருக்கிறது. மன்மதனுடைய வில்லுக்கு வண்டுகள்தானே நாண் கயிறு? அதற்கேற்றாற் போல் இந்தப் புருவத்துக்குக் கீழே அம்பாளுடைய வண்டு விழிகள் இப்படியும் அப்படியும் ஓடிக் கொண்டே இருக்கின்றன. சமஸ்த பக்தர்களுக்கும் அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்பதால் அவை இப்படிச் சஞ்சரித்துக் கொண்டேயிருக்கின்றன. இந்த நாணிலும், வில்லிலும் மன்மதன் தன்னுடைய சக்தியை வைத்து எய்கிறான். அதனால்தான் ஞான மூர்த்தியாயிருந்த பரமேச்வரன் அவளிடம் பிரேமை கொண்டான். அப்புறம் ஜீவப் பிரபஞ்சம் முழுவதிலும் அன்பு கொண்டான். ஆசையில்லாத பிரம்மம் அசைந்து கொடுத்துச் சகல ஜீவங்களையும் ரக்ஷித்தது. அம்பாளுடைய கவலை தீர்ந்தது.

வில்லைப் பிடித்த மன்மதனின் முஷ்டி அம்பிகையின் புருவங்களுக்கு மத்தியில் இடைவெளியாகவும், அவனுடைய மணிக்கட்டு நாண் கயிறான வண்டு விழிகளுக்கு நடுவில் நாசியின் அடிப்பாகமாகவும் ஆகிவிட்டது. இப்படி ஆசார்யாள் துதிக்கிறார்.

ஈச்வரனின் மீது காம பாணத்தைப் போடும் அந்தக் கண்களேதான் பக்தர்களைக் கடாக்ஷிக்கும்போது காமத்தைத் துவம்சம் செய்து ஞானத்தைப் பொழிகின்றன. மன்மத பாணங்கள் என்பவை என்ன? தாமரை, மல்லிகை, கருங்குவளை, மாம்பூ, அசோக புஷ்பம் ஆகியவைதான் அவனுடைய அம்புகள். ரூபம், ரஸம், சுகந்தம், ஸ்பரிசம் ஆகிய நான்கால் நம்முடைய நான்கு இந்திரியங்களை ஆகர்ஷிப்பது புஷ்பம். அதன் அழகு கண்ணுக்கும், அதில் சுரக்கிற தேனின் ரஸம் நாக்குக்கும், வாசனை மூக்குக்கும், மென்மை தொடு உணர்ச்சிக்கும் இன்பம் தருகின்றன. பாக்கி இருக்கிற இந்திரியம் காது. அதற்குத்தான் வண்டு நாண் — அது எப்போதும் ரீங்காரம் செய்வது. இந்த ஐந்துக்கும் மேலே கரும்பு வில் — அதுதான் எல்லா இந்திரிய சேஷ்டைக்கும் காரணமான மனம்.

வெறும் பூவையும், கரும்பையும், வண்டையும் வைத்துக் கொண்டு மன்மதன் சமஸ்த ஜீவராசிகளையும் இந்திரிய வியாபாரத்தில் இழுத்துத் தள்ளுகிறான் என்றால் என்ன அர்த்தம்? சாக்ஷாத் பராசக்தியின் அநுக்கிரகம் இருந்து விட்டால் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாகி விடும் என்று அர்த்தம். உலக லீலை நடப்பதற்கே தேவி அவனுக்கு இந்தச் சக்தியை அநுக்கிரகித்தாள். ஆகவே கவித்வ அழகுக்காக அவன் அவள் புருவத்தை வளைத்து அம்பு எய்வதாகச் சொன்னாலும், அவள்தான் அவனுக்கும் சக்தி தந்தவள். அவளுடைய சக்தியால்தான் அவன் நம் இந்திரியங்களை வெறித்தோடச் செய்கிறான். இதிலிருந்தே அவளுடைய கிருபை இருந்தால்தான் இந்த இந்திரியங்களை வசமாக்கி, ஓடாமல் இருக்கச் செய்ய முடியும் என்றும் ஏற்படுகிறது.

தண்டிப்பது, காப்பாற்றுவது (சிக்ஷை, ரக்ஷை) இரண்டும் செய்கிறவன்தான் பிரபு. நம் கர்மத்துக்காக நம்மை ஆட்டி வைத்து சிக்ஷிக்கிறான். காமனை அதிகாரியாகக்கொண்டு அவனுக்கு ஜயம் வாங்கித் தருகிறாள். நாம் காமஜயம் செய்யவும் அவளே கதி. அந்த ரக்ஷணையைச் செய்ய வேண்டும் என்றே லோக மாதாவான அவள், எப்போதும் தயாராகப் புருவ வில்லை வளைத்துக் கொண்டு அன்பு என்கிற பாணத்தை வீசிப் பரமேச்வரனைக் கருணையில் திருப்பிக் கொண்டிருக்கிறாள்.


ஹகோபா
எம்ப்ராய்டர்ட் துணிகள்
உங்களுக்கு
அழகை அள்ளித்
தருகிறது
சாயமிட்ட நூலில்
எம்ப்ராய்டரி
செய்யப்பட்ட
வெள்ளை ஆர்கண்டி



திக்கற்ற பார்வதி

ராஜாஜி அவர்கள் நாட்டுக்குச் செய்திருக்கும் அரும் பெரும் தொண்டுகளுள் சிறந்த தொண்டு மதுவிலக்குப் பிரசாரம். மது அரக்கனுக்கு அடிமைப்பட்ட ஏழை மக்களுக்காக அநுதாபப்பட்ட நம் ஒப்பற்ற தலைவர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மதுவிலக்குப் பிரசாரம் செய்து வந்தார். ''விமோசனம்'' என்ற பத்திரிகையின் மூலம் அவர்களுக்கு விமோசனம் அளிக்க முன்வந்தார். அப்போது அவர் எழுதிய கதை ''திக்கற்ற பார்வதி''. தமிழ்த் திரைப்படச் சம்பிரதாய நெறிகளைத் துணிந்து புறக்கணித்து விட்டு, மூலக் கதையைச் சிதைக்காமல், கூட்டாமல், குறைக்காமல் உணர்ச்சி ததும்பும் உயிரோவியமாகத் தயாரித்திருப்பது பாராட்டுக்குரியது. தம் வாழ்நாளில் பல போராட்டங்களில் வெற்றி கண்ட ராஜாஜி அவர்கள் தமது கதை சிதைக்கப்படாது திரைப் படமாவதில் வெற்றி கண்ட ஒரே தமிழ் எழுத்தாளராகவும் விளங்குகிறார்!

ராஜாஜி அவர்கள் பிறந்த தொரப்பள்ளி கிராமத்துக்கே சென்று அக்கிராமச் சூழ்நிலையிலேயே படம் பிடித்திருக்கின்றனர். மருந்துக்குக்கூட 'செட்' கிடையாது.

திக்கற்ற பார்வதி லட்சுமி. ராஜாஜி அவர்களின் மனத்திரையில் உருவான பாத்திரத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விட்டார். முக பாவங்களை ஆற்றலுடன் வெளிப்படுத்தி ரசிகர்களின் உள்ளம் உருகச் செய்கிறார் லட்சுமி. பார்வதியின் குடிகாரக் கணவனாக வருபவர் ஸ்ரீகாந்த். குடிப்பழக்கம் நல்ல மனிதர்களையும் ஆட்டிப் படைத்து விடும் என்ற கதாசிரியரின் கருத்தைப் பாராட்டத்தக்க விதத்தில் வெளிப்படுத்தி நடித்திருக்கிறார். இயற்கையான காட்சிகளையும் இயல்பான உரையாடல்களையும் அமைதியான ஆர்ப்பாட்டம் இல்லாத நடிப்பையும் பார்க்கும்போது 'அடடா, இப்படிக் கூடத் தமிழ்ப் படம் தயாரிக்க முடியுமா?' என்று அதிசயித்துப் பரவசமடைகிறோம்.

படத்தின் உரையாடல்கள் கிராமப்புறத்துப் பேச்சா யிருப்பதுபோலச் சற்று மாற்றியமைத்திருந்தால் ரசனை கூடியிருக்கும். நல்ல விதமாக வசனம் எழுதியுள்ள காரைக்குடி நாராயணன் வசனம் எழுதாமலேயே விட்ட கதைப்பகுதியும் நிரம்ப உண்டு. ஏனெனில், வசனத்தைக் குறைந்தபட்ச அளவுக்கு வைத்துக் கொண்டு முக பாவங்களாலும் காமிராவின் 'கதை சொல்லும்' ஆற்றலாலுமே படத்தை வளர்த்துள்ளார் இயக்குனர் சிங்கீதம் சீனிவாச ராவ். ரவிவர்மா என்ற பொருத்தமான பெயர் கொண்ட ஒளிப்பதிவாளர் இந்த நோக்கத்துக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வெள்ளித் திரையில் ஓர் அற்புதமான காவிய ஓவியம் தீட்டியுள்ளார். வீணை வித்வான் சிட்டி பாபுவின் வீணகானம் படத்தின் பின்னணியாக ஒலிப்பது களை ஊட்டுகிறது.

ராஷ்டிரபதி பரிசு, திரைப்படவிழாப் பரிசு என்றெல்லாம் சிறப்புப் பெறும் சில உயர்தரப் படங்கள் ரியலிஸம் என்ற பெயரில் இழுவையாகவும் அறுவையாகவும் அமைந்து விடும். ஆனால் யதார்த்த நோக்கைச் சிறிதும் விட்டுக் கொடுக்காத, பரிசுகள் பல பெறத் தகுதியுடைய இந்தப் படம் விறுவிறுப்பாகவும் அமைந்திருப்பது போற்றுதற்குரியது.

திரைப்பட விநியோகஸ்தர்கள் தைரியமாக இப்படத்தை வெளியிட முன்வர வேண்டும். சினிமா விசிறிகளும் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

— காந்தன்

இயற்கையை வெல்லும் செயற்கைச் சந்திரன்!

எட்டு மாதங்களுக்கு முன்னால் மலைக் கோட்டை உச்சிப் பிள்ளையார் கோவில் படிக் கட்டில் அமர்ந்து விண்ணும் மண்ணும் நாவலுக்குப் பிள்ளையார் சுழி போட்ட நாளி லிருந்து விண்வெளித் துறையில் இந்தியா அடைந்து வருகிற முன்னேற்றங்களைத் தும்பாவுக்கு நேரில் சென்று பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பி அந்த எண்ணமும் சமீபத்தில் நிறைவேறியது.

அப்போதுதான் அமெரிக்கா இத்துறையில் அடைந்து வரும் மகத்தான முன்னேற்றங்கள் பற்றிய செய்திகள், கட்டுரைகள், படங்கள் முதலியன இங்கு வெள்ளமாகப் பெருக் கெடுத்ததால் இந்த அம்சத்தில் நமது நாடு அடைந்துள்ள கணிசமான வளர்ச்சி ஓரளவுக்கு மறைக்கப்பட்டு விட்டது என்பது புரிந்தது. மறைக்கப்பட்டதோடு அல்லாமல் கொஞ்சம் ஏளனத்துக்குரியதாகக்கூட ஆகி விட்டது எனலாம்., அண்மையில் மத்திய அரசு தயாரித்து வெளியிட்ட டாக்குமெண்டரி திரைப் படம் ஒன்றில் தும்பா ராக்கெட் காட்டப்பட்டபோது கொட்டகையில் பலமான சிரிப்பொலி எழக் கேட்டு என் மனம் வேதனைப் பட்டது.

அமெரிக்க, ரஷ்ய முன்னேற்றங்களுடன் நமது அபிவிருத்தியை ஒப்புநோக்கிக் கேலிக் குள்ளாக்க வேண்டிய அவசியமே இல்லை. போட்டா போட்டியில் நாம் இறங்கவுமில்லை; அது சாத்தியமுமில்லை. அமெரிக்கர்களுக்கு உள்ள செல்வம், அறிஞர் படை, இதர வசதிகள் நம்மால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவுக்கு மிகுதி. அத்துடன் ருஷ்யப் போட்டா போட்டியின் விளைவினால் விண்வெளியில் துரித வெற்றி காண்பது அத்தியாவசியமாகி அரசு அங்கே பலமான ஆதரவு அளித்தது. அபரிமித செல்வத்தின் காரணமாக அமெரிக்க மக்களின் மனங்கள் விகாரமடையும் வேகத்தைத் தவிர்க்க இந்த லட்சியப் பிடிப்பை ஏற்படுத்துவது அவசியமாகியது என்ற கருத்தும் நிலவுகிறது.


ஆக, அமெரிக்கா அளவுக்கு இல்லாவிடினும் விக்ரம் ஸாராபாயின் ஆசைக் கனவு நிறைவேறும் அளவுக்காவது நாம் முன்னேறத் தான் வேண்டும். செயற்கைச் சந்திரனை உலகைச் சுற்றி வருமாறு அனுப்புவதில் நாம் வெற்றி பெறத்தான் போகிறோம். அதற்கான ஆராய்ச்சிகள், பூர்வாங்க வேலைகள் எல்லாம் துரிதமாக நடை பெற்று வருகின்றன.

நமது முதல் செயற்கைச் சந்திரனை விண்வெளிக்கு ஏந்திச் செல்லப் போகிற நாலு கட்ட ராக்கெட்டின் 'மாடல்' அமைப்பைத் தும்பாவில் நான் பார்த்தேன். பதினேழு டன் எடையும், இருபத்தோரு மீட்டர் நீளமும்கொண்டு கேரளத்தின் செழிப்பான தென்னை மரம் ஒன்று வெட்டிச் சாய்க்கப்பட்டதுபோல் காட்சியளித்த இதன் அடிவார விட்டம் ஒரு மீட்டர்.

1978ல் உலகைச் சுற்றி வரும் என எதிர்பார்க்கப் படுகிற நமது முதல் செயற்கைச் சந்திரன், விஞ்ஞான உபகரணங்களை மட்டும் கொண்டதாகத்தான் இருக்கும் என்றாலும் அதைத் தொடர்ந்து 1980க்குள் செய்தித் தொடர்புக்கு உதவும் ஒரு செயற்கைச் சந்திரனும் அனுப்பப்படும்.

இந்த இரண்டாவது ரக செயற்கைச் சந்திரன், பூமி எந்த வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொள்ளுகிறதோ, அதே வேகத்தில் பூமியைச் சுற்றி வருமாறு அனுப்பப்படும்! அதாவது ஓரிடத்தில் நிலைத்து இருக்கும் நமது நோக்கில் அந்தச் செயற்கைச் சந்திரனும் நிலையாக ஒரே இடத்தில் இருப்பதாய்க் கருதலாம். இப்படி மூன்று செயற்கைச் சந்திரன்களை உலகைச் சுற்றி வருமாறு மூன்று நிலைகளுக்கு அனுப்பிவிட்டால் பின்னர் உலகம் முழுவதுடனும் செய்தித் தொடர்பு கொள்வது மிக எளிதாகி விடும் (படம்). செய்தித் தொடர்பு என்னும் போது ரேடியோ, டெலிவிஷன், டெலிஃபோன், டெலக்ஸ் போன்ற பல வசதிகளும் அதில் அடக்கம். குக்கிராமம் முதல்





செய்தித் தொடர்புக்குப் பயன்படும் செயற்கைச் சந்திரன். ஒரே சமயத்தில் மூன்று பூமியைச் சுற்றுமாறு அனுப்பப்பட்டால் அகில உலகத்துடனும் தொடர்பு கொள்வது மிக எளிதாகும்.

குபேரப் பட்டினம் வரை நாடு முழுவதும் உள்ள அனைவரும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான டெலிவிஷன் நிகழ்ச்சியைப் பார்க்க முடியும். கிராமத்துக்கு நாலு டெலிவிஷன் என்று அமைந்து விட்டால் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, தேசிய ஒருமைப்பாடு, விவசாயம் போன்றவற்றுக்கு ஊக்கமளிப்பது எளிதாகும். இது தவிர, பிற நாடுகளில் நடக்கும் ஒலிம்பிக் பந்தயங்கள் போன்ற சர்வதேச முக்கியத்துவம் கொண்ட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் இங்கு டெலிவிஷனில் பார்த்து ரசிக்கலாம். உலகின் எந்த பாகத்துடன் வேண்டுமானாலும் டெலிஃபோனில் பேசலாம்.


செய்தித் தொடர்புக்கு மட்டுமின்றி வேறு பல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் பிரத்தியேகச் செயற்கைச் சந்திரன்களை உருவாக்கி அனுப்பலாம். வானிலை மாறுதல்களை முன்கூட்டியே அறிவிக்கும் செயற்கைச் சந்திரன், பருவ மழை தாமதிக்கும் அல்லது சில தினங்கள் முன்னதாகவே பெய்யும் என்றுகூடச் சொல்லிவிடும். இதை உறுதியாக அறிய முடியுமானால் விவசாயிகளுக்கு எவ்வளவு வசதி? அண்மைக் காலம் வரை கிழக்குப் பாகிஸ்தானாக விளங்கிய கிழக்கு வங்கத்தில் பலத்த சூறாவளி வீசப்போகிற தென்று அமெரிக்க வானிலை ஆராய்ச்சி செயற்கைச் சந்திரன் முன்னறிவிப்பாகவே எச்சரித்தது. ஆனால் அத்தனை மக்களையும் வீடு வாசலை விட்டு வெளியேற்றி, இடம் பெயர்ந்து போகச் செய்யப் போதிய அளவு வசதி பாகிஸ்தானில் இருக்கவில்லை. மக்கள் சூறாவளியில் சிக்கித்துயருறத்தான் செய்தனர். ஆனால் அடிக்கடி சூறாவளி, சண்டமாருதம் என்று வீசும் சில அமெரிக்கக் கடற்கரையோரப் பகுதி மக்களுக்கு இன்று வானிலை ஆராய்ச்சி செயற்கைச் சந்திரன் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.


பூமி சாஸ்திர ஆராய்ச்சிக்கு உதவும் செயற்கைச் சந்திரன்களும் உண்டு. ஆழப் புதையுண்டு கிடக்கும் கனிப் பொருள்கள் பற்றிய விவரங்களை இன்ஃபிரா ரெட் புகைப் படங்கள் மூலம் நிர்ணயித்துச் சுரங்கத் தொழிலுக்குப் பெரிதும் உதவலாம். கடலில் மீன் கூட்டங்கள் நடமாட்டம் பற்றி அறிந்து மீனவர்களுக்கு 'இன்ன இடத்தில் வலை வீசுங்கள், லாபமடையுங்கள்' என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இது தவிர ராணுவ ரீதியில் பயன்படக்கூடிய செயற்கைச் சந்திரன்களும் உண்டு. சக்தி வாய்ந்த லென்ஸ் உடைய காமிரா, துருப்புக்களின் நடமாட்டம், ஆயுதக் குவிப்பு நடவடிக்கைகள், ராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் முதலிய

இடே: தும்பாவில் RH 560 இரண்டு கட்ட ராக்கெட் புறப்படத் தயாராய் உள்ளது.
வலது: ராக்கெட் புறப்படுவதையும் அதிலுள்ள விஞ்ஞானக் கருவிகள் அனுப்பும் தகவல்களைச் சேகரிப்பதையும் நிர்வகிக்கும் மைய ஸ்தானம்.
இடே: ராக்கெட்டில் உள்ள பரிசோதனைக் கருவிகள் அனுப்பும் தகவல்களைக் கிரகிக்கும் டெலிமெட்ரி நிலையம் - அமெரிக்காவின் பர்க.







வற்றைச் செயற்கைச் சந்திரன் எதிரி நாட்டின் மீதாகச் செல்லும்போது படமெடுக்கிறது. பின்னர் அந்தச் செயற்கைச் சந்திரன் நட்பு நாட்டின் மீதாக வரும்போது காமிராவிலிருந்து பிலிம் சுருள் அடங்கிய குப்பி தானியங்கு முறையில் பிரிந்து செயற்கைச் சந்திரனிலிருந்து வெளியேற்றப்படுகிறது. அத்துடன் ஒரு பாராசூட் இணைக்கப்பட்டிருப்பதால் அது விரிந்துக் கொண்டு குப்பி மெதுவாகக் கீழிறங்க வழி செய்கிறது. அருகில் பறக்கும் ஒரு விமானத்திலிருந்து செயற்கைக் கரம் நீண்டு பிலிம் சுருள் குப்பியைப் பற்றி விமானத்துக்குள் கொணருகிறது. விமானத்தில் உடனுக்குடன் பிலிம் கழுவப்பட்டுப் புகைப்படங்கள் தயாராகி நிபுணர்களால் ஆராயப்படுகின்றன. விமானத்திலேயே உள்ள ராணுவத் தளபதிகள் உடனுக்குடன் முடிவெடுத்துத் தக்க எதிர் நடவடிக்கைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கிறார்கள். இதுபோன்ற ஆளில்லாத ஒற்றர்களால் ஒரு பெரிய சௌகரியம் உண்டு. ஒற்றன் பிடிபட்டால், தூக்கிலிடப்பட்டால் அவனை அனுப்பிய நாட்டுக்கு அவமானம். ருஷ்யா மீதாகப் பறந்து சென்ற அமெரிக்க யு-2 வேவு பார்க்கும் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும் ஒற்றர்கள் பிடிபட்டதும் சில ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சி. செயற்கைச் சந்திரனில் இந்தச் சங்கடமெல்லாம் இடையாது. சமீபத்தில் எகிப்து – இஸ்ரேல் யுத்தத்தின்போது அமெரிக்க வேவு பார்க்கும் செயற்கைச் சந்திரனுக்கு நிறைய வேலை இருந்தது.

'ஸெமி ஆர்பிடல் ஸ்டாடலைட்' என்பதாகவும் ஒரு செயற்கைச் சந்திரன் உண்டாம். இதனை விண்வெளிக்கு அனுப்பிப் பின்னர் எதிரி நாட்டின்மீதாகச் செல்கையில் கீழிறங்கி வரச் செய்து தாக்கலாமாம். இதில் ஆள் இருக்க மாட்டார்கள். ஆனால் அசுர ஆயுதங்கள், குண்டுகள் இருக்கும். குறிப்பிட்ட பாதையில் செயற்கைச் சந்திரனைச் செலுத்திச் செல்லுமாறு இதிலுள்ள தானியங்கு திசை மாற்றும் கருவிகளுக்கு முன்னதாகவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விடும்!

இத்தகைய பிரமிக்கத் தக்க முன்னேற்றங்களை யெல்லாம் (முன்னேற்றங்கள்தாமா எல்லாமே?) இந்தியா அடைகிற நாள் என்றோ நாம் அறியோம்; ஆயின் இன்றைக்கே கூடத் தும்பா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நமது ராணுவத்துக்குப் பெருமளவுக்கு உதவித்தான் வருகிறது. உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போம்:

யுத்த காலத்தில் நமது ஜெட் போர் விமானங்கள் புதிய புதிய, தாற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையங்களிலிருந்தோ அல்லது எதிரியின் குண்டு வீச்சுக்கு இலக்கான சேதமுற்ற விமான நிலையங்களிலிருந்தோ புறப்பட வேண்டியிருக்கும். இங்கே யெல்லாம் ரன்-வே பாதை விமானம் விரைந்தோடிச் சென்று கிளம்பப் போதிய அளவு நீளமானதாய் இராது போவதும் சகஜம். இதற்கென்று தும்பாவில் ஒரு ராக்கெட் தயாரித்திருக்கிறார்கள். இந்த ராக்கெட்டின் உதவியுடன் ஜெட் போர் விமானம், மிகக் குறைந்த நீளமேயுள்ள ரன்வேயில் மேலே கிளம்ப முடிகிறது. அதன் பின் விமானம், ராக்கெட்டைத் துறந்துவிட்டுத் தனது ஜெட் இன்ஜின்களின் உதவியால் மட்டும் தொடர்ந்து பறக்கிறது.

சில தருணங்களில் விமானம் நீண்ட தூரம் பறந்து செல்ல வேண்டியிருக்கும். அதற்குப் போதிய அளவு எரிபொருள் விமான டாங்கியில் நிரப்ப இயலாதிருக்கலாம். நடுவே இறங்கி ஏற வசதியோ, நேரமோ யுத்த காலத்தில் இல்லாதிருக்கும். இதற்காக 'ஃபைபர் கிளாஸ்' எனப்படும் பொருளால் எரிபொருள் டாங்க் தயாரித்துள்ளனர் தும்பாவிலே. கண்ணாடி நூலிழைகளும் செயற்கைப் பிசினும் கொண்டு தயாரான இந்த அண்டா . அளவினதான பாத்திரம் மிக இலேசானது. விமானத்தில் சுமை ஏறாது. வானில் பறக்கும்போதே விமானத்தின் எரிபொருள் டாங்கியில் இதிலிருந்து எரிபொருள் நிரப்பப்படுகிறது.

எதிரித் துருப்புகள் மிகுதியாக இருக்கும் பகுதிக்கு ராக்கெட்டை அனுப்பிக் குறிப்பிட்ட தூரத்தில் – உயரத்தில் அதன் முன் பகுதி திறந்து கொள்ளுமாறு செய்து, அதிலிருந்து பாராசூட் வீரர்களைக் குதிக்கப் பண்ணலாம். விமானப் பாராசூட் வீரர்களுக்கும் இவர்களுக்கும் இடையே ஒரே ஒரு வித்தியாசம். இவர்கள் பொம்மை வீரர்கள்! ஆயினும் கீழே இறங்கி வந்து பூமியைத் தாக்கும்போது பலத்த வெடிச் சத்தத்துடன் தீப்பிடிக்கவும் செய்து சேதம் விளைவிப்பார்கள். நூற்றுக்கணக்கான இத்தகைய பாராசூட் வீரர்கள் எதிரிப் படைகளைக் கலங்க அடிப்பதில் அதிசயமில்லை.

சமீபத்தில் பங்களா தேச விடுதலைப் போரின் போது தும்பாவில் தயாரான சிறிய ராக்கெட்டுகள் பல, வெடிகுண்டுகளுடன் சென்று, எதிரிகளின் டாங்குகள் போன்ற இரும்புக் கவச வாகனங்களைச் சக்தி வாய்ந்த விதத்தில் தாக்கியுள்ளன.

நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ பல துறைகளில் விஞ்ஞான வளர்ச்சி ராணுவத் தேவைகளை முன்னிட்டே ஏற்பட்டிருக்கிறது. ராக்கெட் விஞ்ஞானம் அத்தகைய ஒன்று. சீனாவில் யதேச்சையாகக் கண்டுபிடிக்கப்பட்ட ராக்கெட் தத்துவம் வாண வேடிக்கை காட்டவே தொடக்கத்தில் பயனுயிற்று என்றாலும் வெகு சீக்கிரத்தில் அவர்கள் இதன் ராணுவ ரீதியான முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டனர். 'பறக்கும் நெருப்பு அம்பு' என்று பெயரிட்டு மங்கோலியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வெற்றி கண்டார்கள். பின்னர் இந்த ராக்கெட் தத்துவம் இந்தியா வழியாகவே ஐரோப்பாவுக்குப் பரவியது. ஸ்ரீரங்கப்பட்டினத்தில் ஹைதர் அலி, ஒன்றரையும் பன்னிரண்டு பவுண்டு எடையுள்ள, இரும்பினாலான புறக்கூடு கொண்ட, அரை மைல் தூரம் பறக்கக் கூடிய ராக்கெட்டுகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் தளபதிகளைத் திகைக்க வைத்துத் திணற அடித்தான். ஹைதர் அலியிடம் 1200 ராக்கெட் படை வீரர்கள் இருந்தனர். அவன் மகன் திப்பு சுல்தான் இவர்களின் எண்ணிக்கையை 5000 ஆக உயர்த்திக் கொண்டான்.


VOLTAS



காஸ்மோபாலிடன்
அதிநவீன
1.5 டன் ரூம் ஏர்கண்டிஷனர்

மிகச் சிறந்த குளுமை தருவதோடு
இந்த வகையிலேயே மிகச் சிறந்த
செயலாற்றும் காஸ்மோபாலிடன்...
இதன் இதர தன்னிகரற்ற
சிறப்பம்சங்கள் இதோ :

- அதிக தூரம் குளுமையூட்டும்.
- மிகப் பரந்த இடத்திற்கு குளுமையூட்டும். தானே திறந்து கொள்ளும் 'ஃப்ளிப்-டாப்', அதிவிரைவில் சீரான குளுமை பரப்ப உதவும்.
- 'தொட்டவுடன் இயங்கும்'— அத்தனை வேகம்.
- 1.5 டன் முழுமையான குளுமை, ஆயின் மின்சக்திச் செலவோ சிக்கனம்.



வோல்டாஸ் லிமிடெட்,
116, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

உங்கள் வட்டாரத்திலுள்ள எங்கள் அங்கீகாரம்
பெற்ற வியாபாரிகளை அணுகுக அல்லது அருகி
லுள்ள வோல்டாஸ் அலுவலகத்தை நாடுக.


Carrier
காஸ்மோபாலிடன்
1.5 டன்
ரூம் ஏர்கண்டிஷனர்

வழங்குவோர் வோல்டாஸ்:
குளுமை தருவதையே
குறிக்கோளாய்க் கொண்டவர்கள்

CMVAC-60-182-TAM


பவுடரினால் துலக்கிய
பாத்திரத்தின் மீது பொடிக் கசடு
பின்தங்கியிருக்கிறதா?
மாசில்லாத பளபளப்பை
வீசிட வைப்பது
விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!
Vim

மோசடியில் புலி !



பம்பாய் மிருகக் காட்சிச்சாலையில் ஐந்து புலிகள் இறந்து விட்டன. ஆனால் அவற்றின் தோல் விற்ற விலை கணக்கில் வரவு வைக்கப்படவில்லை! ஒரு புலியின் தோல் குறைந்தது ஆயிரம் ரூபாய் பெறும் !

டைம்ஸ் ஆப் இந்தியா - பாலி

ராக்கெட் விஞ்ஞானம் உலகின் பல நாடுகளில் படிப்படியாக வளர்ச்சியுற்று வந்த தென்றாலும் அதன் அசுரத் தன்மைகளை மேன் மேலும் வளர்த்து யுத்த நோக்கில் பயன் படுத்திக் கொள்ளுகிற கொடிய எண்ணம் ஹிட்லருக்குத்தான் தோன்றியது. ராக்கெட் விஞ்ஞானிகளை ஒன்றுசேர்த்து, ரகசியமான இடத்தில் சிறை வைத்து, ராக்கெட்டுகளை யுத்த நோக்கில் அபிவிருத்தி செய்யுமாறு பலவந்தப்படுத்தினான். இந்த ஜெர்மானிய விஞ்ஞானிகளில் ஒருவர்தான் பின்னால் அமெரிக்கா சென்று விண்வெளித் துறை அதிசயிக்கத் தக்க விதத்தில் வளர்ச்சியுற உதவிய வெர்னர் வான் ப்ரான். ஹிட்லரின் ரகசியத் திட்டம், வி--1 பறக்கும் குண்டுகளும், வி--2 ராக்கெட்டுகளும் லண்டன் மீது விழுந்த போதுதான் உலகுக்குத் தெரிய வந்தது. மிகக் குறுகிய கால அளவில் ஜெர்மானியர் ராக்கெட் விஞ்ஞானத்தில் நம்பமுடியாத அளவு முன்னேறி லண்டனை நோக்கி மட்டும் 8070 வி--1 பறக்கும் குண்டுகளையும் 1300 வி--2 ராக்கெட்டுகளையும் அனுப்பினர்!

விண்வெளித் துறையின் வளர்ச்சி போர்க் காலத்திலும் உதவும், ஆக்க ரீதியில் மக்கள் முன்னேற்றத்துக்கும் பயன்படும் என்ற இரட்டை லாபம் கருதித்தான் இந்திய அரசு பட்ஜெட்டில் மற்ற எந்த அம்சத்துக்கு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தாலும் விண்வெளி ஆராய்ச்சிக்குத் தொடர்ந்து முழு ஆதரவு அளித்து வருகிறது. ஆண்டொன்றுக்கு எட்டு கோடி ரூபாய் நம் வரிப் பணம் தும்பாவில் செலவிடப்படுகிறது. விண்வெளித் துறைக்கு மொத்தமாகச் செலவாகும் தொகை இதைப் போல் இரு மடங்கு இருக்கும். எப்படி யெனில் தும்பாவைத் தவிர பெங்களூர், ஆமதாபாத், சென்னையிலிருந்து சுமார் எழுபது மைல் தொலைவில் சூளூர்பேட்டை அருகே உள்ள ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் தளம் ஆகியவற்றிலும் ஆராய்ச்சிகளும், ஆக்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பெங்களூரில் செயற்கைச்சந்திரனை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றால் ஆமதாபாத்தில் செய்தித் தொடர்புக்கான நமது செயற்கைச் சந்திரனை அனுப்பிய பிறகு அதனை எந்த விதமாகவெல்லாம் பயன்படுத்தலாம் எனத் திட்டங்கள் வகுத்துப் பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார்கள். ஸ்ரீஹரிகோட்டாவை நமது முதல் செயற்கைச் சந்திரனை அனுப்புவதற்கான ராக்கெட் தளமாகத் தேர்ந்தெடுக்க முக்கிய காரணம் அது கிழக்குக் கடற்கரையோரமாக அமைந்திருப்பதுதான். பூமியின் சுழற்சிக்கு ஏற்ப அதே திக்கில் ராக்கெட்டை அனுப்புவதுதான் அனுகூலம். பூமியின் சுழற்சி வேகத்தையும் செயற்கைச் சந்திரனின் விண்ணை நோக்கிய பயணத்துக்குப் பயன்படுத்திக் கொண்டதாக ஆகும். மேற்கு நோக்கி ராக்கெட்டைச் செலுத்தினால் பூமியின் சுழற்சி வேகத்தை எதிர்த்துச் செயல்படுவதாக ஆகும். பூமி சுழலும் திசையிலேயேதான் செயற்கைச் சந்திரனும் உலகைச் சுற்றிவர வேண்டும். மேலும் தும்பா அருகே திருவனந்தபுரம் இருப்பதால் ஜனநெரிசல் மிகுதி. கப்பல் போக்குவரத்து அதிகம். நாலு கட்ட பெரிய ராக்கெட்டுகளை அனுப்பும்போது ஆபத்துக்களைக் குறைக்கக் கருதியும் ஸ்ரீஹரிகோட்டா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. ராக்கெட் பயணப்படும் திசையில் அதனை வரவேற்காத நாடுகள் ஏதும் இல்லாதவாறு பாதை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு இவ்வாறு நான்கு இடங்களில் ஒரே சமயத்தில் விண்வெளித் துறையின் பல்வேறு அம்சங்கள் செயல்பட ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகையில் பிரதான கேந்திரமாகிய தும்பாவிலே ஊழியர்களிடையே வேலைநிறுத்தப் போக்கும், 'வடநாட்டினர் வேண்டாம்' மனப்பான்மையும் வளர்ந்து வருவது மிகுந்த மனவருத்தமும் கவலையும் அளிப்பதாய் இருக்கிறது.

''குப்தாவும் அப்துல் கலாமும் ஆராவமுதனும் ரோஸாரியோவும் மேனனுடன் இணைந்து பணியாற்றுகிற ஓரிடத்தில் 'இந்தியன்' என்ற எண்ணம் போய் 'மலையாளி' என்றும் 'அன்னியன்' என்றும் நினைக்கும் மனப்பான்மை ஏன், எப்படித் தோன்றியது? விஞ்ஞானிகளுக்கிடையில், நாட்டின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்கும் உதவும் ஒரு முக்கியத் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் இவ்விதம் நினைக்கவும் கூடுமா? எல்லையற்ற விண்வெளி எங்கே? இந்தக் குறுகிய பிரதேசப் பித்து எங்கே?'' என்றால் ''அதுதான் பரிதாபத்துக்குரிய இந்திய அரசியல்'' என்பதே பதில்.

''வடக்குத் தெற்கு கிடக்கட்டும்; இங்கேயே ரயில்வே லைனுக்கு மேற்கே உள்ளவர்கள் கிழக்கே உள்ள இந்த நிறுவனத்தில் பணியாற்ற வரக் கூடாது என்று கொடி பிடித்துக் கூக்குரல் எழுப்பத் தயாராயிருக்கிறார்களே!'' என்று விசனித்தார் ஒரு பொறி இயல் நிபுணர்.

வேண்டுமென்றே தெரிந்தோ, அல்லது அறியாமையினாலோ இதுபோன்ற ஆபத்தான அரசியலில் ஈடுபடுகிறவர்களை ராக்கெட்டில் ஏற்றி விண்வெளிக்கு அனுப்பி விட்டாலென்ன என்று தோன்றுகிறதல்லவா?

— **கி. ராஜேந்திரன்**

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

பதின்மூன்றும் அத்தியாயம்

சத்ருக்னன் வரலாறு

பாபாக்கினி நதிக் கரையில் பல்லவ சைனியத்தின் பாசறையில் ரிஷபக் கொடி கம்பீரமாகப் பறந்த கூடாரத்தின் உள்ளே மகேந்திர சக்கரவர்த்தி வீற்றிருந்தார். அவருக்கு எதிரே சக்கரவர்த்தியின் அந்தரங்க ஒற்றனாகிய சத்ருக்னன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் வெகுதூரம் பிரயாணம் செய்து வந்தவனாகக் காணப்பட்டான். உடம்பெல்லாம் சொட்டச் சொட்ட வியர்த்திருந்தது. எட்டு மாதங்களுக்கு முன்னால் அவனைப் பார்த்ததற்கு இப்போது அடையாளங்கூடக் கண்டுபிடிக்க முடியாதபடி அவனுடைய உருவம் மாறிப்போயிருந்தது.

சக்கரவர்த்தி, சத்ருக்னனை உற்றுப் பார்த்துவிட்டு, ''யார், சத்ருக்னனா?'' என்றுகேட்டார்.

''அடியேன்தான், பல்லவேந்திரா!''

''ரொம்பவும் உருவம் மாறிப் போயிருக்கிறாய்.''

''ஆமாம், பிரபு! சக்கரவர்த்தியின் சேவையில் எவ்வளவு கஷ்டங்களை அநுபவித்தாலும் என் தேகம் புஷ்டியடைகிறது!''

''இல்லை; மெலிந்திருக்கிறாய் என்று சொன்னேன். எட்டு மாதங்களுக்கு முன்பு உன்னிடம் ஏதோ முக்கியமான காரியத்தை ஒப்படைத்ததாக ஞாபகம். என்ன காரியம் என்று நினைவிருக்கிறதா?'' என்று மகேந்திரர்கேட்டார்.

சத்ருக்னன், ''நன்றாக நினைவிருக்கிறது, பிரபு! வேறுநினைவே எனக்குக் கிடையாது!'' என்றான்.

''மறந்தது நான்தான்; கொஞ்சம் ஞாபகப் படுத்து.



பார்க்கலாம்?'' என்றார் சக்கரவர்த்தி.

''பிக்ஷுவைப் பின்தொடரச் சொன்னீர்கள்.''

'' ஓஹோ ! அப்புறம் !''

'' ஆயனரைக் கவனிப்பதற்கு ஆள் போடச் சொன்னீர்கள்.''

''அவ்வளவுதானா?''

''இன்னும் ஒரு கடினமான வேலையும் கொடுத்தீர்கள், பிரபு! குமார சக்கரவர்த்தியின் போக்குவரவுகளைக் கவனித்து வரும்படி கட்டளையிட்டீர்கள்!''

''ஆம்! ஆம்! ஞாபகம் வருகிறது.''

'' ஏதேனும் முக்கியமான தகவல் கிடைத்தால் நம்பிக்கையான ஆள் மூலம் செய்தி அனுப்பச் சொன்னீர்கள். மிக முக்கியமான செய்தியாயிருந்தால் என்னையே நேரில் வரச்சொன்னீர்கள்.''

''அப்படியானால், மிக முக்கியமான செய்தி இப்போது கொண்டு வந்திருக்கிறாய் போலிருக்கிறது.''

''ஆம், பல்லவேந்திரா! வேறு யாரிடமும் அனுப்ப முடியாத செய்தி; அதனால் தான் நானே வந்தேன்.''

'' ஒவ்வொன்றாகச் சொல், பார்க்கலாம் !''

சத்ருக்னன் நாகநந்தியைத் தான் பின்தொடர்ந்தது பற்றி முதலில் சொன்னான். அந்த வரலாறு பின்வருமாறு :

நாகநந்தி பரஞ்சோதியிடம் ஓலை கொடுத்து அவனை நாகார்ஜுன மலைக்குப் போகும்படி அனுப்பிய பிற்பாடு, தெற்கே கிளம்பிப் போனார். சத்ருக்னனும் அவரைப் பின்தொடர்ந்து போனான். கெடில நதிக் கரையில் அடர்ந்த காடும் சிறிய குன்றுகளும் சூழ்ந்த ஓர் இடத்தில் கட்டியிருந்த புத்த விஹாரத்தை அடைந்து சில தினங்கள் தங்கினார். அங்கேயிருந்த புத்த பிக்ஷுக்கள் சிலருக்கு ஏதேதோ செய்தி சொல்லி நாற்புறமும் அனுப்பினார். அவர்களில் ஒருவர் உறையூருக்கும் இன்னொருவர் கங்க ராஜ்யத்தின் தலைநகரான தலைக்காட்டுக்கும் சென்றதாகத் தெரிந்தது.

பிறகு, நாகநந்தி மறுபடியும் தெற்கு நோக்கிப் பிரயாணமானார். கொள்ளிடத்தையும் காவேரியையும் கடந்து நாகைப்பட்டினம் சென்றார். அங்கேயிருந்து மதுரைக்குப் பிரயாணமானார். மதுரைக்கு நாகநந்தியும் சத்ருக்னனும் போன சமயம் மாறவர்ம பாண்டியன் கடும் நோய்வாய்ப்பட்டு 'இன்றைக்கோ நாளைக்கோ' என்றிருந்தான். அடுத்தபடி பட்டத்துக்கு வரவேண்டிய இளம் பாண்டியனுடைய கட்டளையினால் அயலூர்க்காரர் எல்லாரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். நாகநந்தியும் சத்ருக்னனும் ஒரே சிறையில் இருக்கும்படி நேர்ந்தது. அங்கே பிக்ஷுவுடன் சிநேகம் செய்துகொண்டான். இவர்கள் சிறையில் இருக்கும்போதே மாறவர்மன் காலமாகி, சடையவர்மன் சிம்மாசனம் ஏறினான். பின்னர், இவர்களுக்கு விடுதலை கிடைத்தது. நாகநந்தி புதிய பாண்டியனைச் சந்தித்தார். அவர்களுக்குள் பல தினங்கள் பேச்சு வார்த்தை நடந்தது. இதற்கிடையில் மாமல்லருக்குப் பெண் கொடுக்கும் விஷயமாகக் காஞ்சிக்குப் போன தூதர்கள் திரும்பி வந்தார்கள். மறுபடியும் சில நாட்கள் நாகநந்திக்கும் சடையவர்மனுக்கும் சம்பாஷணை நடந்த பிறகு, பாண்டியன் நாடெங்கும் படை திரட்டும்படி கட்டளை பிறப்பித்தான்.

நாகநந்தி பிறகு மதுரையிலிருந்து கிளம்பி வடக்கு நோக்கிப் பிரயாணமானார். சத்ருக்னனும் அவரோடு புறப்பட்டான். வழியெல்லாம் புத்தபிக்ஷு பெரும் சிந்தனையில் ஆழ்ந்தவராய்க் காணப்பட்டார். காவேரியையும் கொள்ளிடத்தையும் தாண்டி அவர்கள் கெடில நதிக் கரையில் இருந்த புத்த விஹாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள்ளாகச் சத்ருக்னனுக்குப் புத்த பிக்ஷு தன்னை ஒற்றன் என்று தெரிந்து கொண்டிருக்கிறார் என்ற சந்தேகம் உண்டாகியிருந்தது. அச்சமயம் அந்தப் புத்தவிஹாரத்தில் ஏற்கனவே காஞ்சி இராஜவிஹாரத்தில் இருந்த இளம் பிக்ஷு இருந்தான். அந்த இளம் பிக்ஷு சத்ருக்னனை வெறித்து வெறித்துப் பார்த்ததிலிருந்து சத்ருக்னனுடைய சந்தேகம் உறுதிப்பட்டது. எனவே, அன்று இளம் பிக்ஷு சத்ருக்னனுக்கு அளித்த உணவை அவன் உடனே சாப்பிடாமல் நதியின் வெள்ளத்தில் கொஞ்சம் போட்டுப் பார்த்தான். அதைச் சாப்பிட்ட மீன்கள் உடனே நீல நிறமாக மாறிச் செத்துத் தண்ணீரில் மிதந்ததைக் கண்டான். அன்று இரவு நாகநந்திக்கும் இளம் பிக்ஷுவுக்கும் தெரியாதபடி அந்தப் புத்த விஹாரத்தையும் அதை அடுத்திருந்த குன்றுகளையும் சுற்றிப் பார்த்தான். குன்றுகளில் குடைந்திருந்த இரகசியக் குகைகளுக்குள் பல வகைப் போர்க் கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். குன்றுகளைச் சுற்றி வந்தபோது ஓர் இடத்தில் கேட்டவுடனே இருதயம் நின்று போகும்படி



யான அவ்வளவு பயங்கரமான சீறல் சத்தத்தைக் கேட்டான். ஆயிரம் நாக சர்ப்பங்கள் சீறுவது போன்ற அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க அவன் ஆன மட்டும் முயன்றும் முடியவில்லை.

மறு நாள் உதயத்தில் புத்தபிக்ஷு அந்த இரகசிய புத்தவிஹாரத்திலிருந்து புறப்பட்டு, சமுத்திரம் போல் அலை மோதிக் கொண்டிருந்த திருப்பாற்கடல் என்னும் ஏரிக் கரை வழியாக வடக்கு நோக்கிச் சென்றார். அவர் அறியாத படி அவரைப் பின்தொடர்ந்து சத்ருக்னனும் சென்றான். கடைசியில், ஆயனரின் அரண்ய வீட்டை நாகநந்தி அடிகள் அடைந்தார்.

நான் இல்லாதபோது ஆயனரைக் கவனித்துக் கொள்ளுவதற்காகக் குண்டோதரன் என்பவனைச் சத்ருக்னன் விட்டு விட்டுப் போயிருந்தான். அவன் ஆயனரிடம் சிற்பக் கலையும் சித்



திரக் கலையும் கற்கும் சீடனாக அமர்ந்து ஆயனர் வீட்டிலே இருந்து வந்தான். குண்டோதரன் விசேஷமாகச் செய்தி ஒன்றும் சொல்லவில்லை. சாரதி கண்ணபிரானும் அவன் மனைவி கமலியும் சில முறை அங்கு வந்துவிட்டுப் போனதாக மட்டும் தெரிவித்தான்.

காஞ்சியில் நரசிம்மவர்மரின் போக்கு வரவுகளைக் கவனித்து வரும்படி, கண்ணபிரானுடைய தந்தையைச் சத்ருக்னன் ஏற்படுத்தியிருந்தான். நரசிம்மவர்மர் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பரிபூரணமாக நிறைவேற்றி வைத்ததாகத் தெரிய வந்தது. சென்ற எட்டு மாதங்களில் காஞ்சியை விட்டு மாமல்லர் வெளியே போகவேயில்லை. காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்வதிலேயே பெரும்பாலும் காலத்தைக் கழித்து வந்தார் என்று தெரிந்தது.

மேற்கூறியவிதம் சத்ருக்னன் தான் அறிந்து வந்த வரலாற்றையெல்லாம் கூறி முடித்தபிறகு, சக்கரவர்த்தி, "சத்ருக்னா! என்னுடைய கட்டளையை மிக நன்றாக நிறைவேற்றியிருக்கிறாய். செய்தி இவ்வளவுதானா? உன் முகத்தைப் பார்த்தால், இன்னும் ஏதோ முக்கிய சமாசாரம் இருப்பது போல் தோன்றுகிறதே!" என்று கூறினார்.

"ஆம், பிரபு! சில ஓலைகள் கிடைத்தன. அவற்றைத் தங்களைத் தவிர யாரும் பார்க்கக் கூடாதென்று நேரில் கொண்டு வந்தேன்."

"ஓலையா? என்ன ஓலை?" என்று சக்கரவர்த்தி வியப்புடன் கேட்டுக் கொண்டே கரத்தை நீட்டினார்.

"பல்லவேந்திரா! ஒருவேளை நான் செய்தது குற்றமாயிருந்தால் மன்னிக்க வேண்டும்......."

சக்கரவர்த்தி துள்ளி எழுந்து, "முட்டாளே! துர்விநீதனுக்குப் புலிகேசி அனுப்பிய ஓலையைத் தடுத்து நிறுத்திவிட்டாயா?" என்று கோப கர்ஜனை செய்தார்.

"இல்லை, பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும். நான் சொல்லும் ஓலை யுத்தத்தைப் பற்றியதே அல்ல!"

"நல்லவேளை! எங்கே அப்படி ஏதாவது அசட்டுத்தனமாய்க் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்துவிட்டாயோ என்று பயந்து போனேன். பின்னே, எந்த ஓலையைச் சொல்லுகிறாய்?"

"பல்லவேந்திரா! நான் கொண்டு வந்திருப்பது காதல் ஓலை!"

'ஆ!' என்ற வியப்பொலியுடன் சக்கரவர்த்தி தமது பீடத்தில் அமர்ந்தார். அவருடைய புருவங்கள் நெரிந்தன; நெற்றியில் சுருக்கங்கள் காணப்பட்டன.

"எங்கே? எடு, ஓலையைப் பார்க்கலாம்!" என்றார்.

சத்ருக்னன் தலையிலிருந்த முண்டாசை எடுத்தான். அதற்குள்ளேயிருந்த ஓலைச் சுருள்கள் எட்டையும் எடுத்துத் தயக்கத்துடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான்.

மகேந்திரர் ஓலைகளை வாங்கிக் கொண்டார். சற்று நேரம் ஓலைகளைக் கையிலே வைத்துக் கொண்டு சிந்தனை செய்தார்.

பிறகு, "சத்ருக்னா! இராஜ்யம் ஆளுவதைப் போல் கொடுமையான காரியம் வேறொன்றும் இல்லை. இராஜ்

எங்கும் எப்போதும்....
ஹாமர் மாஸ்டர்.



சுறுசுறுப்பாக இயங்க சூடான தேநீர் உங்களுக்குத் தேவையா? அல்லது இதம் தரும் குளிர்ந்த காப்பி வேண்டுமா? உங்களுடைய ஹாமர் மாஸ்டரை உபயோகியுங்கள். உஷ்ணத்தை நன்கு இருத்தி வைத்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு ஹாமர் மாஸ்டர் ரீபில்லும் 'டெம்பரேச்சர் டெஸ்ட்' செய்யப்படுகிறது.

பல அழகான டிஸைன்களில் உள்ள ஹாமர் மாஸ்டர் மாடல்களிலிருந்து உங்களுக்குப் பிடித்ததை தெரிந்து எடுங்கள்....250 மி.லி.யிலிருந்து 2750 மி.லி. வரையான அளவுகளில் கிடைக்கும். உறுதியான, திடமான உங்கள் ஹாமர் மாஸ்டர் பல ஆண்டுகளுக்கு உழைக்கும்.

நினைவிருக்கட்டும், ஹாமர் மாஸ்டர் நல்ல பரிசுப் பொருளும் ஆகும்.... ஊழியர்களுக்கும், கஸ்டமர்களுக்கும், நண்பர்களுக்கும் அதை பரிசாக வழங்கலாம்.

நல்ல ஃப்ளாஸ்க் வேண்டுமெனக் கேளுங்கள். கிடைக்கும்

ஹேமர்மாஸ்டர்

HVG-21/73 TM



அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்னைப்போல
மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி
அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில்
ஆழ்த்தும் அருமையான புது நறுமணம்
கொண்டது. அதுவே வெய்ல் ஆஃப் லவ்.
ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத்
தாராளமாக மேனியெங்கும் தூவிக்
கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே
பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம்
நீண்ட நேரம் உங்களைத் தழுவி,
உங்களைச் சுற்றிலும் கமகமவென
வீசிக் கொண்டிருக்கும். வெய்ல்
ஆஃப் லவ் உங்களை அலங்கரிக்-
கட்டும். ஹேலோ மட்டுமே
அளிக்கும் வாசமுள்ள
அன்புத்திரை அது.
ஹேலோ வெய்ல் ஆஃப்
லவ் டால்க் வாசமுள்ள
அன்புத்திரை...
அன்னைப் போல
மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வெய்ல் ஆஃப் லவ்
டால்க்
NEW
Halo

HT.G.I.TH (R)

யத்தின் நன்மைக்காக நான் இந்த நீசத்தனமான காரியத்தைச் செய்யவேண்டியிருக்கிறது! மாமல்லனுடைய குழந்தை உள்ளத்தைக் கீறிப் பார்க்கும் பயங்கரமான பாவத்தைச் செய்யப் போகிறேன்'' என்றார்.

பதினான்காம் அத்தியாயம்

மகேந்திரர் தவறு

சத்ருக்னன் கொடுத்த ஓலைகளைப் படித்து வந்தபோது மகேந்திரருக்கு அடிக்கடி கைகள் நடுங்கின. முதலிலே இரண்டு மூன்று ஓலைகளைச் சற்றுச் சாவகாசமாகப் படித்தார். மற்றவைகளையெல்லாம் விரைவாகப் பார்த்து முடித்தார்.


கடைசியில், சத்ருக்னனைப் பார்த்து, ''சத்ருக்னா! இந்த ஓலைகளை நீ கொண்டு வந்திருக்கக் கூடாது; என்னிடம் கொடுத்திருக்கவே கூடாது!'' என்று சோகக் குரலில் கூறினார்.

''பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும்!'' என்றான் சத்ருக்னன்.

''உன் பேரில் குற்றம் ஒன்றுமில்லை, சத்ருக்னா! மன்னிப்புக் கேட்பதற்குரிய காரியம் எதுவும் நீ செய்யவில்லை. உன்னுடைய கடமையையே நீ செய்தாய். என் மனத்துக்கு அது எவ்வளவு வேதனை தரும் காரியம் என்பது உனக்கு எப்படித் தெரியும்? அரண்மனைத் தோட்டத்திலே ஓர் அழகான பூஞ்செடி முளைத்தது; அரண்யத்தின் நடுவிலே ஒரு மனோகரமான மலர்க்கொடி தழைத்தது. இரண்டும் இளந்தளிர்கள் விட்டு வளர்ந்தன. பருவ காலத்தில் அரும்பு விட்டுப் பூத்துக் குலுங்கின. அந்தப் பூஞ்செடியையும் மலர்க்கொடியையும் வேரோடு பிடுங்கி நெருப்பிலே போட்டுப் பொசுக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது, சத்ருக்னா! அது எவ்வளவு குரூரமான பொறுப்பு என்பதை நீ கொண்டுவந்த இந்த ஓலைகளிலிருந்து நன்றாக அறிகிறேன்.......''

மகேந்திர பல்லவர் பெருமூச்சுவிட்டு, ''சத்ருக்னா! மாமல்லனின் கோமள இருதயத்தை நான் எவ்வளவு தூரம் புண்படுத்தி யிருக்கிறேன், தெரியுமா? எவ்வளவு தூரம் அவன் மன உறுதியைச் சோதித்திருக்கிறேன், தெரியுமா? இதைக் கேள்'' என்று கூறி ஓலையிலிருந்து பின்வரும் பகுதியை வாசித்தார்:

''என் ஆருயிரே! உன்னை வந்து பார்ப்பதற்கு என் உயிர், உடல், ஆவி அனைத்தும் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் காஞ்சிக் கோட்டையைப் போல் நூறு மடங்கு கட்டும் காவலும் உள்ள கோட்டைக்குள்ளே என்னை வைத்திருந்தாலும் எல்லாக் கட்டுக் காவலையும் மீறிக் கொண்டு உன்னிடம் நான் பறந்து வந்து விடுவேன். கடல்களுக்கு நடுவில் உள்ள தீவில் இராவணன் சீதையைச் சிறை வைத்தது போல் உன்னை யாராவது வைத்திருந்தால் அங்கேயும் உன்னைத் தேடி வந்தடைவேன். சொர்க்க லோகத்திலே இந்திரனும், பாதாள லோகத்திலே விருத்திராசுரனும் உன்னைச் சிறைப்படுத்தியிருந்தாலும், நான் உன்னை வந்து அடைவதைத் தடைப்படுத்தமுடியாது. ஆனால், இதையெல்லாம் காட்டிலும் பெரிதான தடை வந்து குறுக்கிட்டிருக்கிறது. அது என் தந்தையின் கட்டளைதான். தாம் அநுமதி அளிக்கும் வரையில் காஞ்சிக் கோட்டையை



விட்டு வெளியே போகக் கூடாதென்று மகேந்திர பல்லவர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். சிவகாமி! இந்த உலகத்தில் என்னால் செய்ய முடியாத காரியம் ஒன்று உண்டு என்றால், அது என் தந்தையின் கட்டளையை மீறுவது தான். நெற்றிக் கண் படைத்த சிவபெருமான் என் முன்னால் பிரத்தியட்சமாகி, மகேந்திர பல்லவரின் கட்டளைக்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால், ஒருநாளும் நான் அதைச் செய்ய மாட்டேன். அவ்வளவு தூரம் என் பக்திக்கு உரியவரான என் தந்தை இப்போது என்னை எப்பேர்ப்பட்ட கொடுமைக்கு ஆளாக்கிவிட்டார் தெரியுமா? என்னுடைய உயிரைக் காட்டிலும் எனக்குப் பிரியமான காதலிகள் இருவரையும் நான் சந்திக்க முடியாதபடி செய்துவிட்டார். அந்த இரண்டு காதலிகளில் ஒருத்தி ஆயனச் சிற்பி

யின் மகள் சிவகாமி. அவளை அரண்ய மத்தியிலுள்ள தாமரைக் குளக்கரையில் நான் ஏகாந்தமாகச் சந்திக்க விரும்புகிறேன். இன்னொரு காதலி யார் தெரியுமா? அவள் பெயரை உனக்குச் சொல்லட்டுமா? சொன்னால் நீ அசூயை அடையாமல் இருப்பாயா? அவள் பெயர் ஜயலக்ஷ்மி. அந்தக் காதலியை நான் இரத்த வெள்ளம் ஓடும் யுத்த களத்தின் மத்தியில் சந்திக்க ஆசைப்படுகிறேன். சந்தித்து அவள் என் கழுத்தில் சூடும் வெற்றி மாலையுடனே திரும்பி வந்து உன்னைப் பார்க்க விரும்புகிறேன்!''

மகேந்திரர் இவ்விதம் வாசித்து வந்தபோது, சத்ருக்னன் தலை குனிந்து பூமியைப் பார்த்தவண்ணம் நின்றான்.

"கேட்டாயா, சத்ருக்னா! இப்பேர்ப்பட்ட புதல்வனைப் பெறுவதற்கு நான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க



வேண்டும்? ராமனைப் பெற்ற தசரதரை விட நான் பாக்கியசாலி அல்லவா? இராமன் அப்படி என்ன தியாகம் செய்து விட்டான்? இராஜ்யத்தைத் துறந்து சீதையோடும் லக்ஷ்மணனோடும் வனத்துக்குச் சென்றான். இராஜ்யம் ஆளுவதைக் காட்டிலும் வனத்தின் உல்லாச வாழ்க்கையை இராமன் விரும்பியதில் வியப்பு என்ன? ஆனால், தந்தையின் வாக்கைப் பரிபாலனம் செய்யும் பொருட்டு வனத்துக்குப் போவதைக் காட்டிலும் போர்க்களத்துக்குப் போகாமலிருக்க நூறு மடங்கு மன உறுதி வேண்டும். பரிசுத்தமான இளம் உள்ளத்திலே முதன் முதலாகக் காதலித்த பெண்ணைப் பார்க்கப் போகாமலே இருப்பதற்கு அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு திடசித்தம் வேண்டும். இத்தகைய கடும் சோதனையில் நரசிம்மன் தேறியிருக்கிறான் என்பதை நினைக்கும் போது, என் உள்ளம் பூரிக்கிறது. ஆனால், சோதனையை ஏற்படுத்திய நானே படுதோல்வி அடைந்தேன். நரசிம்மனையும் சிவகாமியையும் பிரித்து வைத்திருந்தால், அவர்கள் ஒருவரையொருவர் பார்க்காமல் இருந்தால், சிவகாமியின் காதல் வலையிலிருந்து நரசிம்மன் மீண்டுவிடுவான் என்று நினைத்தேன். காதலை நெருப்பு என்று கூறுவது முற்றும் பொருத்தமானது, சத்ருக்னா! நெருப்பு சொற்பமாயிருந்தால், காற்று அடித்ததும் அணைந்து விடுகிறது. பெரு நெருப்பாயிருந்தால், காற்று அடிக்க அடிக்க நெருப்பின் ஜ்வாலை அதிகமாகிக் கொழுந்து விட்டு எரிகிறது. நெருப்புக்குக் காற்று எப்படியோ அப்படிக் காதலுக்குப் பிரிவு என்று தோன்றுகிறது. பொய்க் காதலாயிருந்தால், பிரிவினால் அது அழிந்து விடுகிறது. உண்மைக் காதலாயிருந்தாலோ, பிரிவினால் அது நாளுக்கு நாள் வளர்ந்து நெருப்பாய் மூளுகிறது! நரசிம்மன் விஷயத்தில் அப்படித்தான் நடந்து விட்டது. நான் எவ்வளவோ யோசனை செய்து போட்ட திட்டங்களையெல்லாம் காமதேவன் தன்னுடைய மெல்லிய பூங்கணை ஒன்றினால் காற்றில் பறக்கச் செய்துவிடுவான் போலிருக்கிறது, சத்ருக்னா! வாதாபி சக்கரவர்த்தியிடம் தோற்றாலும் தோற்கலாம். கேவலம் மன்மதனுடைய மலர்க் கணைக்கா மகேந்திர பல்லவன் தோற்றுவிடுவது? ஒருநாளும் இல்லை!'' என்று கூறி மகேந்திர சக்கரவர்த்தி மீண்டும் சிரித்தபோது அவருடைய சிரிப்பில் எக்களிப்பு தொனித்தது.

''மாமல்லனுக்கு நான் இட்ட கட்டளையை இந்தக் கணமே மாற்றிவிடுகிறேன், சத்ருக்னா! நான் தரும் ஓலையை எடுத்துக்கொண்டு வாயு வேக மனோ வேகமாய்க் காஞ்சிக்குப் போக வேண்டும். தலைக்காட்டிலிருந்து துர்விநீதனுடைய சைனியம் காஞ்சியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அதை எதிர்த்து நிர்மூலமாக்குவதற்கு நரசிம்மன் போர்க்களத்துக்குச் செல்லட்டும். போவதற்கு முன்னால் ஆயனர் வீட்டுக்குப் போய்ச் சிவகாமியைப் பார்த்துவிட்டுப் போவதாயிருந்தாலும் போகட்டும். அதற்கு நான் குறுக்கே நிற்கப் போவதில்லை!''

இதைக் கேட்டதும் சத்ருக்னனுடைய முகத்தில் தோன்றிய விசித்திரமான புன்னகை, ''என்னிடம்கூடவா உங்களுடைய கபட நாடகம்?'' என்று கேட்பது போலிருந்தது. (தொடரும்)

அருமையான காபி ப்ரூ,
அறிவில் சிறந்தவள் என் மனைவி



சுமார் மூணேகால் ரூபாய்க்கு 30 கப்புக்கு மேல் ஸ்ட்ராங் காபி தயாரிக்கலாம் என்கிறாள் என் மனைவி பத்மா. ப்ரூ மிகச்சிறந்தது. ஒவ்வொரு கப்பும் நல்ல ருசியுள்ளது.

ஒவ்வொரு கப் ப்ரூவுக்கும் வறுத்து அரைத்த சிறந்த காபியின் விலையைவிட அதிகமில்லை

எனக்கு நினைவு தெரிந்த நாளாக நான் காபித் தூளையே உபயோகித்து வருகிறேன்.

இப்பொழுது இன்ஸ்டண்ட காபிகளில் ப்ரூ ஒன்றையே விரும்பி சாப்பிடுகிறேன். ஏனென்றால் ப்ரூவின் ருசி சிறந்த காபியின் ருசியேதான்.

ப்ரூ ஸ்ட்ராங்கானது. திடமானது. சிறந்த மணம் கொண்டது. அவசரத் தேவையின் போதோ எதிர்பாரா விருந்தினர் வரும் போதோ ப்ரூ ரொம்ப சௌகரியமாய் இருக்கிறது.

ப்ரூ-ஓர் அபாரமான கண்டுபிடிப்பு.

ப்ரூ ருசி சிறந்த காபியின் ருசி





எதற்காக வாழ்வது?

'ஷபீன'

அது ஒரு புராதன ஓட்டு வீடு.

ஓடு மாற்றி வருஷக் கணக்கில் ஆகியிருக்கும்; மடித்துப் போன மூங்கில்கள் கூரையெங்கும் துருத்திக் கொண்டிருந்தன; காரைச் சுவர்கள் பெயர்ந்து, பற்பல விசித்திர உருவங்களாகக் காட்சியளித்தன. தரையெல்லாம் பல்லாங்குழி ஆடலாம் போன்ற மேடுபள்ளங்கள்; பின்கட்டு முழுதும் பஞ்சப் பிரதேச வயல் போலப் பாளம், பாளமாக வெடித்திருந்தது. ஏழைமையின் பரிபூரணமான கொடூர ஆட்சி நிலவுகிற இடமாக இருந்தது அந்தப் பழைய வீடு.

தட்டுத் தடுமாறி, பெயர்ந்து போன வாசற் கதவைத் தாண்டி, ரேழியைத் தாண்டி நுழைந்து விட்டால் இடது புறம் முற்றம். அங்கங்கே புதராய் வளர்ந்திருந்த புல்பூண்டுகள். முற்றத்தை ஒட்டி ஒரு வான் வீச்சுத் தாழ்வாரம். ஜலதாரை சிதிலமாகி இருந்தாலும், வருஷக்கணக்காகச் சுவரிலே ஈரம் காத்திருந்ததாலும் ஒருவிதமான துர்வாசனை அந்தப் பிரதேசத்தில் நிரந்தர வாசம் செய்து கொண்டிருந்தது. இவ்வளவு மகோன்னதமான அரண்மனைத் தாழ்வாரத்தில் ஒரு கயிற்றுக் கட்டில் கிடந்தது. அதன் மேல் விரித்திருந்தது, பூர்வாசிரமத்தில் பட்டுப் பாயாக இருந்த ஒன்று. அந்தப் பாயின் மேல், 'தலைக்குசரக் கட்டை'யின் மேல் வழுக்கை மண்டை படிந்திருக்க அவரைப் பந்தல் போன்ற கூரையை, அதன் கீழ் வியாபித்து நின்ற ஒட்டடைப் படலத்தை வெறித்தவாறு படுத்திருந்தார் சபேசன்.

இல்லை! படுத்திருந்தார் என்பதே தவறு; நிற்கவும், உட்காரவும், ஓடவும் முடித்தவனல்லவா படுக்கவும் முடியும். சபேசனுடைய முழு நேர முயற்சியே படுக்கைதான்!

சபேசனுக்கு வயது எண்பதைத் தாண்டி விட்டது. சதையெல்லாம் வற்றிச் சுருங்கிப் போன தேகம். எலும்பே மிஞ்சி நின்ற உடம்பு. தஞ்சாவூர்க் கிணற்றில் தண்ணீர் கிடப்பது போலக் கண்களின் ஆழத்தில் விழிகள் ஆடின. கிழித்த நாரைப் போல் உடல் கிடந்தாலும், மனம் அசுர வேகத்தில் சுழன்றது.


வருஷக் கணக்காக இப்படியே காலம் ஓடி விட்டது சபேசனுக்கு. இன்று காலையில் கண் விழித்தது முதல் இனம் புரியாத விரக்தி உணர்ச்சி அவரைப் பிடித்திருந்தது. அது முளைவிட்டு, 'சுருசுரு' என்று ராக்ஷஸ விருக்ஷமாக வளர்ந்து அவரைப் பிடித்து ஆட்டியது.

''என்னப்பனே!.... ஸ்ரீ ராமா....'' உதடு முணுமுணுக்கக் கண்களை மூடிக் கொண்டார் சபேசன் — எண்ணங்களின் ஆயாசம் தாங்க முடியாமல்.

சபேசன் பெரிய குடும்பம் ஒன்றின் மூத்த பிள்ளை. நான்கு தம்பிகள்; இரண்டு தங்கைகள். சபேசனுக்கு இருபது வயது முடிவதற்குள் அவருடைய தாயும், தந்தையும் ஒருவர்பின் ஒருவராகக் காலமாகி விட்டனர்.

இருபது வயதுக்குள் தாலுகா ஆபீசில் ஒரு வேலையை ஒப்புக் கொண்டு சபேசன் விசாலத்தைக் கைப்பிடித்தபோது பெருங் குடும்ப பாரம் அவருடைய தோள்களில் விழுந்திருந்தது. சுமக்காமல், வேதனைப்படாமல் வீடு நிறையக் குழந்தைகள் இருந்தன, அவர் மனைவி விசாலத்துக்கு.

விசாலம் நல்ல பெண்; அந்தக் காலத்துப் பதிவிரதை. கல்யாணம் ஆகும்போது அவளுக்குப் பதினாறு வயசு; அப்போதுதான் 'பெரிய மனுஷி' ஆகியிருந்தாள். புக்ககத்தின் சம்சார பாரம் அவளுக்கு ஆயாசத்தை ஏற்படுத்தவில்லை. மைத்துனன்மார்களையும், நாத்தனார்குட்டிகளையும் தன் வயிற்றில்



பிறந்தவைகளாகவே நினைத்தான். அத்தனை விசால இருதயம் விசாலத்துக்கு !

சபேசனுக்குப் பூர்வீகச் சொத்து கிஞ்சித்து உண்டு. தாலுகா ஆபீஸ் உத்தியோகம். சிரமப்பட்டுத் தம்பிகளை நன்றாகப் படிக்க வைத்தார். முன்னுக்குக் கொண்டு வந்தார். அதனால்தானோ என்னவோ சபேசனுக்குச் சந்தான பாக்கியத்தை வைக்கவே இல்லை, அந்த ஊர்ப் பெருமானான சந்தான ராமன் !

சபேசன் தம்பதிக்கு அந்தக் குறையை நினைக்கக்கூடப் போதில்லை. தம்பிகள் படிப்பு, தங்கைகள் வளர்ப்பு என்று இப்படியே காலம் ஓடி விட்டது. காலக்கிரமத்தில் இரண்டு தங்கைகளையும் வசையான இடமாகப் பார்த்துக் கொடுத்தார். ஒருத்தி பம்பாயிலும், இன்னொருத்தி கோயமுத்தூரிலும் 'ராஜாத்தி'களாக இருந்தனர். தம்பிகளும் அப்படித்தான். நாலவரையும் பட்டப் படிப்பு வரை படிக்க வைத்தார். பெரிய இடங்களில் உத்தியோகம் ஆகியது. நால்வருக்கும் செழிப்பான இடத்தில் பெண் எடுத்துக் கல்யாணம் செய்து வைத்தார். ஒருவன் கல்கத்தாவில் சணல் ஆலையில் அக்கௌண்ட்ஸ் அதிகாரி; இன்னொருத்தன் பூனாவில் 'மிலிட்டரி' ஆபீஸ் மானேஜர் ; மூன்றுமவன் லண்டன் 'ஹை கமிஷனர்' ஆபீஸில் நல்ல வேலை; நான்காவது தம்பி சென்னையில் ஒரு தொழிற்சாலையில் என்ஜினீராக இருந்தான்.

சபேசனைப் போல் இல்லாமல் எல்லாரும் நிறையக் குழந்தைகளைப் பெற்று, அந்தக் குழந்தைகளுக்கும் கல்யாணம் கார்த்திகை என்று நடந்து கொண்டிருந்தது. ஆனால்...

சபேசன்...? ஏணி, புராணி, தோணி என்பார்களே அது போல் எல்லோரையும் வளர்த்து ஆளாக்கிவிட்டு, தாமுண்டு தம் மனைவி விசாலம் உண்டு என்று இந்தக் கிராமத்தில் பிதுரார்ஜித வீட்டில் நிலைத்துவிட்டார். இருந்த சொத்துக்களைத் தம்பி தங்கைகளுக்காகச் செலவழித்துவிட்டு மிச்சமிருந்த கொஞ்ச நஞ்சத்தில் ஏழைமையுடன் போராடிக் கொண்டிருந்தார்.

முதுமையின் வினை பிழிந்தெடுக்க, கண்களில் 'குபுக்'கென்று நீர் பொங்கியது. ''விசாலம்.....!'' என்று ஈனஸ்வரத்தில் மனைவியைக் கூப்பிட்டார்.

கொண்டவன் உதடு அசைந்தவுடனே வந்து நிற்கும் விசாலம் ஊர்ந்தவாறே அடுக்களையிலிருந்து கட்டில் அருகே வந்தாள்.

''என்ன.....!''

சபேசன் தலையை மெதுவாகத் திருப்பினார்.

''ம்.... கூப்பிட்டேனா... ஆமாண்டி.... கூப்பிட்டேன்..... செத்தே என்னை எழுப்பி உட்கார வையேன்......''

எலும்பும், எலும்பும் ஒன்றை ஒன்று தழுவிப் பெருமூச்சு விட்டு நிமிர்ந்தன. மெல்லச் சபேசன் சுவரில் சாய்ந்து அமர்ந்தார். விசாலத்துக்கு இதுவே அசாத்தியமான காரியம். மேல்மூச்சு வாங்கப் படபடப்புடன் கட்டிலின் கீழே உட்கார்ந்துவிட்டாள்.

சபேசனின் கண்கள் விசாலத்தையே ஊடுருவிப் பார்த்தன. எப்படித்தான் இருந்தாள் விசாலம்! அதுவும் கல்யாணமான புதிது.... பதினாறு வயசு.... எலுமிச்சம்பழ நிறமான தங்க மேனி. அளவான, அற்புதமான உடல் வாகு; மஞ்சள் பூசின முகத்தோடு, மடிசார்ப் புடவை உடுத்திச் 'சிக்'கென்று அவள் வரும்போதே.... புத்தம் புது புஷ்பம் மாதிரி......

பழைய நினைவின் சுகந்தம், விசாலத்தின் பிணைப்பின் இன்பம், எல்லாமே சேர்ந்து ஓர் உஷ்ணப் பெருமூச்சை விட வைத்தன.

அவர் என்ன நினைக்கிறார் என்பது விசாலத்துக்குப் புரிந்து விட்டது. விரக்தி மேவிட்ட எண்ணங்கள்.

''என்ன.... கூப்பிட்டேளே..... !''

''ஆமாண்டி..... கூப்பிட்டேன்.... அந்த ஸ்ரீராமன் என்னை ஏன் இன்னும் கூப்பிட்டுக் கல்லேன்னு கேக்கத்தான் கூப்பிட்டேண்டி.''

''சீச்சீ.... நன்னாயிருக்கு.... உங்க பேச்சு.. அச்சான்யம் பிடிச்ச மாதிரி.... யாரானும் கேட்டால் சிரிக்கப் போறா.....'' ஆற்றாமையால் 'படபட'வெனப் பொரிந்தாள் கிழவி.

''ஏண்டி.... எனக்கு என்ன வேலே இன்னும்...? எல்லாப் பசங்களையும் வளர்த்து ஆளாக்கியாச்சு. தம்பி தங்கைகளெல்லாம் பேரன் பேத்தி எடுத்துட்டு அவனவன் சுகமா இருக்கான். ஒருத்தனாவது செஞ்ச நன்றிக் கடனுக்காக.... 'ஏனண்ணா, இருக்கியா..... போனியா'ன்னு கேட்கிறானா....? இல்லே.... செப்பாலடிச்ச காசு தரானா....? நானும் நீயுமா — வியாதியோடே, தரித்திரத்தோடே போராடிண்டு.... யாருக்காக இருக்கணும்? எதுக்காக இந்த உசிரு.....?'' — மேல் மூச்சு வாங்கியது சபேசனுக்கு.

சபேசனிடம் இல்லாத ஒரு குணம் அவளிடம் இருந்தது. அதுதான் பெண்களுக்கே உரிய தாய்மைக் குணம் — எதையும் எதிர்பாராமல் கடமையாற்றும் குணம். கணவனுக்குப் பதில் சொல்ல வாயெடுத்தாள் விசாலம்.

''சார்.... தபால்.....'' என்று ரேழியில் நிழலாடியது.

தள்ளாடியவாறு எழுந்த விசாலம், தபால்காரர் எறிந்துவிட்டுப் போன கடிதத்தைப் பொறுக்கி யெடுத்துச் சபேசனிடம் கொடுத்தாள். அலமாரியிலிருந்து பூதக் கண்ணாடியைக் கொண்டு கொடுத்தாள்.

கடிதத்தைப் பிரித்து, பூதக் கண்ணாடி வழியே கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார் சபேசன்.

''ராமு எழுதியிருக்கான்டி, மெட்ராஸிலிருந்து...... (ராமு — முதல் தம்பியின் மூத்த பிள்ளை) படிக்கிறேன் கேளு.....''

''பெரியப்பாவுக்கு அநேக கோடி நமஸ்காரம். உபய க்ஷேமம். இப்பவும் என் மூத்த பெண் கீதாவுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறேன். பத்திரிகையும் அனுப்பியிருக்கிறேன். இப்போதுள்ள நிலையில் நீங்களோ, பெரியம்மாவோ.... வீட்டை விட்டு வர முடியாது என்று தெரியும்... உங்கள் இரண்டு பேருடைய ஆசீர்வாதம் பரிபூரணமாக வேண்டும். அப்பாவும் விசாரித்து எழுதச் சொன்னார்.....

தங்கள் பிரியமுள்ள
ராமு

''ம்..... ராமு பொண்ணுக்குக் கல்யாணமா....?'' என்று பத்திரிகையைப் பிரித்தார் சபேசன்.

''கண்ணை வலிக்கிறது.... பத்திரிகையை நீதான் படியேன்.....'' பூதக் கண்ணாடி சகிதம் பத்திரிகையை மனைவியிடம் கொடுத்தார் சபேசன்.

''இதைப் பார்த்தேளா....!''

விசாலம் சுட்டிக் காட்டிய இடத்தில் பத்திரிகையைப் பார்த்தார் சபேசன் பூதக் கண்ணாடி வழியாக.

''எனது தம்பி சிர. விசுவநாதனின் பௌத்திரியும், சிர. ராமசந்திரனின் ஜ்யேஷ்ட புத்திரியுமாகிய சௌபாக்கியவதி கீதாவை......''

விசாலம் கூவினாள்: ''இன்னும் கீழே பாருங்கோ......''

''இப்படிக்குத் தங்கள் விதேயன்
சபேசன்
(ரிடையர்ட் ஹெட்கிளார்க்,
ரெவினியூ டிபார்ட்மெண்ட்
நீடாமங்கலம்.''

''இப்பத் தெரிஞ்சுக்கோங்கோ.... யாரும் நம்மை நினைச்சுப் பார்க்கல்லே.... மதிக்கல்லேன்னு அங்கலாய்ச்சேளே.... இப்பப் பாருங்கோ.... பத்திரிகை யாரு பேரிலே போட்டிருக்கான் ராமு.....? உங்களை மறந்துட்டானா என்ன.....? ஏதோ லௌகிக அசௌகரியங்கள் வரத்துபோக்கு இல்லே....''

சபேசனுக்குப் புல்லரித்தது. அடேயப்பா! இந்த விசாலத்துக்குத்தான் எத்தனை பெருந்தன்மை....


''ஆமாண்டி, விசாலம்....! நீ சொல்றதும் சரிதான்.... ஈசுவரனுக்கு எல்லாம் தெரியுண்டி.... தெரியும்.... நான் இருக்கணுந்தான்..... குழந்தைகள் எங்கேயாவது சந்தோஷமாக இருக்கட்டும்.....'' மனம் நிறையச் சொன்னார் சபேசன். அவருடைய எலும்புக் கூட்டுக்குள் ஒரு புத்துணர்ச்சி விரவி அவரை நிமிர வைத்தது.

இனி, இன்னொரு கல்யாணப் பத்திரிகை, அவர் பெயரில் வரும் வரை அந்த உணர்ச்சி இருக்கும் — அதுவரை அவர் இருந்தால் !

SISTAS CB 5/73E TAM

ரப்பரைஸ்டு
காயர்
மெத்தைகள்:

இளைப்பாற்றி
மூட்டுவதில் இது
இணையற்றவை.





- பட்டுமென் சுகம்...சொல்லி லடங்காது.
- கட்டுறுதி வாய்ந்தது.
- 'பட்'டென்று தொய்ந்து போகாது...பார்க்கவோ பேரெழிலின் வடிவம்.
- கோடையிலும் குளுமைதரும், காரணம், காற்றுப்புக நுண் துளைகள் உண்டு.
- பஞ்சு மெத்தையை விடக் கொஞ்சமே விலை அதிகம்,

வரவேற்பறை மெத்தைகள், தலையணைகள், பெரிய திண்டுகள் நாற்காலிகள்..., அனைத்திற்கும் 'மெத்'தென்ற மென் சுகம். கம்பளங்களுக்கு, அடியிலும் போடலாம் பாதுகாப்பாக. ஈரம் தாக்காது, எளிதில் சுத்தப் படுத்தி விடலாம். விலையுயர்ந்த மெத்தைகளின் இதமான சுகம்- அவற்றுக்குச் செலவிடும் பாதிப் பணத்திலேயே பெற்று விடலாம்!

இதமான சுகம் பெற

ரப்பரைஸ்டு காயர்

காயர் போர்டு, கொச்சி-682016

இன்றே காயர் வாங்குங்கள், ஷோரூம்கள்: பம்பாய், புது டில்லி, கல்கத்தா, சென்னை, பெங்களூர், கொச்சி, மதுரை, சந்திகர், புவனேஷ்வர் மற்றும் அனேக வியாபாரிகள்.



வருகுது ஒரு
புதிய மென்மை
உங்கள் துணிகளுக்கு:
புதிய லக்ஸ் பவுடர்
LUX
NEW!
LUX
POWDER
SOFT AS NEW

உடலில் ஊனம் : உள்ளத்தில் ஊக்கம்

வெளியே இருள் உள்ளே ஒளி!

வழக்கத்துக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு மணமகள் தேவை விளம்பரம் 14–11–1965 இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி நாளேடுகளில் வந்திருந்தது.

'கல்வித் துறையில் பணிபுரியும் ஒருவருக்கு, தமிழ் எழுத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சியாளருக்கு, முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவருக்கு, **'கண் பார்வை இழந்த மணப் பெண் தேவை'** என்ற விளம்பரத்தை, திரு நா. கிருஷ்ணன் வெளியிட்டிருந்தார்.

''கண்ணில்லாத பெண்டாட்டி எப்படிக் குடும்பம் நடத்துவாள்? வேடிக்கையான விளம்பரம் செய்திருக்கிறீரே?'' என்றெல்லாம் திரு கிருஷ்ணனைக் கேட்டார்கள். ஒரு சிலர் கேலிகூடச் செய்தார்கள்.

விளம்பரத்தின் மூலமாக அறிமுகமான கும்பகோணத்தைச் சேர்ந்த மணமகன்–கிருஷ்ணனுக்கும் சேலம் கொண்டாலம்பட்டியைச் சேர்ந்த மணமகள்–சௌந்தம்மாவுக்கும் சென்னை சிந்தாதிரிப்பேட்டை சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியில் திருமணம் நடைபெற்றது.

சென்னை அட்வொகேட் திரு என். எம். மணி வர்மா தலைமை தாங்க, உற்சாகத்துடன் ஆதரவளித்த கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் எளிய முறையில் திருமணம் நிறைவெய்தியது.

சென்னை நகருக்கு அடுத்த சாலிகிராமம் பேரூராட்சியைச் சேர்ந்த ஏகாம்பர கிராமணி தெருவில், கிருஷ்ணன் தம்பதி இல்லறம் நடத்துகிறார்கள்.

திருமதி சௌந்தம்மா கிருஷ்ணன் பிறவியிலேயே குருடு. படிப்பும் இல்லை. முழுக்க முழுக்கக் கிராம வாசம்.

''உங்களால் வீட்டு வேலைகளைத் தட்டுத் தடங்கலின்றிச் செய்ய முடிகிறதா?''–அவரிடம் கேட்டேன்.

சௌந்தம்மா கிருஷ்ணன் கூறினார்: ''சின்ன வயசிலிருந்தே என் அம்மா என்னை வீட்டு வேலைகளைச் செய்யத் தயார்ப்படுத்தி விட்டாங்க... எங்க கல்யாணம் முடிந்து, தனிக் குடித்தனம் வைச்ச ஒரு வாரம்தான் கூட இருந்தாங்க. அப்புறம் நான்தான் குடும்பம் நடத்தறேன். வீட்டு வேலைகளைச் செய்யக் கொஞ்சமும் கஷ்டம் இல்லை!''

கண் பார்வை இழந்த அந்த இல்லத்தரசி, தம்மால் எப்படி வீட்டு வேலைகளைச் செய்ய முடிகிறது என்பதை நடைமுறையில் உணர்த்தினார். மெள்ள நடந்து, கிணற்றில் நீர் இழுத்து எடுத்து வந்தார், அரிசியைக் களைந்து கல் அரித்தார். மண் அடுப்பில் வரட்டியை வைத்துக் கிரசின் ஊற்றி, நிதானமாக நெருப்புப் பெட்டியினால் பற்ற வைத்தார். இரண்டு கைகளாலும் உஷ்ணம் வருகிறதா என நிதானித்து, அநுமானத்தால் உணர்ந்து, தயாராகக் கொண்டு வந்து வைத்திருந்த மண் கலத்தை அடுப்பில் ஏற்றினார்!

அடுப்படியில் வரிசையாகத் தகர டப்பாக்களில் முதலாவது கடுகு, இரண்டாவது மிளகாய், மூன்றாவது உளுத்தம்பருப்பு, நான்காவது துவரம் பருப்பு என்று அடையாளமாக வைத்துக் கொண்டிருக்கிறார். தாளிக்க எடுத்து, அதே இடத்தில் வரிசை தப்பாமல் டப்பாக்களை வைத்து விடுகிறார்.

''உங்களால் துணி துவைக்கவும், சிற்றுண்டிகளுக்கு மாவு அரைக்கவும் முடியுமா?''

''பழக்கத்தினால் எனக்கு எல்லா வேலைகளுமே சுலபமாகிவிட்டிருக்கு... தோசைக்கு மாவு அரைப்பேன். அம்மியில் துவையல் அரைப்பேன். என் துணிகள், கணவன் உடைகள் எல்லாவற்றுக்கும் சோப்புப் போட்டுத் துவைப்பேன்; கொடியில் உலர்த்தி மடித்து வைப்பேன்!'' என்றார்.

சிறிய குடித்தனப் பகுதி துப்புரவாக இருக்கிறதையும் என்னால் கவனிக்க முடிந்தது.

கணவர் வெளியே அலுவல் நிமித்தம் சென்ற பிறகு, வீட்டு வேலைகள் முடிந்து, பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் திருமதி சௌந்தம்மா பொழுதைப் போக்குகிறார்.

''எனக்கு வீட்டு வேலை முடிஞ்சு மீதி நேரம் நிறைய இருக்கு. 'மேல் நாட்டில் ஆபீஸ் போகும் பெண்கள் குழந்தைகளை ஒரு தாதியிடம் ஒப்படைப்பதுண்டு' என்று என் கணவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதே போல் என்னிடம் பத்துப் பதினைந்து குழந்தைகளை ஒப்படைத்தால் அவர்களைப் பராமரிக்க முடியும்!'' என அவர் உறுதியுடன் சொல்லக் கேட்டுத் திகைப்படைந்தேன்.

''கண் பார்வை இழந்தவர்கள் இந்நாட்டில் ஒன்றே கால் கோடிக்கு மேல் இருக்கிறார்கள். அதில் ஒரு ஜீவனுக்காவது வாழ்வில் ஒளி தருவோம் என்று துணிந்தேன். கண் பார்வை இல்லாத மனைவியைக் கொண்டதில் இல்லறம் சோதனையாகவில்லை; நல்லறமாகத்தான் நடக்கிறது!'' என்றார் கிருஷ்ணன்

இவருடைய திருமணத்துக்கு ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

கிருஷ்ணன் தம்பதிக்கு மக்கட் செல்வம் இல்லையே என்ற ஒரு குறை மட்டும் உண்டு!

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**

திருமதி சௌந்தம்மா கிருஷ்ணன்



What do seven different tyre companies have in common?

M		F		G		
A		I		O	P	
N	**I**	**R**	**C**	**O**	**R**	**D**
S	N	E	E	D	E	U
F	C	S	A	Y	M	N
I	H	T	T	E	I	L
E	E	O		A	E	O
L	K	N		R	R	P
D		E				

That's it. Nircord - India's first nylon tyre cord. Nircord is the super-strengthener for all better-grade tyres made in India today.

nircord®

® Regd. Trade Mark

Nirlon Synthetic Fibres & Chemicals Ltd.

Nirlon House, 254-B, Dr. Annie Besant Road, Bombay-400 025.

Interpub/NIR-C/46A/74

விண்ணும் மண்ணும்





கி. ராஜேந்திரன்

13. இரண்டாவது எச்சரிக்கை

தனஞ்செயன் அன்று இரவு ஹோட்டலுக்குத் திரும்பியதும் நேரே தன் அறைக்குப் போகவில்லை. அதனை ஒட்டினாற்போலிருந்த ஒரு நைட் கிளப்புக்குள் நுழைந்தான். 'பார்' முன்னால் இருந்த சுழல் ஸ்டூல்களுள் ஒன்றில் அமர்ந்து 'ஜின் அண்டு டானிக்' என்று கேட்டான். ப்ரூக்லின் தாவர இயல் பூங்காவிலிருந்து ஹோட்டல் வரை அனுபமாவிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தான் வந்ததை எண்ணிப் பார்த்தான். அவள் காரில் அவன் ஏறியதே அவளுடைய பிடிவாதத்துக்காகத்தான். ''நானே போய்க் கொள்கிறேன்'' என்று அவன் அலட்சியமாகக் கூறிய போது, ''இல்லை, உங்களைத் தனியே விட எனக்குப் பயமாயிருக்கிறது'' என்றாள் அனுபமா. ''உங்கள் மன நிலை சரியில்லை'' என்று கூறி வற்புறுத்திக் காரில் ஏற்றினாள். அந்தப் பரிவும் கரிசனமும் அவனுக்குக் கசப்பாயிருந்தன. அவனுடைய தோல்வியை அவள் குத்திக் காட்டுவது போல் தோன்றியது. திடீரென்று ஒரு நாள் ஆண்மையை இழந்துவிட்டவன் அதை ஒப்புக் கொள்ளவும் முடியாமல் ஒப்புக் கொள்ளாதிருக்கவும் முடியாமல் தவிப்பது போல் அவன் தடுமாறினான்.

ஹோட்டல் வாசலில் அவனை இறக்கி விட்டதும் அவள் சொன்னாள்: ''ஆற அமர சிந்தித்துப் பாருங்கள். கோபமும் ஏமாற்றமும் கொப்பளிக்க அசட்டுத்தனமாக ஏதும் செய்து வைக்காதீர்கள்!''

அப்போது அதற்குப் பதில் ஏதும் பேசாதிருந்து விட்டு இப்போது, ''உன்னுடைய உபதேசம் யாருக்கு வேண்டும்?'' என்று கோபத்துடன் முணுமுணுத்தபடியே முதல் 'ரீஃபில்' கேட்டான் தனஞ்செயன். கோப்பை நிரம்பியது. ''இப்படித்தான் குடிப்பேன். நீ யார் கேட்பதற்கு?'' என்று அங்கே இல்லாத அனுபமாவிடம் மானசீகமாகப் பேசினான்.

''இதை அசட்டுத்தனம் என்று நீ எண்ணுவதானால் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். சிந்திக்க விடாது மூளையை மழுங்கத்தான் அடிக்கும் என்றால் அதைப் பற்றியும் எனக்கு அக்கறை

இல்லை. ஐ டோண்ட் கேர்! நீ உன் மைக்கேலையே கட்டிக் கொண்டு அழு! அவன்தான் 'லிமிட்' தெரிந்தவன் ஆச்சே! அவனோடு இங்கேயே இருந்து தொலை! நான் போகிறேன். இந்தியாவுக்கு வெறும் கையுடன் திரும்பிப் போகிறேன். 'பாஸ்' முன்னால் முகம் அறுந்தழிய நிற்கிறேன்!''

எண்ணச் சுழல்களில் அமிழ்ந்தான் அவன்: 'இந்திய அரசுக்குப் பண நஷ்டம் ஒன்றுமில்லை. நான் அமெரிக்கா வந்து போன செலவைவிடப் பல மடங்கு அதிகமாகவே இங்கே ஏற்றுமதி ஆர்டர்கள் பிடித்துவிட்டேன். ஆனால் நான் அதற்காகவா வந்தேன்? இல்லையே? அனுபமாவை அழைத்துப் போகவல்லவோ இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்! அது சரி, அந்த உத்தரவை நிறைவேற்றி விடுவதில் என்ன சிரமம்? அனு ஒத்துழைக்கத் தயங்கமாட்டாளே! அங்கே போன பிறகு அவளால் பலன் ஏதுமில்லை என்றும் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்திருக்கிறோம் என்றும் புரியும். அதனால் என்ன? என்னைப் பொறுத்தவரை இட்ட பணியை நிறைவேற்றி விட்டேன் என்று சொல்லிச் சமாளிக்க வேண்டியதுதானே? ஆனால் அந்த மாதிரி என்றால் திருப்தி அடைந்துவிட முடியுமா? எந்த நோக்கத்துக்காக அனுபமாவை அழைத்துப் போக எண்ணினேனோ, அந்த நோக்கம் நிறைவேறாத போது ஒரு போலித்தனமான வெற்றியைக் கொண்டாடி என்னை நானே ஏமாற்றிக் கொள்வதா?'

அரங்கத்தில் எவளோ ஒருத்தி பாட ஆரம்பித்திருந்தாள். உற்சாக மூட்டும், நகைச்சுவை இழையோடும் ஒரு பாடலை இனிய குரலில் இசைத்துக் கொண்டிருந்தாள். தனஞ்செயனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது! அவன் இரண்டாவது 'ரீஃபில்' கேட்டான். ஒரு 'ஸிப்'. தொண்டையில் சூடாக இறங்கியது.

அவன் குனிந்த தலை நிமிராமல் கோப்பையையே பார்த்தபடி மேஜை மீது அதைத் திருகுவதுபோல் உருட்டிக் கொண்டிருந்தான். 'செயற்கைச் சந்திரனை விண்வெளிக்கு அனுப்பும் ராக்கெட் விஞ்ஞானத்தின் 'கண்ட்ரோல் அண்டு கைடன்ஸ்' துறையில் துரித முன்னேற்றம் காண்பது அவசியம் எனப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்ததும் அது பற்றி நன்கறிந்த விஞ்ஞானி என்று இங்குள்ள இந்தியத் தூதராலயம் நோட்டம் பார்த்தபோது மைக்கேலின் பெயர் அடிபட்டிருக்கும். அதையும்கூட யாரும் உறுதிப்படுத்தியிருக்க முடியாது. ஆயின் திக்குத்திசை புரியாத கும்மிருட்டில் திகைத்து நிற்காமல், துழாவியபடியேனும் முன்னேற மங்கலான இந்த ஒளிவிளக்குப் போதுமானதாய் இருந்திருக்கிறது. மைக்கேலும் அனுபமாவும் ஒன்றிப் பழகுவதையும் தினந்தோறும் ஒரே கட்டடத்துக்குள் சேர்ந்த மாதிரி நுழைவதையும் வெளியே வருவதையும் பார்த்திருக்கிறார்கள். ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டுச் சுலபமாய் ஏமாந்துவிட்டிருக்கிறார்கள். இருவருமே 'நாஸா'வுக்காக உழைப்பவர்கள் என்று தெரியுமாதலால் இருவரும் கூட்டாகச் சேர்ந்து செய்யும் ஆராய்ச்சியே அந்நியோன்னிய பாவத்துக்கும் வழிவகுத்திருக்கிறது என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள். அமெரிக்கப் பிரஜையானாலும் இந்தியப் பெற்றோருக்குப் பிறந்தவள் அனுபமா என்பதால் அவளை வசப்படுத்தித் தாய் நாடு திரும்புமாறு வற்புறுத்துவது எளிதாயிருக்கும் என்று கருதினார்கள். அனுபமாவைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துப் புது தில்லிக்கு அனுப்பி வைத்தார்கள்.

'அவர்களைச் சொல்லி என்ன பயன்? நானே அவர்கள் நிலையில் இருந்திருந்தால் அப்படி ஒரு முடிவுக்குத்தான் வந்திருப்பேனோ என்னவோ? தினம் தினம் ஒரே கட்டடத்துக்குள் ஒரு சேர ஒரே சமயத்தில் காலையில் நுழையும் இருவரும் லிஃப்டில் ஏறிய பின்னர், ஒருவர் முப்பத்தோராம் மாடிக்கும் மற்றொருவர் பதினாலாவது மாடிக்கும் போவார்கள் என்று யார் எதிர்பார்க்க முடியும்? நாஸாவுக்காகவே வெளியே சொல்லிக் கொள்ளாமல் வெவ்வேறு பெயர்களில் பணியாற்றும் இரு நிறுவனங்கள் அந்தக் கட்டடத்தின் இருவேறு மாடிகளில் இருப்பதை யார் ஊகிக்க முடியும்? அந்நிறுவனங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகள் வெவ்வேறு துறைகளில் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்தி வந்தனர். அந்த ஆய்வுகளும் பெரும்பாலும் பல்வேறு பல்கலைக் கழகங்களிலோ அல்லது நூலகங்களிலோ நடந்தன. சேகரித்த விவரங்களையும் கண்ட முடிவுகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கவும் சிந்திக்கவும் உதயமாகும் புதிய கருத்துக்களை வார்த்தைகளாய் வடிக்கவும் சரிபார்க்கவுமே அந்த அலுவலகங்கள் பயன்பட்டன.'

இதையெல்லாம் அனுதாபத்துடன் அனுபமா விளக்க அறிந்து கொண்டிருந்த தனஞ்செயன், 'மைக்கேலை அழைத்துப் போகக் கூடுமானால் நன்

றுய்த்தான் இருக்கும். ஆனால் அது நடக்கிற காரியமா?' என்று யோசித்தான். அமெரிக்கப் பிரஜையாகிய அவனுக்கு இந்தியாவிடம் பரிவு உண்டாக வேண்டும் என்று எண்ணுவதில் கூடத் தவறில்லை. ஆனால் தேசத் துரோகமான காரியத்தில் அவன் இறங்குவான் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு அபத்தம்?

திடுமென விளக்குகள் அணைந்தன. ஒரு கோலாகல ஆரவாரம் கிளம்பியது. சிரிப்பொலிகள் அலை அலையாய் எழுந்தன. மேடையில் 'ஸ்ட்ரிப் டீஸ்' ஆரம்பமாகி யிருந்தது. அந்த உற்சாக மெல்லாம் தனஞ்செயனை மேலும் விரக்தியடையச் செய்தன. கோப்பையின் அடிவாரத்தில் பாக்கியிருந்த கால் அவுன்ஸை அப்படியே வாயில் கவிழ்த்துக் கொண்டு பணத்தைப் பார் மீது வைத்துவிட்டுச் சுழலும் ஸ்டூலைத் திரும்பச் செய்து கீழே இறங்கினான். தன் அறையை நோக்கி மிதந்து சென்றான்.

அறைக் கதவில் சாவியைத் துவாரத்தில் நுழைப்பது சற்றுச் சிரமமாக இருந்



தது. கரம் நிதானம் இழந்திருந்தது. இரண்டு வினாடித் தாமதத்துக்குப் பிறகு அவன், பூட்டு ஏற்கனவே திறந்து தான் இருக்கிறது என்று உணர்ந்தான்: அவனுக்கு வியப்பாயிருந்தது. 'பூட்டத் தவறியது நானா? அல்லது அறையைச் சுத்தம் செய்யும் ஹோட்டல் பணிப் பெண்ணா? ஒரு வேளை ஜின் செய்யும் வேலையோ? நானே பூட்டைத் திறந்து விட்டு ஏற்கனவே திருந்திருப்பதாய் எண்ணுகிறேனா?' கதவைத் திறந்து கொண்டு உள்ளே வலது காலை எடுத்து வைத்தான். அடுத்து இடது காலை அவன் நகர்த்தவில்லை. அவன் அறிவு சற்று மந்தப்பட்டுத்தான் இருந்தது. என்றாலும் எச்சரிக்கையுடன் இயங்கியே பழகிய அவன் உணர்வுகள் இப்போது அவனைக் கைவிடவில்லை. 'அறைக் குள்ளே ஏற்கனவே யாரோ ஒருவன் இருக்கிறான். அது ஒருத்தியாகவும் இருக்கலாம். கதவு திறக்கப்படும் ஓசை கேட்டதும் விளக்கை அணைத்திருக் கிறான். இருட்டில் பதுங்கியிருக்கிறான். இந்தச் செயலே அவன் தகாத காரி யத்தில் ஈடுபட்டிருந்திருக்கிறான் என்ப தைப் புரிய வைத்தது. விளக்கை அணைக்க முக்கிய காரணம் அவன் முகத்தை நான் பார்க்கக் கூடாது என்பதாகத்தான் இருக்க வேண்டும். அந்த அயோக்கியனின் ஆசையை நிறைவேற்றி வைப்பதா? கூடவே கூடாது!' தனஞ்செயன் வலக் கரத் தைத் தன் முகத்துக்கெதிரே காப்பாக வைத்துக் கொண்டு இடக் கரத்தை நிலை வாசல் அருகே ஸ்விட்ச் இருக்கும் இடத்தை நோக்கிக் கொண்டு சென் றான். வெளியே நடைபாதையில் இருந்த வெளிச்சம் அவனது இந்த இயக்கத்தை நிழல்படமாக மறைந் திருந்தவனுக்குக் காட்டிக் கொடுத் திருக்க வேண்டும். அடுத்த கணம் தனஞ்செயன் மீது ஒரு மலை மோதி யது; அதே வினாடியில் தனஞ்செயனின் விரல் அசைந்து விளக்கும் எரிந்தது. வாசல் நிலைக் கம்பத்தில் சிரம் மோதிய தால் கிறுகிறுத்துத் துவண்ட தனஞ் செயன், வேதனையைப் பொருட்படுத் தாமல் பாய்ந்து, தப்பி ஓட முயல்ப வனைப் பற்றினான். தனஞ்செயனின் வயிற்றை ஓர் உலக்கை தாக்கியது.

பிடி நழுவி இயல்பாக வலக் கரம் வயிற்றை ஆதரவுடன் அணைக்கச் சென்றது. அப்போதும் இடக் கரம் தானியங்கு முறையில் விருட்டென்று எதிரியை நோக்கி நீண்டது. அதற்குச் சரியான பிடிமானம் ஏதும் அகப்பட வில்லை. கையோடு நழுவி வந்தது, உத்தரவின்றி உள்ளே நுழைந்தவனின் முகத்தை மறைத்திருந்த கைக்குட்டை. திபுதிபு என்று அவன் ஓடிச் சென்று மறைவதற்குமுன் அவன் முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டான் தனஞ் செயன். ஒரு நீக்ரோ.

நடைபாதையின் கோடி அறைக் கதவைத் திறந்து கொண்டு ஒரு தலை எட்டிப் பார்த்தது. ''இஸ் எனிதிங் இ மேட்டர்?'' என்று கவலையுடன் வினவியது.

''இவன் மனைவி வேறு ஒருவனுடன் ஊர் சுற்றக் கிளம்பிவிட்டதாக இவ னுடைய காதலி டெலிஃபோன் செய் தாள்! உடனே வந்த காரியத்தை மறந்துவிட்டு ஓடுகிறான்!''


கோடி அறைக்காரர், 'இந்த நீக்ரோக்களே இப்படித்தான்' என்பது போல் தலையசைத்துச் சிரித்துவிட்டு உள்ளே சென்று கதவைச் சாத்தினார்.

14. புலியைச் சீண்டினால்....?

தனஞ்செயன் வெறுப்புடன் தன் கையில் சிக்கியிருந்த கைக்குட்டையைக் குப்பைத் தொட்டியில் எறிந்தான்.

தப்பிச் சென்றவனைப் பற்றி இழி வாக ஜோக் அடித்து அல்ப திருப்தி அடைந்ததற்காகத் தன்னையே நொந்து கொண்டான். தோல்வி மனப்பான்மை யினால் ஏற்படும் மனோவிகாரங்களில் ஒன்று என்பது அவனுக்குப் புரிந்தது. அனுபமாவிடம் கோபித்துக் கொண்டு, அவள் எந்தத் தவற்றைத் தனஞ்செயன் செய்யக் கூடாது என்று கவலைப்பட் டாளோ, அதையே செய்ததும் இந்த ரகத்தைச் சேர்ந்ததுதான். உடல், மூளை ஆகியவற்றின் இயக்கத் திறன் மட்டுப்படும் அளவுக்கு ஜின் உள்ளே இறங்கி யிருக்கிறது. 'இல்லாதபோனால் இந்த நீக்ரோ என்னிடமிருந்து தப்பி யிருக்க முடியுமா? இந்நேரம் அவன் தன் வாழ்க்கை வரலாற்றைக் கடகட வென்று என்னிடம் ஒப்பித்துக் கொண் டிருக்க மாட்டானா?'

தலையில் விண்ணென்று தெறித்தது. விரலை வைத்துப் பார்த்தபோது பிசுக் கென்று ஒட்டியது. வயிற்றைக் கண் ணுக்குப் புலனாகாத அசுரக் கரம் ஒன்று முரட்டுப் பிடியில் சிக்க வைத்துப் பிசைந்து கொண்டிருந்தது.



AITARS-M. 384 TM

தனஞ்செயன் டெலிஃபோனை எடுத்து ஒரு கிண்ணத்தில் ஐஸ் கட்டிகளும் ஒரு பாட் காப்பியும் வேண்டும் என்று ரூம் ஸர்வீஸுக்குச் சொன்னான். குளியல் அறையில் முகத்தில் பச்சைத் தண்ணீரை அடித்துக் கொண்டு வந்தான். சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

ஐஸ்ஸை டர்க்கி டவலில் சுற்றிப் பின் தலையிலும் வயிற்றிலும் அழுக்கியபோது மரத்துப் போனதால் வலி குறைந்தது. இது போதும்; மருந்து ஏதும் தேவையில்லை. கிருமிகளுடன் போராடி, அண்டவிடாமல் தடுத்து, காயங்களைத் தானாகவே ஆற்றிக் கொள்ளும் சக்தியை அவன் உடல் இன்னும் இழந்துவிடவில்லை. எலும்பு முறிவு நல்ல வேளையாக ஏதுமில்லை. இன்றைய ஃபாஷனாகி விட்ட பாகவதர் கிராப் மண்டை ஓட்டைக் காத்திருக்கிறது. சூடான காப்பி அறிவு மயக்கத்தை அடித்து விரட்டியது.

இரண்டாவது சிகரெட்டைப் பற்ற வைக்கும் வரை தனஞ்செயன் சிந்திக்கத் தொடங்கவில்லை. சாய்வுநாற்காலியில் அமர்ந்து கிடந்தான். பின்னர் அறைக்குள்ளே கூண்டுப் புலிபோல் நடமாடிய போது இந்த நீக்ரோவை மீண்டும் சந்தித்தால்கூடத் தன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா என்று யோசித்தான். ஒரு கணப் போதுதான் அந்த அகன்ற கரிய முகம் அவன் பார்வையில் பட்டது. குடைமிளகாய் மூக்கு, தண்டங்காய் உதடுகள். எத்தனையோ நீக்ரோக்கள் ஏறத்தாழ இவனைப் போலவேதான் இருக்கிறார்கள். ஆனால் வெறுப்பை உமிழ்ந்த அந்தக் கண்கள்! அதை மட்டும் அவனால் மறக்க முடியாது. அவை உலகையே வெறுப்பதுபோல் காணப்பட்டன!

அந்த வெறுப்பு, நிற வேற்றுமைக்கு ஆளாகித் தன் சமூகம் ஒதுக்கப்படுவதாய் நினைத்ததன் விளைவா; திருடனைப் போல் ஹோட்டல் அறைக்குள் நுழைந்து சாட்சியம் தேடுவது, குண்டாயிஸத்துக்குத் தேவை நேரும் சமயத்தில் ஆஜராகிவிடுவது போன்ற இழிவான காரியங்களைத் தவிர வேறு எதற்கும் லாயக்கில்லாதவனாகத் தன்னைக் கருதி இவற்றுக்குக் கூலி தருவோர் மீது ஏற்பட்டதா; அல்லது அவர்களது இந்தக் கருத்தில் உண்மை இருக்கிறது என்று அவன் அறிவு ஒப்புக் கொண்டதால் உருவானதா என்பது புரியவில்லை. எவ்வாறானாலும் வெறுப்பைக் கொட்டிய அந்தக் கண்களை நரகத்திலோ அல்லது மறு பிறவியிலோ சந்தித்தால்கூடத் தன்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்று தனஞ்செயன் நினைத்தான். இந்தச் சம்பவம் பற்றிப் புகார் செய்யப் போலீஸாரிடம் போவதில் அர்த்தமில்லை. அவர்கள் தனஞ்செயனைப் பற்றியே வேண்டாத கேள்விகளையெல்லாம் கேட்டுக் குடைந்தெடுப்பார்கள். வம்பை விலைக்கு வாங்கியதாகத்தான் முடியும்.

தனஞ்செயனுக்கு இது இரண்டாவது எச்சரிக்கை. அனுபமாவின் காரில் பொருத்தப்பட்டிருந்த சின்னஞ் சிறிய ஒலிபரப்புக் கருவி, இந்த நீக்ரோவின் விஜயம் எல்லாம் மணி ஓசையே. யானை இனி மேல்தான் வரப் போகிறது !

புது தில்லியில் அமெரிக்க அரசுக்காக உளவறியும் ஸி. ஐ. ஏ. (ஸெண்ட்ரல் இண்டலிஜன்ஸ் ஏஜன்ஸி) பேர் வழிகளோ அல்லது பாகிஸ்தானிய ஒற்றர்களோ தனஞ்செயன் டி.எம்.ஐ. ஆசாமி என்பதை அறிந்திருக்கிறார்கள். நியூயார்க்குக்குப் பயணப்படுகிறான் என்று தெரிய வந்ததும் சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று முடிவு செய்து தனஞ்செயனை வர்ணித்து நியூயார்க்குக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள்.

குன்றத்தூர் குமரனுக்கோர் கும்பாபிஷேகம்



சென்னையை அடுத்துப் பதினைந்து மைல் தொலைவில் உள்ளது இம்முருகன் திருமலைக்கோயில். இத்திவ்விய திருத்தலத்தில்தான் ''பெரிய புராணம்'' அருளிய தெய்வச் சேக்கிழார் அவதரித்தார். முருகப்பிரான் திருத்தணிகையில் போர்புரிந்து திருப்போரூர் போகும் வழியில் ஒரு முகூர்த்த நேரம் இக்குன்றில் தங்கியதாகப் புராணம் கூறுகின்றது. பாடல் பெற்ற ஸ்தலமாகிய இக்கோயில் இன்று பாழடைந்து மிகவும் சிலமாகி உள்ளது.

கேட்டோர்க்குக் கேட்ட வரம் அளித்துத் தன் அடியார்களைக் காப்பாற்றும் முருகனின் திருக்கோயில் இனியும் இந்நிலையில் இருக்கக் கூடாது என்று எண்ணிச் சென்ற ஆண்டு திருப்பணி தொடங்கப்பட்டுச் செவ்வனே நடந்து வருகின்றது. இம்மேலான திருப்பணிக்கும் மகா கும்பாபிஷேகத்திற்கும் நன்கொடை அனுப்பும் பக்தர்கள் ''நிர்வாக அதிகாரி, பொருளாளர், திருப்பணிக்குழு, ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமி தேவஸ்தானம், குன்றத்தூர், சென்னை - 600069'' என்ற முகவரிக்கு அனுப்பலாம்.



பாம்புப் பரிசு !

சென்னை கிண்டியிலுள்ள பாம்புப் பண்ணைக்கு ஜப்பானிலிருந்து இரு ஜோடி அரிய நாகப் பாம்புகள் வந்துள்ளன.

சென்னை பாம்புப் பண்ணையின் டைரக்டர் ஸ்ரீ விடேகரின் கோரிக்கைக்கு இணங்க ஒகினவாவிலிருந்து இரண்டு வகைப் பாம்புகளில் இரு ஜோடிகளை ஜப்பான் அரசு விமானம் மூலம் அனுப்பி வைத்தது.

ஹாலோவேல் என்கிற முதல் ரகம் 120 சென்டி மீட்டரிலிருந்து 220 சென்டிமீட்டர் நீளமுள்ளது. பொலக்கர் என்கிற இரண்டாவது ரகம் 40 சென்டி மீட்டரிலிருந்து 80 சென்டிமீட்டர் நீளமுள்ளது.

சென்னையில் உள்ள ஜப்பானிய கான்ஸல் ஜெனரல் யுஷுஹிரோ மட்ஸுஷிமோது இப் பாம்புகளைப் பரிசாக அளித்தார்.

'ஸி. ஐ. ஏ.யிடமிருந்து தகவல் பெற்ற எஃப். பி. ஐ. (ஃபெடரல் பெரு ஆஃப் இன்வெஸ்டிகேஷன்) இங்கே இயங்கியிருக்கலாம். அல்லது பாகிஸ்தானிய ஐந்தாம் படை அமைப்பின் நியூயார்க் கிளை கைக்கூலி கொடுத்து இந்த நீக்ரோவை இங்கே அனுப்பியிருக்கலாம். எதற்காக நான் நியூயார்க் வந்திருக்கிறேன் என்று தெரிந்து கொள்ள ஏதாவது சாட்சியம் கிடைக்குமா என்று என் அறையைக் குடைந்திருக்கிறான். திறக்கப்பட்ட ஸூட்கேஸ், கலைக்கப்பட்ட டிரெஸ்ஸிங் டேபிள் இழுப்பறைகள் எல்லாம் அதைத் தெளிவாக்கின. அவனுக்கு ஒரு ம... (இல்லை கௌரவமான வார்த்தைகளைப் பயன்படுத்திச் சிந்திப்போம்) மண்ணும் அகப்பட்டிருக்காது. ஏதாவது இருந்தாலல்லவா அகப்பட ?

'ஆனால் அனுபமாவையும் மைக்கேலையும் நான் கடந்த சில தினங்களாகச் சந்தித்து வருவதை அவர்கள் கவனித்திருக்கக் கூடும். அதிலிருந்தே — ஞான சூன்யங்களாக இருந்தாலொழிய—என் நோக்கங்களை அவர்கள் ஊகித்தறிய முடியும். நான் ஏதோ பெரிதாகச் சாதிக்கப் போகிறேன் என்று என் 'பாஸ்' எதிர்பார்த்துக் காத்திருப்பது போலவே இவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். கடைசியில் வெறும் கையுடன் நான் திரும்புவதைப் பார்த்தால் இவர்களுக்கு எவ்வளவு திருப்தி உண்டாகும்? என் கையாலாகத்தனத்தை எண்ணிச் சிரிப்பாய்ச் சிரிப்பார்கள் !

'அவர்களுக்கு — சீனர்களோ, பாகிஸ்தானியரோ, அமெரிக்கரோ யாராயிருந்தாலும் சரி — அந்த மகிழ்ச்சியை நான் அளிப்பதா ? கூடவே கூடாது.' தனஞ்செயனுக்குத் தன் உள்ளத்தை யாரோ உகப்பிடித்து முறுக்கேற்றுவது போல் இருந்தது. ரோமாஞ்சனம் உண்டாயிற்று. 'என்ன ஜகஜ்ஜாலப் புரட்டு செய்தாவது என் அமெரிக்க விஜயம் முழுமையான வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதாவது அனுபமாவும் இந்தியாவுக்கு என்னுடன் வரவேண்டும்; எந்தக் காரணத்துக்காக அவளை இந்தியாவுக்கு அழைத்துப் போக எண்ணுகிறேனோ, அந்தக் காரியமும் நிறைவேற வேண்டும் !'

பசியை உணர்ந்த புலியின் கண்களைப் போன்று அவன் விழிகளில் கொடூரம் மின்னியது. ஒரே எட்டில் டெலிஃபோனை அடைந்து அனுபமா கொடுத்திருந்த நம்பரைச் சொன்னான்.

''யெஸ்?''

நல்ல வேளை அனுபமாவே ஃபோனை எடுத்துவிட்டாள். அவளுடைய பெற்றோர்களையோ அல்லது தம்பி தங்கைகளையோ அவன் தொந்தரவுபடுத்திவிடவில்லை.

''அனு ! தனஞ்செயன் பேசுகிறேன். உன்னை இப்போதே நான் பார்த்தாக வேண்டும் !''

''அழகுதான் ! இந்தக் கோலத்திலா ?'' தூக்கக் கலக்கமும் உலுக்கி எழுப்பப்பட்டதால் கலவரமும் கலந்து தொனித்தன.

''அப்படியானால் இப்போது உன் உடலை ஒரு நைலான் 'நைட்டி' மட்டுமே தழுவிக் கொண்டிருக்கிறது என்று என்னால் ஊகிக்க முடிகிறது!''

''ஆமாம்; நள்ளிரவுக்குமேல் திடுமென்று ஃபோன் அலறித் தூக்கத்தைக் கலைக்கவே உங்களுக்குத்தான் ஏதாவது ஆபத்தோ என்று பயத்துடன் எடுத்தேன். இன்னமும் பரபரப்பு அடங்கவில்லை. மூச்சு வாங்குகிறது.''

''அழகான காட்சியாகத்தான் இருக்கும், பார்க்கக் கொடுத்து வைத்திருந்தால் !''

''இதைச் சொல்லவா அழைத்தீர்கள் ?''

''உன்னை உடனே சந்திக்க வேண்டும் என்றுதான் முதலிலேயே சொல்லிவிட்டேனே, தூக்கம் தெளியவில்லையா, இன்னும் ?''

''இந்த நேரத்திலா ? அப்படி என்ன அவசரம் ?''

''நேரில் சொல்கிறேன். தயங்காதே; தாமதிக்காமல் உடனே புறப்படு! உன் பெற்றோர் விழித்துக்கொள்ளவில்லையே ?''

''மாட்டார்கள். இது என் அறையில் உள்ள பிரத்தியேக போன். தனி லைன். என் பெயரிலேயே இருக்கிறது.''

''ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. ஓசைப்படுத்தாமல் கதவுகளைத் திறந்து





பயமுறுத்தும் அஜீரணமா?
உடன் நிறுத்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர்
அருந்துங்கள். மீண்டும் முன்போல்
சாப்பிடத் தொடங்குங்கள்!



அஜீரணத்தை அசட்டை செய்தால் பசியை மட்டுமின்றி பொறுமையையும் இழந்து விடுகிறீர்கள். சிடுசிடுப்பும், எரிச்சலூட்டும் வலியும் ஏற்படுகின்றன.

ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். வெகுவிரைவில் அது அமிலங்களைச் சமனப்படுத்தி உங்கள் வயிற்றுக்குப் பாதுகாப்பளிக்கிறது. வலியைப் போக்கி எல்லாவித அஜீரணங்களி லிருந்தும் முழு நிவாரணம் அளிக்கிறது.

வயிற்றுக் கடுப்புக்கு ஓபியம் கலந்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் கேட்டு வாங்குங்கள்.

C. J. ஹ்யூலட் அண்ட் சன் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
சென்னை 600002, கல்கத்தா 700001

SAA/CJH/1192



அச்சத்தை வென்றவர்!

சிகாகோவில் புதிதாக நிர்மாணமான ஸியர்ஸ் டவர்தான் இன்று உலகிலேயே மிக உயரமான கட்டிடம். நூற்றுப்பத்து மாடியும் 450 மீட்டர் உயரமும் உள்ள இந்தக் கட்டிடத்தின் உச்சியில் டெலிவிஷன் ஒலிபரப்புச் சாதனத்தை நிறுவும்பணியில் ஈடுபட்டுள்ளார் திரு ஜான் ருகாவினு!



ஜப்பானிய மொழியில் ஜமாய்க்கிறார்கள்!

இந்தோ - நிப்பன் பண்பாட்டுறவுக் கழகத்தின் ஆதரவில் நடந்த 'கர்ணம்' என்னும் ஜப்பானிய மொழி நாடகத்தில் ஒரு காட்சி. கர்ணனாகத் திரு பத்மநாபனும் கிருஷ்ணனாகத் திரு ராமமூர்த்தியும் இந்நாடகத்தில் நடித்தனர்.

மூடி, கா'ரைக் கிளப்பிக் கொண்டு வந்து சேர்.''

''இன்னும் பதினைந்து நிமிஷங்களில் உங்கள் ஹோட்டல் வாசலில் என்னைக் காணலாம்.''

'' அங்கே நான் காத்திருப்பேன். அனு! நீ இப்போதுள்ள கோலத்திலேயே உன்னை நான் சந்திக்கத் தயார்! ஆனால் நியூயார்க் போலீஸ் அதை விரும்பாது. 'இன்டீஸெண்ட் எக்ஸ்போஷர்' என்பார்கள். அதனால்....''

''சரித்திர காலப் போர்வீரர்கள் போல் எஃகுக் கவசம் அணிந்து வருகிறேன்!'' என்று கூறி ஃபோனை வைத்தாள் அனுபமா.

தனஞ்செயன் புன்னகையுடன் உடைகளைக் களைந்துவிட்டு விசிலடித்தபடியே குளியல் அறையில் சென்று, தரை நனையாதிருக்கப் பிளாஸ்டிக் ஸ்கிரீனை பாத் டப்பைச் சுற்றி இழுத்து விட்டு விட்டு ஷவரைத் திருப்பினான். ஜில்லென்று கூரிய ஐஸ் ஊசிகளாக நீர் உடலைத் தாக்கியது. நடுங்கக் கூடாது என்று வீம்பும் உறுதியுமாகப் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றான். மது மயக்கம் கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்தால் அதையும் இந்த அதிர்ச்சி வைத்தியம் போக்கடித்துவிடும். அப்புறம் தைரியமாக அனுபமாவைச் சந்திக்கலாம்!

அவனுடைய சோர்வெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டது. தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் மீண்டும் தாக்குதலைத் தொடங்குவது என்று தீர்மானித்த மறுகணமே அவனுக்கு உற்சாகம் கொப்பளிக்க ஆரம்பித்துவிட்டது. காலை வரைகூடக் காத்திருக்க முடியாது, உடனே செயலில் இறங்க வேண்டும் என்ற அளவுக்கு அவன் எதிரிகள் அவனுடைய கோபத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்!

துணிவும் நம்பிக்கையும் மனத்தில் புகுந்ததும் அதுவரை தலைகாட்டாத பசி வயிற்றைக் குடைந்தது. 'அனுபமாவையும் இழுத்துக் கொண்டு 'மிட்நைட் ஸ்நாக்'குக்கு ஏதாவது ஒரு காபி பாருக்குள் நுழைய வேண்டியதுதான்'' என்று நினைத்தபடியே அவன் சுத்தமான உள்ளாடை, ஷர்ட் முதலியன அணிந்தான். டையைச் சரி செய்து கொண்டு கேசத்தின் மீதாக ஹேர் பிரஷ்ஷை ஓட்டினான். கோட்டை எடுத்து அணிந்து கொண்டான். ஓவர் கோட்டையும் அறைச் சாவியையும் சுமந்து கொண்டு லிஃப்டில் இறங்கிச் சரியாகப் பதினைந்தாவது நிமிஷத்தில் ஹோட்டல் வாசலில் வந்து 'நின்றான். அனுபமாவின் காருக்காக அவன் கண்கள் சாலையைச் சலித்தன.

(தொடரும்)

அட்டைப் படக்கதை

அன்பின் சங்கமம்

லட்சுமி ராஜரத்தினம்

கல்யாண வீட்டிலிருந்து அப்போதுதான் விஜயாவும் ரகுவும் திரும்பி யிருந்தார்கள். இனிப்புச் சிந்திய இடத்தை மொய்க்கும் ஈக்களாக விஜயாவின் நினைவுகள் கல்யாண வீட்டையே மொய்த்தன. 'இவர் என்ஜினீயர் மனைவி. இவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மனைவி... இவர் ஜில்லா மாஜிஸ்டிரேட் மனைவி மிஸஸ் ராமபத்ரன்...' என்று கல்யாண வீட்டில் செய்து கொண்ட அறிமுகங்களே நெஞ்சில் நிரம்பி வழிந்தன.

''ஐயாம் விஜயா ரகுநாதன்'' என்று மட்டுமே அவளால் கூற முடிந்தது. ரகுவுக்கு எந்த 'டெஸிக்னேஷனும்' இல்லை. இந்த 'அனெம்ப்ளாய்மெண்ட் பிராப்ளம்' அவனைச் சூழ்ந்திருந்தது.

அவன் ஏறி இறங்காத ஸ்தாபனமோ, எழுதிப் போடாத அரசாங்கக் காரியாலயங்களோ இல்லை என்றே கூறலாம். வேலை காலி இல்லை என்ற பதிலைக் கேட்டு அந்த எம்.ஏ. பட்டதாரி வாடிப் போனான். ரகுவின் மூன்று சகோதரர்கள் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். மூவரில் ஒருவன் ரகுவுக்கும் இளையவன். அவனே வேலைக்குப் போகும் பொழுது....

மாமனார் பென்ஷனர். மாமியார் எந்தக் குறையும் அவளுக்கு வைக்கவில்லை. மற்ற ஓரகத்திகள் வாங்கிக்கொள்வதைப்போலவே அவளுக்கும் வாங்கி வைத்து விடுவாள்.

''பரவாயில்லை. நம் கணவர்கள் கூட வேலைக்குப் போகாமல் இருந்து விடலாமே?'' என்று மற்ற இரு ஓரகத்திகளும் நிஷ்டூரமாக விஜயாவைப் பார்த்துக் கூறும்போது அவளால் என்ன சொல்ல முடியும்?

''அதற்கெல்லாம் சில ஜாதகங்களுக்குத்தான் யோகம் அடிக்கும். தலைவலி, காய்ச்சல் என்றால்கூட நம் புருஷர்களால் படுத்துக் கொள்ள முடியாது. இயந்திரம் மாதிரி ஓடணும்'' என்று லலி கூறினாள் மன்னியிடம்.

வீட்டில் எல்லோரும் அவரவர் வேலைகளைக் கவனிக்கும் பொழுது அவன் சும்மா இருப்பது மனத்தை உறுத்தும். ரகு எப்பொழுதுமே லேட்டாக எழுந்திருப்பான். அவள் காப்பியுடன் அவன் அறையை அடையும் பொழுது, ''கவர்னர் துரைக்காக ஸ்பெஷல்?'' என்று கடைசி மைத்துனரின் குரல் கேலியாக எழும். அவள் பதில் சொல்வதில்லை.

''ரகு, நீ சும்மாத்தான் இருக்கிறாயா? இந்தக் கணக்கை முடித்து விடேன்'' என்று தன் பிஸினஸ் கணக்கை அவனிடம் ஒப்படைப்பான் பெரியண்ணா.

''ரகு, நீ இந்த எலெக்ட்ரிக் பில்லைக் கட்டி விடு. எனக்கு ஏதப்பா இதற்கெல்லாம் நேரம்?'' என்று கூறுவார், ஒரு வார லீவு முடிந்து அலுவலகம் செல்லும் சின்னண்ணா.

''நான் அந்தப் பக்கம் போனால் கட்டி விடுகிறேன், கொண்டா அந்தப் பில்லை'' என்று குறுக்கே வருவார் அப்பா.

''ஏனப்பா, உங்களுக்கு இந்தச் சிரமம்? பிளட் பிரஷர்.... டாக்டர் உங்களை ஓய்வில் இருக்கச் சொன்னார் இல்லையா? ரகு போகட்டும்; அவன் இங்கே என்ன கிழிக்கப் போகிறான்?''

பெரியண்ணா, சின்னண்ணா இருவருக்குமே ரகுவிடம் கோபம். ரகுவிடம் என்று கூறுவதைவிட அப்பாவிடம் என்று கூறலாம். பெரியண்ணா தன் நண்பர் ஒருவரிடம் தாற்காலிகமாகக் கணக்கு எழுத ரகுவை அனுப்பினார். எம்.ஏ. பட்டதாரியான அவனை அனுப்ப அப்பா சம்மதிக்கவில்லை. அதே போல் டில்லியில் கிடைத்த வேலை ஒன்றுக்கும் அவனை அனுப்பச் சம்மதிக்கவில்லை.

தொலை தூரம் என்ற காரணத்தை அவர் வெளியில் சொன்னாலும், உண்மைக் காரணம் அவருக்குத்தான் தெரியும். ரகுவின் மாமனார் டில்லியில் இருந்தார். மாமனார் வீட்டு மாப்பிள்ளையாக அவனை அனுப்ப அவர் விரும்பவில்லை.

''நீ வேண்டுமானால் டில்லிக்கு உன் பிறந்தகத்துக்குப் போய் விட்டு வருகிறாயா? உனக்கு அங்கே கொஞ்சம் நிம்மதி கிடைக்குமே?''

அவளால் பதில் சொல்ல முடியவில்லை. சொல்லவும் முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அப்படியே அவள் சென்றாலும் அவளுடைய நினைவுகள் அவனையே சுற்றிப் படர்ந்திருக்கும்.

''நீங்களும் என்னுடன் வாருங்கள். இரண்டு பேருமாகப் போய் வருவோம்.''

அவன் மறுப்பாகத் தலையை அசைத்து விட்டான்.

''இல்லை விஜி. அப்பாவின் நண்பர் வருகிறார். அவர், மனைவி, குழந்தைகள் எல்லாம் உனக்கு நல்ல துணை. நான் ஏகப்பட்ட அப்ளிகேஷன்கள் போட்டிருக்கேன். பேட்டி என்று அழைப்பு வந்தால் சட்டுன்னு டில்லியிலிருந்து வர முடியுமா?''

இரு கரங்களையும் அவன் தோளைச் சுற்றிப் போட்ட மாலையாக்கி முகத்தைச் செண்டு போல் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள் விஜயா.

''நாளை இந்த நேரத்தில் நான் ரயிலில் போய்க் கொண்டிருப்பேன். உங்களுக்குக் காப்பி கொண்டு வர நான் இங்கிருக்க மாட்டேன்!'' உற்சாகமிழந்த குரலில் பேசினாள்.

''நான் சீக்கிரம் வந்து உன்னை அழைத்துக் கொண்டு வந்து விடுவேன். நீ இல்லாமல் என்னால் மட்டும் இருக்க முடியுமா?''

''சீக்கிரம் வந்து விட வேண்டும்.''

அவள் என்ன காட்டுக்கா போகிறாள்? பெற்று வளர்த்த இடத்துக்குத்தான் போகிறாள். அவனுடன் இப்படி ஓர் அன்பின் சங்கமம், பாசத்தைக் கூட மறக்க வைக்கும் அளவுக்கு எப்படி வளர்ந்தது?

அவள் திடீரென்று வந்து இறங்கியது அவள் அம்மா அப்பாவிற்கு ஆச்சரியத்தையே கொடுத்தது. ரகுவின் தந்தை அவள் வருகையைத் தந்தி மூலம் தெரிவித்திருந்தார்.

''ஒரு மாற்றத்துக்காகத் திடீரென்று நினைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டேன். அவ்வளவுதான்'' என்றாள் விஜயா.

அம்மாவுக்கு மட்டும் மனத்தில் ஓர் உறுத்தல்.

''உங்களுக்குள் என்றும் தகராறு இல்லையே? எனக்கு மனசில் அடிக்கடி தோன்றும், நம் விஜி புக்ககத்துப் பேர்களுக்கு அனுசரணையாக நடக்க வேண்டுமே என்று உன்னைச் செல்லமாக வளர்த்து விட்டோமாதலால் நானும் அப்பாவும் இதை நினைத்துக் கவலைப்படுவோம். அது இருக்கட்டும்... ஒன்றும்தகராறு இல்லையென்கிறாய். உன் முகத்தை வந்ததிலிருந்து கவனிக்கிறேன். வாடி யிருக்கிறதே. ஊம், என்ன விஷயம்?''

விஜயா துயரம் தாங்காமல் குபுக்கென்று அழுது விட்டாள். அவள் விம்முவதைக் கண்டு அம்மா பதறிப் போனாள். ''மாப்பிள்ளை உன்னிடம் அன்பாய்த்தானே நடந்து கொள்கிறார்? ஒருவேளை ... ஏதாவது கோபத்தில் உன்னை அடித்து விட்டாரா? அட, அடிக்கிற கைதான் அணைக்கும். தெரியுமா...?''

''இல்லையம்மா! அவர் என் மீது வைத்திருக்கும் அன்பு கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் அவர் வேலை கிடைக்காமல் தவிப்பதுதான் வேதனையாயிருக்கிறது. மைத்துனன்மார்களின் கடுசொற்களும், ஓரகத்திகளின் அலட்சியமும்தான் பொறுக்க முடியவில்லை .. அதனால் தான் அம்மா ... இங்கு...'' இதற்கு மேல் விஜயாவினால் பேச முடியவில்லை. கண்ணீர் பெருகி வழிந்தது.

''அசடே, இதற்குப் போய் அழுவாளோ? ஒருவேளை மாப்பிள்ளை கோபத்தில் அடித்து விடுகிறாரோ என்று நினைத்தேன்'' என்றாள் அம்மா.

பிறந்த வீட்டின் கட்டுப்பாடில்லாத இயல்புகள் அவளைக் கட்டவிழ்த்து விட்டிருந்தன. நினைத்த நேரத்தில் சாப்பிட்டு நினைத்த நேரத்தில் தூங்கினாள்.

அவள் ரகுவைக் கைப்பிடிக்கப் போகிறாள் என்பது அவளுக்கே தெரியாது. ஆண்கள் விடுதி ஒன்றில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான் ரகு. அம்மா, அவனைத் தன் வழியில் ஏதோ உறவு என்று சொல்லிக் கொண்டாள். லைப்ரரியில் யதேச்சையாகச் சந்தித்தபிறகு தான் அந்த உறவும் வெளி வந்தது. சக மாணவிகள் காதலைப் பற்றிப் பேசும் போது 'ரகு, ரகு' என்று அவள் மனம் அப் பெயரை வருடிக் கொடுக்கும்.

அவர்களுடைய திருமணம் நடந்தபோது அவன் தன் பரீட்சை முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். எம். ஏ. பட்டதாரியான அவனுக்குச் சீக்கிரத்தில் வேலை கிடைத்து விடும் என்ற எண்ணத்தில்தான் அவள் தந்தை திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார். முதல் வகுப்பில் தேறி யிருந்தான் ரகு. வைகறையின் வஸந்தத்தில் அயர்ந்து உறங்கும் அவளை அவன்தான் தயக்கத்துடன் எழுப்பித் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டான்.

உறக்கம் சரியாகக் கலையாத நிலையில் அவளை அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டான் ரகு.

இந்த நினைவு பசுமையாக, அப்பொழுது நடந்தாற்போல மனத்தில் எழுந்தது.

''ஏண்டி விஜயா, நீ இன்னும் மாறவேயில்லையா? புக்ககத்திலேயே இப்படித்தான் உன்னை மறந்து உட்கார்ந்திருப்பாயோ?'' கேட்டவள் அம்மாதான்.

எங்கிருந்தோ சட்டென்று சீறி வரும் வாணம் போல் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ''இங்கேகூட என் இஷ்டம்போல் இருக்க விடமாட்டாய் போல் இருக்கே!''

அம்மா சிரித்தாள்.

'' இதையும் புக்ககமாகவே நினைத்துக் கொள்ள வேண்டுமா, என்ன?'' கடுகாகவே வெடித்தாள் விஜயா.

''உன் கல்லூரி ஆசிரியை ரீட்டா உன்னைப் பார்க்க ஆவலாக இருக்கிறாள். அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வா.'' சமையலைக் கவனிக்க அம்மா உள்ளே போய்விட்டாள்.

அன்றைய நடுப் பகலில் தன்னுடைய கல்லூரி ஆசிரியையைச் சந்திக்கச் சென்றாள் விஜயா. கல்லூரி காம்பவுண்ட் பழைய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தியது.

''ரகு என்ன செய்கிறார்? கல்யாணத்தின் பொழுது அவர் கல்லூரி மாணவராக இருந்த நினைவு. ஆம் ஐ கரெக்ட் ?''

எதிர்பார்த்த கேள்விதான் என்றாலும் கண நேரம் தடுமாறினாள் விஜயா.

''அவர் இப்பொழுது வேலைக்குப் போகும் 'ஐடியா' இல்லை. மேற்கொண்டு சட்டப் படிப்புப் படிக்க நேர்ந்தாலும் நேரலாம்.''





டென்னிஸ்ஸின் நடைமுறை ஹாக்கிக்குக் கூடாதா?

இப்பொழுது இங்கிலாந்தில் 'மிக்ஸட்' ஹாக்கிப் பந்தயங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு கட்சியிலும் உள்ள 11 ஆட்டக்காரர்களில் 6 பேர் ஆண்கள் 5 பேர் பெண்கள்!

- பாலி

திரும்பி வரும் வழியில் தன்னால் எப்படி இத்தனை இயல்பாகப் பொய் சொல்ல முடிந்தது என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. தன்னையே ஏமாற்றிக் கொள்கிறாளா? அவளுடைய திருமணத்துக்கு முன்பே பழக்கமானவள் இந்த ஆசிரியை. திருமணத்துக்குப் பின்பு ரகுவுடைய கௌரவத்தைப் பாதுகாக்கச் சொல்லும் பொய்கள்; அவனுடைய ஏற்றத் தாழ்வுகளைத் தன்னுடையதாகவே ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம்—இவைகளெல்லாம்தான் பெண்ணுக்கு இயற்கை அளிக்கும் சீதனங்களா?

'ரகு தில்லி வேலையை ஏற்றுக் கொள்ளாதது அவளுடைய தந்தைக்குச் சற்று வருத்தம் தான். அதைப் பெண்ணிடம் கேட்டுத் தெரிந்து கொண்டதும், "என்னம்மா, சீமைக்குப் போகிறவனெல்லாம் இருக்கும் பொழுது.... தில்லி என்ன பெரிய தூரமா? இந்தக் காலத்திலே வேலை கிடைப்பதே குதிரைக் கொம்பா யிருக்கிறதே!" என்றார்.

அவள் பதிலே சொல்லவில்லை. புக்ககத்தாரைக் குறை சொல்ல விருப்பம் இல்லை.

எப்படியோ மூன்று வாரங்கள் ஓடிவிட்டன. திடீரென்று ரகுவிடமிருந்து கடிதம் வருவது நின்றுவிட்டது. இனிமேலும் அவனைப் பார்க்காமல் இருக்க முடியாது என்ற நிலை ஆட்டிப் படைத்தது. அவனிடமிருந்து கடிதம் வராத கோபம். மாலை நேரத் தனிமை. அம்மா சப்ஜி வாங்க அஜ்மல்கான் ரோட்டுக்குச் சென்று விட்டாள். ஜன்னலோர மேடையில் தெரு விளக்கின் மங்கிய ஒளி. இருள் பரவி வரும் நேரத்தில் ஏக்கத்தின் சுமை விம்மலாக வெடித்துச் சிதறியது. முற்றிய விதைக் காய்களிலிருந்து வெடித்துச் சிதறும் விதை மணிகளாக.

மெல்ல இரு கரங்கள் அவள் தோளை ஆதரவாகப் பற்றின. அதன் இதமான சூடே அவளுக்கு ஒரு தனி சுகம். மன மயக்கத்தின் நினைவுகளே அலையாகப் புரண்டு பின்னிப் பிணைந்து ரகுவாக உருவெடுத்ததோ? மெல்லப் பின்னால் சாய்ந்து அக்கரங்களை வருடிப் பார்த்தாள். பளீரென்று விளக்குகள் வெண்மையாக ஒளிர்ந்தன.

"இதற்குத்தானா உன்னை இங்கே அனுப்பினேன்?"

நெற்றியில் புரண்ட கேசச் சுருளை ஒதுக்கியபடி அவனைப் பார்த்துச் சிரித்தாள் விஜயா. அவள் கையில் அவன் ஒரு கவரைத் தந்தான். பார்வை அவனையும் கடிதத்தின் வரிகளையும் மாறி மாறிப் பார்த்தன.

"பார்த்தாயா, வேலை தேடித் தேடி....."

"தேடித் தேடி?"

"கடைசியில் வேலை வாய்ப்பகத்தின் அதிகாரி! அதாவது எம்ப்ளாய்மெண்ட் ஆபீசர். இன்னும் ஒரு வாரத்தில் வேலையை ஏற்றுக் கொள்ள வேண்டும்."

"ஏன் கடிதத்தில் எழுதவில்லை?"

"உன்னை வியப்பில் ஆழ்த்த ஒரு சஸ்பென்ஸ்."

"அதனால்தான் பதினைந்து நாட்களாகக் கடிதம் இல்லையாக்கும்!" பொய்க் கோபத்தில் கன்னச் சுழி ஆழமாகக் குழிந்தது.

இருவரும் அஜ்மல்கான் ரோட்டை ஒரு சுற்றுச் சுற்றி வர விரும்பிக் கிளம்பினார்கள்.

"உனக்கு இப்பொழுது சந்தோஷந்தானே? நான் வேலைக்குப் போகாததினாலே நீ பட்ட வேதனை..... ஆமாம்.... நான்தான் கேட்கிறேன், எனக்கு என்ன அப்படி வயசாகி விட்டது? நான் கிழவனா?"

அவள் பூவாகச் சிரித்தாள்.

"வயது வந்த பெண்ணுக்குக் கல்யாணம் ஆவதும், படித்த ஆண் மகன் வேலைக்குச் செல்வதும் ஒன்று என்று என் பாட்டி சொல்வாள். உத்தியோகம் புருஷ லட்சணம். வெறும் ஊற்றுக்கு என்றுமே பெயரில்லை. அது பெற்றவர்களைச் சார்ந்து வாழ்வது போல. ஆறாக மாறி நம் வாழ்க்கை தன் பாதையில் ஓடவேண்டும். பண்டிகை தினங்களில் மட்டும் குடும்பக் கடலில் அன்பின் வடிவமாய்ச் சங்கமமாக வேண்டும்." அவள் மூச்சு விடாமல் கூறி நிறுத்தினாள்.

"என் முதல் சம்பளத்தில் உனக்கு என்ன வேண்டும்?"


அவள் பதில் அளிக்கவில்லை. வீடு திரும்பி வாசல் நடை ஏறும்போதே அம்மாவின் குரல் கேட்டது.

"மாப்பிள்ளை அவளை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறாரா? இது சாதாரண வருகை இல்லை. அவளை அனுப்புவதற்கு நாள் பார்க்க வேண்டும். பஞ்சாங்கத்தை எடுத்துப் பாருங்கள்."

இருவரும் நடை தயங்கி நின்றார்கள். கண்கள் பேசின.

"என் முதல் சம்பளத்தில் உனக்கு என்ன வேண்டும் என்று நான் சொல்லட்டுமா, விஜி? மாங்காய்தானே வேண்டும்! விஜி, நாமும் பெரிய நதியாகிறோம். நமது அன்பின் சங்கமத்தில் புனித மலர் மலரும். இல்லையா விஜி?" அவனது முணுமுணுப்பு அவளது காது மடலில். குறுகுறுத்த காதைத் தேய்த்து விட்டுக் கொண்டாள் விஜயா.

ஓவியர் திரு பாலு காலமாவதற்கு முன்னால் கல்கிக்குக் கடைசியாக வரைந்தளித்த வண்ண ஓவியம் இவ்விதழ் மேலட்டையில் பிரசுரமாகியிருக்கிறது. கலைஞர் பாலுவின் மறைவு அவரது குடும்பத்துக்கு மட்டுமின்றிப் பத்திரிகை உலகுக்கும் பெருநஷ்டம்.



குருக்ஷேத்திரம்

மனிதனின் ஆசாபாசங்களையும், ஆசாபங்கங்களையும் பல்வேறு பாத்திரப் படைப்புக்களின் மூலம் இந்நாடகம் சுவையாக எடுத்துக் கூறுகிறது.

''குருக்ஷேத்திர''த்தில் முக்கியமான பாத்திரம் மகாதேவ சர்மா என்ற கல்லூரிப் பேராசிரியர். ஒழுக்கத்தில் உயர்ந்த குணக்குன்றாக விளங்கிய சர்மாவுக்குச் சமூகம் நீதி வழங்கவில்லை; அநீதியையேவழங்கிவிட்டது. அதில் மனக்கசப்படைந்த சர்மா சமூக விரோதியாக, உள்ளத்தால் மட்டும் அல்ல, உருவத்தாலும் அடியோடு மாறிவிட்டார். ஏ.ஆர்.எஸ். அந்தப் பாத்திரத்தை மிகத் திறமையாக ஏற்று அற்புதமாக நடித்தார். அது இரட்டை வேஷம் — ஒன்று வைதிக ஒழுக்கத்தில் உயர்ந்து விளங்கிய சர்மா; இன்னொன்று, மனம் கசந்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட தேவர். இருவேறு இயல்புகள் கொண்ட பாத்திரங்களை, வேஷப் பொருத்தம் மட்டும் அல்லாமல் பாத்திரப் பொருத்தத்தையும் வெளிப்படுத்தி நம்மிடம் இரட்டை வேஷத்துக்கு இரட்டைப் பாராட்டுக்களைப் பெற்று விடுகிறார். இந்த நாடகத்தை இயக்கியிருப்பவரும் அவர்தான்.

''பொறுப்பில்லாமல், முரட்டுச் சுபாவம் கொண்ட வாலிபன் ஜீவனாக வந்தவர் மகேந்திரா. அப்பாத்திரம் இடைவேளைக்குப் பிறகு அடியோடு மாறி விடுகிறது. ஜீவனின் மாறுபட்ட பாத்திரங்களைத் திறமையாக ஏற்ற மகேந்திராவின் நடிப்பில் ஜீவன் இருந்தது.

கதை, வசனம் எழுதிப் பாராட்டுப் பெற்ற மௌலி, மார்க்கண்டன் என்ற அரசியல் கலப்புடன் கலகலப்பும் கொண்ட ஒரு பாத்திரத்தை ஏற்றுத் தம் சிறப்பான நடிப்பினால் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றார்.



''குருக்ஷேத்திர''த்தில் பெண்களுக்கு அதிக வேலையில்லை; அதில் பெண்கள் பங்கு பெற்றிருந்தால் நிச்சயம், வீராங்கனைகள் என அவர்கள்தாம் வெற்றி வாகை சூடியிருப்பார்கள்! அதனால்தான் அவர்களுக்கு இந்த நாடகத்தில் அதிகச் சந்தர்ப்பங்கள் கொடுக்கவில்லையோ!

இரு நடிகைகளுக்கும் இன்னும் கொஞ்சம் சந்தர்ப்பங்கள் கொடுத்திருந்தால் நாடகம் இன்னும் சிறப்பாகவே இருந்திருக்கும். இருவரில் சிவகாமி நன்றாய் நடிக்கக் கூடியவர். ஆனால் நடிப்புக்கு நாடகத்தில் வாய்ப்பு இல்லையே!

ஆண்கள் மட்டும் நடித்தால் எடுபடாது என்று பயந்தோ என்னமோ சிவகாமியையும், காஞ்சனாவையும் சும்மா வந்து போகச் செய்திருக்கின்றனர்! இது தவிரக் காட்சி ஜோடனைகளும் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன!

தொழில் நடிகர்களைப் போல் சிறப்பான நடிப்பை வழங்கி நாடகத்துக்கு நல்லதொரு வரவேற்பைப் பெற்றிருக்கும் இந்த அமெச்சூர் நடிகர்கள் பாராட்டுக்குரியவர்கள். விறுவிறுப்பான காட்சிகளும், சுவையான வசனங்களும் கொண்ட ''குருக்ஷேத்திரம்'' பார்த்து மனம் மகிழவும், வாய்விட்டுச் சிரித்து ரசிக்கவும் வைக்கும் நாடகம்!

— காந்தன்


ஆசைகள் மடிவதில்லை
7
கதை: கௌசிகன் சித்திரம்: சூர்யா..
சோமுவின் சித்திரவதைகள் எதுவும் சதீஷின் உறுதியைக் குலைக்கவில்லை.
இத்தனை நெஞ்சழுத்தமா உனக்கு? உடல் வலிக்கக் கூட வாய் திறக்கவில்லையே!
சதீஷைப் பல விதங்களில் வதைத்தார்கள். தாங்க முடியாத வலி, சகிக்க முடியாத வேதனை... ஆனால் சகித்துக் கொண்டான் சதீஷ்.
தூக்கிக் கொண்டு போய் வெளியில் எறி. எங்கானாலும் சரி... இங்கிருந்து அப்புறப் படுத்து.
சதீஷுக்கு நினைவு திரும்பிய போது...
எல்லாமே தட்டாமாலை சுற்றுகின்றன. வெண்மை... வெண் பஞ்சு மேகமா? ஆகாயத்தில் மிதக்கிறேனா? கண்களைத் திறக்கவே முடியவில்லையே... எங்கே இருக்கிறேன்?
மிஸ்டர் சதீஷ்! எப்படி இருக்கிறது? ஃபீலிங் பெட்டர்?
இது ஆஸ்பத்திரி... நர்ஸின் குரலல்லவா?
இன்று என்ன கிழமை? நேரமென்ன இப்போது?
அலட்டிக் கொள்ளாதீர்கள். ஆபத்து இல்லை. சிராய்ப்புக்களும் சில வெட்டுக் காயங்களும் தான். இவை எப்படி நேர்ந்தன?
இன்று என்ன கிழமை சொல்லுங்கள்.


இன்று புதன் கிழமை. மணி ஏழு. நேற்று இரவு நீங்கள் இங்கு கொண்டு வரப்பட்டீர்கள். அதிலிருந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள்... இதை மெது வாகக் குடியுங்கள்.
வீதியில் விளக்குகள். அப்படியானால் மாலை ஏழு மணி. இன்று புதன் கிழமையானால் மல்லிகாவின் வாழ்வு இன்னும் ஒரு நாள் தான். அதற்குள் ...
உங்கள் நண்பர் நந்தகோபால் வந்திருந்தார், உங்களைக் காண.
இந்த நிலையில் என்னை வெளியே செல்ல அனுமதிக்கமாட்டார்கள். தப்பிச் செல்லவேண்டும்.
அமைதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.
எனக்கு மறுபடி தூக்கம் வருகிறது.
நர்ஸ் போய் விட்டாள். ஆஸ்பத்திரி அமைதியாகிவிட்டது. என் உடைகள் அந்த பீரோவில் தானிருக்க வேண்டும்.
விலாவிலுள்ள பிளாஸ்டர் இழுத்துப் பிடித்து வலி உண்டாக்குகிறது. வலியைப் பொருட்படுத்தினால் மல்லிகாவின் உயிர் பறிக்கப்பட்டு விடும். நடக்க முடிகிறது போதுமே! வேறு துப்பாக்கி தேடிக் கொள்ள வேண்டும்.
ஆறடி தான் இருக்கும். குதித்துத் தப்பி ஓடி விட வேண்டியதுதான். இனி தாமதிக்கக் கூடாது.
தொடரும்

இசை தொடுக்கும்....



உடலுக்குள் தலையாய 'ஜங்ஷன்' ஒன்று உண்டு என்றால் அது தொண்டையே. உயிர் வாழ அவசியமான மூச்சு செல்லும் ராஜ பாட்டையும், உடலுக்கு அவசியமான உணவும் நீரும் போகும் மார்க்கமும் சந்திப்பது தொண்டைப் பகுதியிலேயே.

உணவுப் பொருள்கள் சுவாசப் பாதையில் தவறிச் சென்றாலும் கெடுதல்; சுவாசக் காற்று உணவுக் குழலில் புகுவதும் தேவையில்லை. ஒன்று மற்றொன்றுடன் மோதாமல் பார்த்துக் கொள்ளுகிறது. தொண்டை உறுப்பான பாரிங்ஸ். இது மேலே அகன்று கீழே குறுகி, புனல் போல் இருக்கும். சுமார் ஐந்து அங்குல உயரமே உள்ள இதன் அகன்ற மேல் பகுதி மூக்குடன் ஒட்டியது. இங்கேதான் காதிலிருந்து வரும் யூஸ்டேசியன் குழாய்கள் வந்து சேருகின்றன. நடுப் பகுதி வாயின் பின்புறம் இருக்கிறது; இந்த இடத்தில்தான் ஒரு ஜதை டான்சில்கள் உள்ளன. கீழ்ப் பகுதி குரல்வளைக்குப் பின் அமைந்துள்ளது. காதிலிருந்து வரும் இரு குழாய்கள், இரண்டு நாசித் துவார வழிகள், வாய், குரல்வளை, உணவுக் குழாய் என்று ஏழு பாதைகள் சேரும் இடம் பாரிங்ஸ். வாயிலிருந்து உணவை, உணவுக் குழாய் வழியே இரைப்பைக்கு அனுப்புகிற விழுங்கும் செயல்புரிவது இதுவே. சாப்பிடும்போது சிரிப்பினாலோ, காரமான பண்டத்தைத் தின்றதாலோ இந்தச் சந்திப்பில் மோதல் ஏற்பட்டால் 'புரை' ஏறுகிறது. மூக்கு வழியே நீரும் உணவுப் பருக்கையும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இந்த உறுப்பின் அமைப்பு விசேஷத்தால் படுத்தபடி உணவருந்தினாலும் நீர் குடித்தாலும் அது சரியான இடத்துக்கே போய்ச் சேருகிறது. ஆனால் அவசியமானாலொழிய இதைப் பரிட்சித்துப் பார்ப்பது நல்லதல்ல.

தொண்டைப் பகுதி சந்திப்பை ஒட்டியது தான் நாக்கு. உணவின் ருசி தெரிந்து வர வேற்பவர். உணவை வாங்கி, பல் என்னும் அரைவையில் அரைத்து, உமிழ்நீர் கூட்டி, ரசாயனக் கலவையாக்கி, உள்ளே அனுப்புகிறது நாக்கு. நீட்டினால் நீண்டு கூராகக் காணும் நாக்கு, வாயின் உள்ளே அமர்ந்திருக்கும்போது, சாதுவாக, தட்டையாகவே இருக்கிறது!

டாக்டரிடம் நாக்கை நீட்டினால் போதும். சாதாரண வயிற்றுவலி முதல் எத்தனையோ நோய் இயல்புகளை நாக்கைப் பார்த்தே அறிந்து கொள்வார். அதன் வண்ண வேறுபாடும், வடிவத்தில் காணும் மாறுதல்களும் டாக்டர்களுக்குப் பல விவரங்களைத் தெரியப்படுத்தும்.

வாய்ப் பகுதியில் சுரக்கும் உமிழ்நீர் வாயை ஈரப்படுத்துகிறது; சுத்தப்படுத்துகிறது. பேச்சு சரளமாக வர உதவுகிறது. உணவை நீர்க்கக் கலக்கி விழுங்க வசதியாக்குகிறது. காது அருகிலிருந்து ஒரு ஜதை, முகவாயை ஒட்டி ஒரு ஜதை, நாக்குக்குக் கீழே ஒரு ஜதை என்று **ஆறு** சுரப்பிகளிலிருந்து சுரக்கும் மூன்று வகை உமிழ்நீர் முக்கியமானவை. காதுக்குக் கீழ் சுரக்கும் பாரோடிட் சுரப்பிகளில் புண் நேர்ந்தால் அதுவே மம்ப்ஸ் என்னும் 'பொன்னுக்கு வீங்கி' அம்மையாகும்.

உடலில் உள்ள பல வகைத் திசுக்களில் லிம்பாய்ட் என்பவை ஒரு வகை. இவை தொண்டைப் பகுதியில் நிறைய உள்ளன. இவற்றுள் ஒரு தொகுப்பே டான்சில். மற்றொன்று அடினாய்ட். இவை உடலின் போலீஸ் ரசாயனச் சாலைகள் எனலாம். மூக்கு வழியாகவோ, வாய் வழியாகவோ தொண்டையில் பல ரகக் கிருமிகள் சேர்கின்றன. இவற்றை எதிர்க்கும் சக்தியைத் திரட்ட உதவுகின்றன லிம்பாய்ட் திசுக்கள். தேவையானபோதெல்லாம் கிருமி எதிர்ப்புச் சக்தி அணி திரட்டுகின்றன.

டான்சில் திசுக்களுக்கு இந்தப் பொறுப்பு அதிகம். எல்லோருக்கும் ஒரு ஜதை டான்சில் திசுக்கள் உண்டு. குழந்தைகளின் தொண்டையில் சற்றே பெரிதாகத் தெரியும். பெரியவர்களுக்கு அவ்வளவு தெரியாது. டான்சில் தொந்தரவு என்பது இந்தத் திசுக்களின் அபரிமிதமான புண்பட்ட வளர்ச்சியே

ஒரு டாக்டர் தெரிவித்தது போல், டான்சில் உடலின் காவல்காரர்; அவை உடலில் இருப்பது நல்லதுதான்; ஆனால் காவலாளியே பொல்லாதவனாக இருந்தால் என்ன செய்வது? காவல் இல்லாத வீடே பரவாயில்லை என்று பொல்லாத காவலாளியை வெளியேற்ற வேண்டியதுதான். குணப்படுத்த முடியாத அளவு நோயுள்ள டான்சிலைக் களைவதும்

இப்படிப்பட்டதுதான். அவசியமானால் ஒழிய டான்சிலை நீக்க வேண்டியதில்லை.

குழந்தைகளுக்குத்தான் டான்சில் தொந்தரவு சாதாரணமாக வருகிறது என்றாலும், அபூர்வமாக ஐம்பது வயதானவருக்கு வருவதும் உண்டு. ரண சிகிச்சை அவசியமாவதும் உண்டு.

இந்த ரண சிகிச்சையால் காது மந்தமாகி விடுமோ என்ற ஓர் அச்சம் பரவலாக இருக்கிறது. இந்தப் பயத்துக்கு வைத்திய ஆதாரம் இல்லை.

அசிரத்தையாலோ அச்சத்தாலோ டான்சில் புண் சிகிச்சையைத் தள்ளிப் போட்டால் எத்தனையோ புதுத் தொல்லைகள் நேரக் கூடும். புண் பரவிக் காதில் சீழ் வர ஆரம்





..... குரல் கொடுக்கும் !



பிக்கும். இது காதுக்குக் கெடுதல். ஸ்ட்ரெப்டோகாக்கஸ் கிருமிகள் பரவினால் கீல் வாத சுரம்கூட வரும். கடைசியில் இதயத்தையே தாக்கக் கூடிய நோய் இது. சிலருக்கு டான்சிலில் காச நோய் வரும்.

டான்சிலை ஒட்டியது அடினாய்ட் திசுக் கொத்து. டான்சில் ரண சிகிச்சையின்போது இதுவும் சேர்ந்தே அகற்றப்படுகிறது. அடினாய்ட் பன்னிரண்டு வயதுக்குப் பிறகு மெல்லக் கரைந்து மறைந்து விடும்.

நமது நாட்டுக் குழந்தைகளின் தொண்டையைப் பாதிக்கும் மற்றோர் அபாயம் டிப்தீரியா. ஆனால் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ' இருந்ததை விட இன்று டிப்தீரியா தாக்குதல் குறைவு. சின்னக் குழந்தைகளுக்கு டிப்தீரியாத் தடுப்பு ஊசி போடும் பழக்கம் நல்ல காலமாகப் பரவி வருகிறது. இந்த வியாதி வந்தால் இலேசான சுரமாகத் தொடங்கி, தொண்டை புண்ணாகி, கிடுகிடுவென்று தொண்டை வீங்கி விடும். மூச்சு விட முடியாது. குழந்தையின் உயிருக்கே ஆபத்து. ஆகவே சந்தேகம் தோன்றிய உடனேயே வைத்திய உதவிக்கு விரைய வேண்டும். மருத்துவ மனையில் இதற்குத் தடுப்பு மருந்து செலுத்துவார்கள். டிப்தீரியா இதயத்தையும் பாதிக்கும் ஒரு நோய். மிகவும் அபாய நிலையானால் முன் கழுத்தில் ஒரு துளையிட்டுவிடுவார்கள். தொந்தரவுற்ற தொண்டையின் துணையின்றி மூச்சு விட இது வசதியாகும்.

ஆனால், புற்றுநோய் போன்ற வேறு தொல்லைகளால் மூச்சு விடுவது சிரமமான சிலருக்கு முன் கழுத்து ரண சிகிச்சை நிரந்தரமாகச் செய்யப்படுகிறது. இவர்கள் மூக்



''தோழர்களே! நம்முடைய கட்சி மாறுகிற வர்கள் கட்சியின் தலைவர் கட்சி மாறி விட்டார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.''

காலோ, வாயாலோ மூச்சு விட முடியாது. முன் கழுத்துத் தொளை வழியேதான் மூச் விடவேண்டும். மூக்கு, தொண்டை வழியே காற்று வராத காரணத்தால் குரல் அடை பட்டு விடும். இப்படிப்பட்டவர்கள் இயல் பாகப் பேச முடியாது.

தொண்டையில் புற்றுநோய் காரணமாக இந்தச் சிகிச்சை பெற்றவர்கள் விடாமுயற்சி யுடன் பேசக் கற்கலாம். குரல்வளை துணை யிராவிட்டால் என்ன? உணவுக் குழாயில் மூச்சுக் காற்றைக் கட்டுப்படுத்தி ஒலியெழுப் பப் பழகுகிறார்கள். ஏப்பம் விடுவதைப் போன்ற முயற்சியில் சொற்கள் தெளிவாக ஒலிக்க வேண்டும். இப்படிப் பேசும் பயிற்சி யும் பெற்று வெற்றி கண்ட நோயாளிகள் சென்னையிலேயே சிலர் இருக்கிறார்கள். புற்று நோய் காரணமாக வாழ்க்கை முடிந்திருக்க வேண்டிய இவர்கள் பயனுள்ள தொழில் புரிந்து வாழ்ந்து வருகிறார்கள்.

சமீப ஆண்டுகளில் இத்தகைய சிகிச்சை பெறுவோருக்கு உதவியாக ஓர் எலெக்ட் ரானிக் கருவி செய்யப்பட்டுள்ளது. ஒலியற்று அவர்கள் முணுமுணுப்பாகப் பேசுவதைப் பலமடங்கு பெருக்கிக் காட்டும் ஒலிப் பெட்டியே இது.

சுவாசக் குழாயின் மேலற்றத்தில் உள்ள பெட்டி போன்ற குரல்வளைச் சவ்வு அசை வுகள் ஒலியெழுப்ப உதவுகின்றன. ஒலிக்கு வேண்டிய காற்று வழங்குகிறது நுரையீரல்; குரலுக்குக் கனமும் சுருதியும் சேர்ப்பவை மூக்கும், சைனஸ் குகைகளும். இப்படிப் பல உறுப்புக்களின் கூட்டு முயற்சியே குரலும், குரல் தொடுக்கும் சொல்லும் இசையும். படைப்பு விந்தையால் ஒவ்வொரு மனி தருக்கும் குரல் தனித்தன்மையுடன் விளங்கு கிறது!

தொண்டையிலே எலும்போ, ஊசியோ, காசோ அடைத்துக் கொண்டால் கைவைத் தியம் செய்ய வேண்டாம். மருத்துவ மனைக்கு விரைய வேண்டும்.

ஐஸ்கிரீம் சாப்பிடுவது ருசியாக இருக்க லாம். ஆனால் தொண்டை இதை விரும்புவ தில்லை; தாங்கு சக்தி இராதவரிடையே எதிர்ப் புக் காட்டுகிறது.

தொண்டை அரிப்பு, தொண்டைக் கட்டு என்றால் என்ன? எல்லாம் தொண்டையின் உள்ளே எழும் ரணங்களே. இதற்கு முதல் சிகிச்சை வெதவெதவென்ற நல்ல நீரில் உப்புப் போட்டு அண்ணாந்து கொப்பளிப்பதே யாகும் 'வாய் கொப்பளிக்க ஏற்றது, வாய் மணக்கும்' என்று பல ரசாயனப் பொருள்கள் விற்பனையாகின்றன. வைத்தியர் யோசனை யின்றி அவற்றை யெல்லாம் பயன்படுத்துவது நல்லதல்ல.

தொண்டைக் கட்டுத் தொந்தரவு நீடித் தால் வைத்தியரிடம் போக வேண்டும். பெனி சிலின் போன்ற பாக்டீரியா தடுப்பு மருந்து களால் வைத்தியம் செய்து கொள்ளும்போது ஓர் எச்சரிக்கை. இந்த நோய்க்கு இத்தனை ஊசி, அல்லது இத்தனை மாத்திரை என்று ஒரு 'கோர்ஸ்' இருக்கிறது. அதை முழுவதும் கடைப் பிடிப்பதே நல்லது. தொண்டை கொஞ்சம் குணமானதும் இடையில் நிறுத்தி விடலாகாது.

தொண்டையிலே புற்றுநோய் ஒரு பெரும் துர்ப்பாக்கியம். ஆண் புற்று நோயாளிகளில் நாற்றுக்கு நாற்பது பேருக்கு வாயில்தான் புற்று நோய் வருகிறது. பெண்களானால் நூற் றுக்கு இருபது பேருக்கு வாயில்தான் புற்று நோய். புகை பிடித்தல், மது, வெற்றிலை பாக்கு புகையிலை, அதிக அளவு காரம் தின் னல், பாலுறவு நோய்கள், இரும்புச் சத்துக் குறைவு என்று இதற்குப் பல காரணங்கள்.

வாயிலே புற்றுநோய் என்றால் ஆரம்பத் தில் வலி தெரியாது. ஆனால் தொண்டை விழுங்குவது சிரமமாயிருக்கும். எரிச்சலும், சில நாட்கள் பொறுத்து நமைச்சலும் இருக் கும். கழுத்திலே நெறிகட்டும். எச்சிலிலே ரத் தம் தெரியும். குரலில் மாற்றம் தெரியும். சாதாரணத் தொண்டைக் கட்டுப் போலல் லாமல் பத்து நாட்களுக்கு மேல் குரல் மாற் றம் நீடித்தால் உடனே சந்தேகப்பட வேண் டும். புற்றுநோய் முற்றின நிலையில் மூச்சு விடுவதே சிரமமாயிருக்கும்.

புற்றுநோய் என்பது தெரிந்து விட்டால் ரண சிகிச்சையாலோ கோபால்ட் என்னும் கதிர் இயக்கத்தாலோ, மருந்தாலோ அல்லது மூன்றும் கலந்தோ குணப்படுத்த முடியும். குரல்வளையை நீக்கிவிட வேண்டிய அளவு முற்றிய நோயாளிகளும், உணவை விழுங்கும் பகுதியே இறனற்றுப் போன நோயாளிகளும் உள்ளனர். ரண சிகிச்சையால் முன்னவர் முன் கழுத்தால் சுவாசிக்கும்படி நேர்கிறது. பின்னவர் வயிற்றில் ஓட்டையிட்டு, நீராகார மாகவே உணவு பெற வேண்டியிருக்கிறது.

இவை யெல்லாம் வைத்தியர்களுக்குச் சவால்கள்! ஏன் நோயாளிகளுக்கும்கூடத் தான்!

கட்டுரை: தம்பி சீனிவாசன் - ஆலோசனை: டாக்டர் கே. கே. ராமலிங்கம் - படங்கள்: படேகுலாம் அலிகான்; அறிஞர் அண்ணா

மூட்டமான நாளிலே முகமலர்ந்த முறுவல்...



புதிய ஆக்பா ஐஸோலீ 1 உசித அளவுக்குக் குறைவான வெளிச்சத்திலும் ஒயில்மிளிரும் படங்களை எடுத்துதவுகிறது — தேர்ந்தெடுக்க 2 லென்ஸ் ஸ்டாப்புகளோடு.



ஆக்பா ஐஸோலீ1 அமெச்சூர் புகைப்படக் கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை அளித்திடும் காமெராவாக இது விளங்க 6 காரணங்களாவன :

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் விவரம் இயக்குவது இலகு.
2. நுட்பத் தெளிவுடன் சேர்க்கும் படங்களுக்கான அக்ரோமாட் F8 லென்ஸ்.
3. பாதகமான சூழ்நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதிதரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள்.
4. "இரட்டை எக்ஸ்போஷர் லாக்" இயக்க நிலையில் இருப்பதைக் காட்டுகிறது சிவப்புநிற எச்சரிக்கை விளக்கு.
5. 2 லென்ஸ் ஸ்டாப்களை உடைய துல்லிய பொருத்தமைப்பு லென்ஸ்.
6. 120 சைஸ் ரோல்பிலிமிலே,16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடையதைவிட 4 அதிகம்). விசேஷ லாக்கிங் பொறியமைப்பை உடைய பிலிம் கவுன்டிங் குமிழ் இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது.

திரையிடுவதற்கென பளிச்சென்ற ஆக்பா கலர் ட்ரான்ஸ்பேரன்ஸிகளையும் எடுக்கிறது ஆக்பா ஐஸோலீ 1. தெள்ளத் தெளிவுள்ள பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத்தாள்களை.

தயாரிப்பாளர்கள்: நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட., பரோடா

விலை: ரூ. 143/- எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. பிற வரிகள் தனி.

ISOLY-I

ஏகபோக விநியோகஸ்தர்கள்
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்,
பம்பாய் · நியூ டெல்லி · கல்கத்தா · சென்னை.
*புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லிவர்குஸன் அவர்களின் ரிஜிஸ்டர்டு ட்ரேடு மார்க்.

உண்மையுள்ள உங்கள் ஐஸோலீ.

impos/AG/IS/ Tam

தெய்வம் கொடுத்தது

எஸ். ரங்கநாயகி



பூவராகன் தெரு வாசற்படிக்கு வந்து அலுப்புத் தீர வாசற் திண்ணையில் அமர்ந்தார். அது அவர் வழக்கம். உடல் முழுவதும் பன்னிரு திருமண் காப்பு. அவர் உடலுக்கு அந்நாமங்கள்தான் ஆபரணம். சிவந்த மேனிக்கு ஸ்ரீசூர்ணம் எடுப்பாகவே இருக்கும்.

''உள்ளே யாரடி, கொஞ்சம் நீர் மோராவது கொண்டு வந்து கொடுக்கக் கூடாதா?'' உட்புறம் நோக்கிக் குரல் கொடுத்தார். மனைவியைப் பெயரிட்டு அழைத்ததில்லை. பெற்றோர்கள் இருந்தபோது ஏற்படுத்திக் கொண்ட வழக்கம், அவர்கள் காலம் முடிந்த பிறகும் அப்படியே தொடர்ந்து வந்தது.

அலமேலு முதலில் செம்பில் நீர் எடுத்து வந்தாள். வெளியே சென்றுவிட்டுக் கணவர் கை கால் கழுவாமல் ஒன்றும் அருந்த மாட்டார் என்பதை அவள் அறிவாள். பூவராகன் கை கால்களைக் கழுவிக் கொண்ட பிறகு உட்புறம் சென்று நீர் மோர் கொண்டு வந்தாள்.

''இந்த மோரைச் சாப்பிடுவதை விட, உள்ளே வந்து இலையைப் போட்டுக் கொண்டு சாதம் சாப்பிடக் கூடாதா? பசியும் அடங்கும்''—மனைவியின் உபதேசம்.

''பசி வேறு வெச்சிருக்காக்கும். இந்தக் கோவில் வரும்படியிலே பசிங்கற உணர்ச்சியே இல்லாமல் இருக்கணும். அப்போதான் காலம் தள்ள முடியும்.''

''அதுக்கு என்ன பண்ணறது... நம்மைப் போல் இந்தக் கோயிலில் இருக்கும் ராமனுக்கும் இப்படி ஒரு தலையெழுத்து. ஒவ்வொரு தெருவிலும் பிளாட்பாரத்தில் ஒரு கோவில் கிளம்பறது. நிமிஷமா அதுக்கு யோகம் பிறக்கிறது. கும்பல் சேர்ந்து உற்சவம் கூட நடக்கிறது. அப்புறம் பிளாட்பாரம் பெருமாளை நீக்கணும்னு சர்க்காரிலே ஆர்டர் போட்டாக் கூட எல்லா ஜனங்களுமாச் சேர்ந்துண்டு எதிர் மூச்சு போடறா... நம்ப கோவில் ராமனோ, உங்களைப்போல ஓர் அப்பாவி.''

பூவராகன் மனைவியை வியப்புடன் நோக்கினார். அலமேலுவா இப்படி எல்லாம் தெரிந்தவளாகப் பேசுகிறாள்! வருஷத்தில் கணவர் வாங்கிக் கொடுக்கும் ஒன்பது முழப் புடவையை மடிசாராகச் சுற்றிக் கொண்டு நெற்றியில் வகிடு தொடும்படி ஸ்ரீசூர்ணத்தை மட்டும் ஆபரணமாகத் தீட்டிக் கொள்ளும் மனைவி, இன்றுவரையில் கணவரிடம் தனக்கென ஏதும் கேட்டு அறியாதவள். சுத்த ஜடம் என்று கூட அவளைப் பற்றி அபிப்பிராயம் கொண்டுள்ள பூவராகன் இன்று அவள் பேச்சைக் கேட்டு எல்லாம் தெரிந்தும் பேசாது நிற்கும் மனைவியைப் புரிந்து கொண்டார்.

''நீயா இப்படிப் பேசறே! எல்லாம் தெரிஞ்சு வைச்சிண்டுதான் இருக்கே... எந்த மகராஜனோ ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் ஏகாந்த சேவைக்கென ராமனை பிரதிஷ்டை செய்து இந்தக் கோவிலைக் கட்டினான். எங்க தாத்தா காலத்திலிருந்து பரம்பரை அர்ச்சகர்களாக நாங்களும் இருக்கோம். கோவிலைக் கட்டினவன் பெருமாளோ, அர்ச்சகனோ பட்டினியாகக் கிடக்கக் கூடாதுன்னு கொஞ்சம் நிலமும் எழுதி வச்சான். ஆனால் இது போல விலைவாசி விஷம்போல ஏறும்னு

அவன் கண்டானு? இப்பப் பெருமாளுக்கும் வயிறு நிறையலே, நமக்கும் நிறையலே... எல்லாக் கோவில் பெருமாளைப்போல இந்த ராமனுக்கு, தானே சம்பாதிச்சுக்கவாவது வழி தெரியறதா?... யாருடைய கனவிலாவது வரக்கூடாதா? யாரையாவது பிரார்த்தனைகள் செய்து கொள்ளும்படி செஞ்சு, அப்படியாவது பணம் தேடிக்கக் கூடாதா?... அந்தப் பணத்தை வெச்சு அமர்க்களம் செய்து விடுவேனே!''

''அப்பா...'' எதிர்த்திண்ணையில் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த ஏக புதல்வன் துரை குரல் கொடுத்தான். ''பெருமாளைக் குறை சொல்றேளே, நாமதான் முயற்சி பண்ணிச் சம்பாதிச்சுப் பெருமாளைப் பெரிய பதவிக்குக் கொண்டு வரக் கூடாதா?''

''ஏன், நீதான் சம்பாதிச்சுச் செய்யேன்... என்னுடு இந்தத் தொழில் முடியட்டும்னு தான் உன்னைக் காலேஜில் படிக்க வைச்சேன். பட்டம் வாங்கினே... வேதங்களை நன்னாப் படிக்கப் போறேன்னு திருப்பித் திருப்பிப் பரம்பரைத் தொழில்லேதான் புத்தி போறது? அதனாலே பெருமாளே சம்பாதிச்சுக்க வேண்டியதுதான்.'' கொஞ்சம் கோபம் காட்டியே பூவராகன் பேசினர்.

துரை மேலே பேசவில்லை. உட்புறம் சென்று முகம் கழுவிக் கொண்டான். பாழ் நெற்றியாக்கி விடாமல் வைஷ்ணவன் என்பதற்கு அடையாளமாக ஸ்ரீசூர்ணம் மட்டும் பளிச்சென இட்டுக் கொண்டான். அவன் அப்பாவே அவனைக் கிராப் வெட்டிக் கொள்ளச் சொன்னர். பையன் காலேஜ் படித்து நன்ருகச் சம்பாதித்து நன்ருக இருக்க வேண்டும் என்பது அவர் ஆசை. பையன் நன்ருகப் படித்தான். ஆனல் இன்னும் காசு சேர்க்கத் தெரியவில்லை. லைப்ரரிக்குச் சென்று எப்போதும் புத்தகங்கள் படித்தான். கட்டுரைகள் எழுதினன். கிடைத்த சன்மானங்கள் அம்மாவின் புடவைக்கும் அப்பாவின் வேஷ்டிக்கும் உதவின. ஒவ்வொரு முறை கோவில் கொண்டிருந்த ராம லட்சுமண அஞ்ச நேயருடன் சீதா பிராட்டிக்குப் புதுத் துணி எடுத்துக் கொடுக்க உதவின.

கடை வீதிப் பக்கம் சென்று கொண்டிருந்த போது துரையின் கண்களில் கமலம் தென்பட்டாள். அவன் பெரு வியப்பில் ஆழ்ந்து விட்டான். அவளுக்கு முன்னுடி மேஜையில் பரிசுச் சீட்டுக்கள். அவற்றைப் பாதுகாத்து விற்க ஒரு நாற்காலியில் அவள் அமர்ந்திருந்த கோலம்! கமலம் அவனுக்கு மாமா பெண். வறுமையில் உழன்ற குடும்பம்.

''என்னடீ கமலம்? என்ன கோலம் இது?'' துரை அவள் அருகில் சென்று கேட்டான்.

''கோலமா? மாக் கோலம், இழை கோலம்னு ஒசத்தியாச் சொல்றுப்ல இதையும் வெச்சுக்கோயேன்... சும்மா ஆத்துலே போது போகலே. கடைத் தெருவிலே நின்னுண்டு என்னைப்போல ஒருத்தி நாலு பேர்களைப் பார்த்துண்டிருந்தா உங்க வாயெல்லாம் சும்மா இருக்குமா? அதுக்காக ஒரு மேஜையும் நாற்காலியும் சம்பாதிச்சுண்டேன்.''

சிரித்துக் கொண்டே கூறினள். அந்தச் சிரிப்பினுள்ளே எத்தனை வேதனை இருக்கும் என்பதைத் துரை அறிவான், விளக்குத் தரும் பிரகாசத்தினுள் கறுப்பு வட்டமாக.

''அம்மா, அப்பா சௌக்கியமா இருக்காளா?'' ஏதோ கேட்க வேண்டும் என்ற நியதியில் துரை கேட்டான்.

''இந்த க்ஷேம சமாசாரங்களை நம் இருவர் குடும்பமும் கேட்காமல் இருப்பதே நல்லது. வியாதிக்காரனைப் பார்த்து 'சுகமா' என டாக்டர் கேட்கிறதில் அர்த்தமில்லே.''

''அது சரி, இங்கே எத்தனை நேரம் இப்படி உட்கார்ந்திருக்கப் போறே?''

''எதுக்குக் கேக்கறே? தேர்சை காப்பி வாங்கிக் கொடுத்துட்டுப் போகப் போறியா? அது உன்னலே வாங்கித் தர முடியாதுன்னு எனக்குத் தெரியும். உன் கையிலே பணமில்லே...''

''உண்மைதான். உனக்கு உதவ முடியாது. அதனலே நான் ஒண்ணும் பேசக் கூடாது.''

''உதவணும்னு நீ மனசு வெச்சா பேஷா உதவ முடியும்... காலையிலேந்து இன்னும் ஒரு சீட்டுக் கூட விக்கலே... நீ என்னைப் பாக்கறதுக்கு முன்னுடி உன் கையிலே சுந்தரேசன் ஒரு ரூபாய் கொடுத்தானே அதில் ஒரு சீட்டு வாங்கிப் போணி பண்ணிட்டுப் போ. மேலே விக்கட்டும். ஏறெண்டுக்கும் பதில் சொல்ல முடியும்.''

''என்னது? சுந்தரேசன் கொடுத்த ரூபாயா? அதை எதுக்குக் கொடுத்தார் தெரியுமா? எப்பவோ ராமர் சந்நிதிக்கு உண்டிக்குப் போடறதா வேண்டிண்டாராம். அது இப்பத்தான் நினைவுக்கு வந்ததாம். உண்டியிலே போடச் சொல்லிக் கொடுத்தார்.''

''எனக்குத் தெரியும். அவர் பேசினது என் காதிலே விழுந்தது. இத்தனை காலத்துக்கு அந்த உண்டிப் பணத்துக்காகக் காத்திருந்த ராமபிரான் இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்க



முடியும். நான் சொல்றதைக்கேளு. அந்தப் பணத்திலே சீட்டு வாங்கு. என் குடும்பத்துக்கு உதவியா யிருக்கும். பெருமாள் உன் மூலமா உதவி செய்தார்னு வெச்சுக்கிறேன். இந்தச் சீட்டுக்கே பரிசு விழப்போறது பார்!''

''ஜோஸ்யம் கத்துண்டியா?''

''என்னமோ எனக்குத் தோணித்து சொன்னேன். அந்த உண்டி ரூபாயிலே ஒரு சீட்டு வாங்கினால் பெருமாள் கோவிச்சுக்க மாட்டார்னு என் எண்ணம்... இதுக்கு மேலே நான் ஒண்ணும் சொல்லத் தயாரில்லே.''

துரை ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தான். பிறகு சட்டைப் பாக்கெட்டிலிருந்து சுந்தரேசன் கொடுத்த ஒரு ரூபாயை எடுத்துப் பரிசுச் சீட்டு வாங்கி விட்டான்.

''அத்தை...அத்தை...'' ஒரே குதூகலத்துடன் கமலம் கூவியபடி ஓடி வந்தாள்.

''வாடியம்மா கமலம். என்ன சமாசாரம்? அம்மா அப்பாவை அழைச்சுண்டு வரலையா?''

அலமேலுவைப் பேசவிடவில்லை. ''அத்தை, முதலில் துரை எங்கே? அதைச் சொல்லுங்கோ. என் ஜோஸ்யம் பலிச்சுப் போச்சு...''

''என்னம்மா சொல்லறே? எனக்கு ஒண்ணும் புரியலையே...''

''அத்தை, நான் ஒரு ஏஜெண்டிடம் பரிசுச் சீட்டு விக்கறது தெரிஞ்சிருக்குமே...!''

''துரை சொன்னான்.''

''துரை வாங்கின சீட்டுக்கு முதல் பரிசு விழுந்திருக்கு அத்தே. மயக்கம் போட்டுடாதீங்க. இனிமே நீங்களும் அத்திம்பேரும் சுகமா வாழலாம். அதிலே எங்களுக்குக் கிடைக்கப் போற கமிஷனிலே எங்க குடும்பத்துக்கான துணி மணியாவது வாங்கலாம்.''

''துரை சீட்டு வாங்கினானா? தெரியாதே. உங்கிட்டேதான் வாங்கினானா? நல்ல சமாசாரமா இருக்கு. இன்னும் கொஞ்ச நேரம் இரு. திருக்கண்ணமுது பண்ணிச் சாப்பாடு போடறேன். துரையும் வந்துடுவான்...''

''நான் திருக்கண்ணமுதுக்கு உட்கார்ந்திருந்தா அப்பாவுக்கு யார் மருந்து வாங்க முடியும்? நாலு நாளா ஜுரம். துரை வந்தா சொல்லிடுங்கோ. பேப்பர் கூட வாங்கிப் பார்த்திருக்க மாட்டான்.'' கமலம் ஓடினாள்.

துரையும் பூவராகனும் வீடு திரும்பியதும் செய்தியைக் கேட்டனர்.

''உண்மையாகவா? நிஜமாகவா? ஏண்டா துரை நீ சொல்லவே யில்லையே. பரிசுச் சீட்டெல்லாம் கூட வாங்கறயா?'' தந்தை மகிழ்ச்சியோடு கேட்டார்.

''என் பணமில்லே அது. சுந்தரேசன் உண்டியிலே போடச் சொன்னது. கமலம் துளைக்கக் கொட்டினான். ஓர் ஏழைக் குடும்பத்துக்கு உதவினதா இருக்கட்டும்னு பெருமாளுக்குக் கடன் சொல்லிட்டு வாங்கினேன். அதுக்குப் பரிசு விழுந்திருக்கு'' எனக் கூறிய துரை ராமரின் திருச் சந்நிதிக்கு ஓடினான்.

மறுநாள் காலை. பூவராகன் இன்னும் கோவிலுக்குக் கிளம்பவில்லை. இத்தனை தாமதம் அவர் இதுவரை காட்டினதில்லை.

''அப்பா! நீங்க இன்னும் கிளம்பலையா? யாராவது அர்ச்சனைக்கு வரதுக்குள்ளே பெருமாளுக்கு அலங்காரமெல்லாம் முடிக்க வேண்டாமா?'' துரை கேட்டான்.

''பெரி...ய கோவில் போயேன். யார் அங்கே அர்ச்சனைக்கு வராளாம்? உங்கிட்டே பேசிட்டுப் போகணும். அந்தப் பரிசுப் பணத்துலே அது இதுன்னு செலவழிக்காதே. குடித்தனம் வெச்சுண்டு நாம்பளும் இருக்கும்படியா ஒரு வீடு வாங்கிப் போடு. தங்க நிழலாச்சு. சாப்பிட வாடகைப் பணம். கஷ்டப்படாமல் இருக்கலாம்.''

''ஏம்ப்பா, அப்புறம் கோவில் அர்ச்சனையெல்லாம் யார் பார்த்துப்பா?'' என்று துரை சிரித்தபடி கேட்டான்.

''அதுக்கெல்லாம் ஏற்பாடு செய்யாமப் போயிடுவேனா? இன்னிக்கே ரங்கராஜன் கிட்டே சொன்னால் ஓடி வரமாட்டானா? கோவில் உருண்டைச் சாதம் கிடைக்குமே!''

''என்னப்பனே! ரகுராமா!'' துரை கூறிக்கொண்டான். பிறகு அம்மாவை நோக்கினான். ''அம்மா! நீ என்ன சொல்றே?''

அலமேலு வாய் திறக்கவில்லை. உதட்டில் புன்முறுவல் ஒன்றுதான் அவள் பதில்.

''அம்மாவுக்கு ஒரு தங்கக்கொடி பண்ணிப் போடு....''

''அப்பா... வந்து... ரொம்ப முக்கியப் பட்டவாளை நீங்க மறந்துட்டாப்லே தோணறது...''

''யார்டா, அந்தக் கமலத்தைச் சொல்றயா? அதுக்கும் ஏதாவது கொடு. அவளுக்கும் இது போல ஒரு பரிசு வந்துதுன்னு ரெண்டு பேருக்கும் சேர்த்துக் கல்யாணத்தை முடிச்சுடலாம். இப்ப அவ சம்பந்தத்தை நம்ப எடுத்தால் ஊர்க்காரா நம்மைப் பிச்சுடுவா... ம்... பிராப்தமில்லே....''

''என்னென்னவோ நீங்க பேசிட்டேள். இந்தப் பணத்துலே யாருக்கு எந்த முறையிலே எப்படிச் செய்யறதுன்னு நானே முடிவு எடுக்கணும்னு வெச்சுட்டேன். முதல்லே பெருமாள் கடனை ஒரு ரூபாயை உண்டியிலே போடணும்.''

''ஒரு ரூபாய்தானே. இதுக்கு என்ன யோசனை?''

''அப்பா, நாளைக்கு நான் வெளியூர் போறேன். திரும்பி வர இரண்டு மாசங்கள் கூட ஆகலாம்.''

''வேதம் ஆராய்ச்சிப் படலம் இன்னும் விடலையாக்கும். உன் தலையெழுத்து.''

துரை பதில் கூறவில்லை.

பூவராகனுக்கு ஊரில் பெரிய மதிப்பு ஏற்பட்டுவிட்டது. அவர் பிள்ளை லட்சாதிபதி. கோயிலில் நேரம் தவறாமல் அர்ச்சனைக்குப் போவதும் தடைப்பட்டது.


''லட்சாதிபதியாப் போயிட்டேன். இந்த அர்ச்சகத் தொழிலும் உருண்டைச் சோறும் எதுக்குங்காணும்?'' ஊரார் உபதேசம் எனக் கூறிக் கொண்டாலும் அவருக்கே அர்ச்சகத் தொழில் கீழ்ப்பட்ட நிலையில் காணப்பட்டது.

துரை வெளியூரிலிருந்து திரும்பிவிட்டான். அப்பா கோயிலுக்குப் போகவில்லை.

''அப்பா! கோயிலுக்குப் போவதைத் தாமதமாக்கிவிட்டேளாக்கும். இன்று நாள் நன்றாக இருக்கிறது. உங்க பேருக்கே அர்ச்சனை செய்துட்டு வேலையை ஆரம்பிச்



சென்னை தியாகராயநகர் கல்யாண் ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு கல்யாண சுந்தரத்தின் புதல்வி சௌபாக்கியவதி **சுகந்தி**க்கும் ஆல்விடோன்ஸ் லேபரடரி உரிமையாளர் திரு தங்கராஜாவின் குமாரர் சிரஞ்சீவி **பால்ராஜ்** அவர்களுக்கும் 3-2-1974 ஞாயிறன்று புரசவாக்கம் தர்மபிரகாஷில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. காலையில் முகூர்த்தத்துக்கும் மாலையில் வரவேற்புக்கும் நகரப் பிரமுகர்கள், கலைத்தொழில் நிபுணர்கள், பத்திரிகாசிரியர்கள், அரசியல் தலைவர்கள் பலர் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்துச் சென்றனர். திரு ம. பொ. சிவஞான கிராமணி, திரு எ. ஜி. வெங்கடாச்சாரி, திரு சி. ஆர். நரசிம்மன், திரு எம். பக்தவத்சலம் மற்றும் பலர் காலையில் புதிய தம்பதிகளை ஆசி கூறி உரையாற்றினர். மாலையில் திரு காமராஜ், பி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், ஜெய் சங்கர் முதலியோர் வரவேற்பில் கலந்து கொண்டனர். சுஜா ஆர்ட்ஸ் டி. வில்லியம்ஸ் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி மாலையில் நடைபெற்றது.



மொட்டு மலர...

காதல் மொட்டு மலர வேண்டுமானால் முதலில் உங்கள் பர்ஸ் வாட வேண்டும்!

லயன் — பாலி

கடலாம்.'' ஷர்ட்டைக் கழற்றிக் கொண்டே கூறினான் துரை.

''வேலையா? என்ன வேலை ஆரம்பிக்கணும்? நம்பகூட ஒரு படி முன்னாடி போயிட்டோம். அந்த ராமன் அப்படியே பழைய நிலையை நிவர்த்திச்சுக்க முடியாமல் நிக்கறானே.......கோயில்ங்கிற தன் வீட்டுக்குள் ஒளி விளக்கேத்த வரும்படிக்கு வழி பண்ணிக்கலையே அந்த ராமன். நான் என்ன செய்யட்டும்?''

''அங்கேதான் நீங்க தப்புக் கணக்குப் போட்டுட்டேள். அந்த ராமன் சம்பாதிச்சுண்டாச்சு. நீங்க புரிஞ்சுக்கலே.''

'' ஏண்டா, நாலு பேரைப் பிரார்த்தனை பண்ணிக்க வெச்சானு?''

''கொஞ்சம் இருங்க.... பிரார்த்தனை பண்ண வெக்கலே. அசரீரி மாதிரி ஒரு பெண்ணைச் சொல்ல வெச்சான். தன் கோயில் உண்டிக்கான ஒரு ரூபாயைக் கொடுத்தான். அதன் மூலம் லட்ச ரூபாய் அடிச்சுண்டான்!'' துரை சிரித்தபடி கூறினான்.

''டேய்..... டேய்... என்ன சொல்றேடா நீ? மூளை பிசகிப் போச்சா? இது என் பிள்ளைக்குக் கிடைச்ச பணம்டா.''

'' இல்லையப்பா. உண்டியல் பணம்! இத்தனை நாளாகத் தள்ளிப் போட்ட சுந்தரேசன் அந்தப் பணத்தை எங்கிட்டே தந்தது, நான் கமலத்தைப் பார்த்தது, அவள் பரிசுச் சீட்டு வாங்கச் சொன்னது, அந்தச் சீட்டுக்குப் பரிசு விழுந்தது எல்லாம் ராமன் தானாகச் செய்து கொடுத்த ஏற்பாடு. அவன் சம்பாதிச்சுண்ட பணத்தை அவனுக்கே செய்யறது தான் நல்லது. அதனால் கோயிலைப் பெரிசாக்கிக் கட்ட ஏற்பாடு செய்துட்டு வரத்தான் வெளியூர் போனேன். ஏற்பாடாகி விட்டது. பெருமாள் வயிற்றைக் காயப் போடக் கூடாதுன்னு அவன் சாப்பாட்டுக்குக் கோயில் சொத்தாக நஞ்சை புஞ்சை இரண்டும் வாங்கிட்டேன். வேலை முடிந்து சீக்கிரமே இந்தக் கோயில் பிரபலமாயிடும். நம்ப ராமனுக்கு யோக காலம் இது.''

பூவராகன் தாம் அமர்ந்திருந்த விசுப் பலகையில் அப்படியே படுத்து விட்டார்.

கோயில் திருப்பணி கோலாகலமாக நடந்து கும்பாபிஷேகமும் முடிந்தது.

''ஏண்டா துரை! உனக்கென ஒரு பைசா வெச்சுக்காம இப்படி கோயிலுக்கே போட்டுட்டியே.'' கமலம் வியப்புடன் கேட்டாள்.

'' அந்தப் பெருமாளுடைய பணமாச்சே. நான் ஓடியாடிப் பணத்தைச் சம்பாதிச்சுக்க முடியும். ராமனுக்குக் கோயிலைவிட்டு நகர முடியாதுங்கிறதினாலே இருந்த இடத்திலேயிருந்து சம்பாதிச்சுண்டார். அதிலே நான் பங்கு கேட்கலாமா?''

''உன் போக்கே புரியலே.''

''சீக்கிரமே புரிய வெக்கிறேன்.''

ஊர் முழுவதும் துரைக்கு மரியாதையும் மதிப்பும் கிடைத்ததோடு 'இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்ற பாக்கியவான்' எனப் பூவராகனையும் கௌரவித்தனர். கோயில் கொண்ட ராமனோ தன் கோயிலான வீட்டைப் பெரியதாக்கிக் கொண்டபடி மக்களைத் தன் பக்கம் இழுக்க ஆரம்பித்தான். பிரார்த்தனைகள் பலித்தன. உண்டியில் பணம் நிரம்பியது.

''கமலம்..... ''

''நீயாடா துரை? நீ எங்கேடா இந்த வீட்டுக்கு வந்தே?'' கமலம் வரவேற்றாள்.

''புதுசா எங்கிட்டே என்ன பார்த்துட்டே? பழைய துரையேதான் இப்பவும் நான்.''

'' ரொம்ப சந்தோஷம்டா. கோயில் பணியெல்லாம் முடிஞ்சு ரொம்பப் பிரபலமா ராமனை ஆக்கிட்டே..... இனிமே என்னடா செய்யப் போறே?''

''கமலம்! உங்கிட்டே ஒண்ணு சொல்லணும்.... ஏண்டா வாடா போடாங்கறதை நீ நிறுத்திண்டாதான் இனிமே நல்லது. கணவன் மனைவின்னு ஆயிட்டா நீ அப்படி கூப்பிடறது எனக்கே என்னவோ போல் இருக்கும்.'' துரை முகம் மலரக் கூறினான்.

'' துரை நீ என்ன சொல்றே? 'நீ' இல்லே... 'நீங்கள்'!''

கமலத்துக்கு உணர்ச்சிப் பெருக்கில் என்ன பேசுவது என்றே தெரியவில்லை. துரையின் காலடியில் விழுந்தாள். ''அத்தையும் அத்திம்பேரும் சம்மதம் தரவேண்டாமா?''

'' சம்மதிக்க வெச்சுட்டேன்.... அது மட்டுமில்லே. கல்யாணம் முடிந்ததும் வெளி நாட்டுப் பயணம்......''

கோயில் திருமஞ்சன வேளையில் துரைக்கும் கமலத்துக்கும் முகூர்த்தமும் முடிந்தது.

''ஏண்டா துரை, வேதம் ஆராய்ச்சி செய்து பி.எச்.டி. வாங்கிட்டே, இங்கேயே வேலை தேடப்படாதோ?'' அப்பா கேட்டார்.

'' இங்கேதான் வேதம் பிறந்தது. பிறந்த இடத்தில் கிடைக்கிற மதிப்பைவிட அமெரிக்காவிலே கிடைக்கிற மதிப்பு உசத்தியில்லையா? வேத வகுப்புன்னு சர்வகலாசாலையில் ஆரம்பிச்சு, அதைச் சொல்லித் தர இவன[illegible] அழைப்பும் வந்துடுத்தே. அயல் நா[illegible] நம் வேதத்தையும் துரையையும் [illegible] நமக்குப் பெருமையில்லையா?'' அலமேலு கூறினாள்.

'' அடியே! நீ லேசுப்பட்டவள் இல்லே.'' பூவராகன் பெருமை பொங்கச் சிரித்தார்.

துரையும் கமலமும் அமெரிக்கா சென்று விட்டனர். பிள்ளை சம்பாதித்து அனுப்பிய பணத்தில் பூவராகன் குறைவில்லாமல் இருந்தார்.

கோயிலுக்கு நிறைய வரும்படி. பணக்கார ராமன் அரக உடைமையாகப் போய் விட்டான். கோயில் பிரசித்தமாகிவிட்டது. ஆனால் ராமனோ, எப்போதும் போல் சிரித்த முகத்துடன் இருந்தான்.



இவ்வாண்டு தியாகராஜ ஆராதனையைச் சென்னை கிருஷ்ண கான சபையினர் ஒரு புதுமையான முறையில் நடத்தினர். தியாகையரின் சிஷ்யர்களுள் ஒருவரான லால்குடி ராமையரின் வாரிசாக இன்று திகழும் திரு லால்குடி ஜெயராமனை லால்குடி பஞ்சரத்ன கீர்த்தனைகளை அளிக்கச் செய்தனர்.

திருவாளர்கள் பி. எஸ். நாராயணசாமி, வி. ஆர். கிருஷ்ணன், வி. சுப்பிரமணியம், வைரமங்கலம் லக்ஷ்மி நாராயணன், ஆர். எஸ். மணி, கிருஷ்ணமூர்த்தி பாகவதர் ஆகியோர் கோஷ்டிகானமாக இழைந்து பாடி, தலைமைவகித்த செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யரின் பாராட்டுக்களையும் ஆசிகளையும் பெற்றனர். ஜெயராமனும் அவர் மகன் கிருஷ்ணனும் பக்க வாத்தியமாக வயலின் வாசிக்க வேலூர் திரு ராமபத்திரனும் திரு லக்ஷ்மணனும் மிருதங்கம் வாசித்தனர்.

கோஷ்டிகானம் தொடங்குமுன் திரு ஜெயராமன் லால்குடி க்ஷேத்திரத்தின் சிறப்புக்களையும் லால்குடி பஞ்சரத்னம் தோன்றிய வரலாற்றையும் எடுத்துரைத்தார் :

தவத்துறையில் தவசிரேஷ்டர்


ஆலய கோபுரம் சிவந்து விளங்கியதைப் பார்த்துவிட்டு 'லால்' என்று சில முஸ்லிம்கள் அழைக்கப் போக லால்குடியாகிவிட்டது திருத்தவத்துறை என்னும் சிறப்பு மிகுந்த புண்ணியத்தலம் ! அங்கே திருமகள் தவம் புரிந்து அம்பிகையிடம் வரம் பெற்றதனால் அவ்வூரைத் திருத்தவத்துறை என வழங்குவர். திருமகளுக்கே லக்ஷ்மீகரத்தை அருளியதால் அம்பிகையின் பெயர் ப்ரவ்ருத்த ஸ்ரீமதி (பெருந்திரு) என வழங்கலாயிற்று. ஏழு முனிவர்களின் தவத்துக்கு உவந்து அருள்புரிந்தமையால் ஆண்டவனை சப்தரிஷீசுவரர் என்பர். இந்தக் கோவில் அமைப்பில் ஒரு விசேஷம் உண்டு. விநாயகப் பெருமான் சந்நிதியிலிருந்து தொடங்கி வலம் வந்து கர்ப்பக் கிருஹம் சென்று திரும்பினால் ஓம் என்ற வடிவத்தினையொட்டி நாம் கோயிலைப் பிரதட்சிணம் செய்ததாக ஆகும் !

அழகான ஆலயத்தை நனர் நடுவே கொண்டு தேவாரம், திருப்புகழ் பாடல் பெற்ற இத்தலம் ராமய்யர் மூலமாகத் தியாகையரின் பஞ்சரத்ன கீர்த்தனைகளையும் அடையும் பாக்கியம் பெற்றது.

ஆலயத்தின் அருகில் மேல மடவளாகத் தெருவில் வாழ்ந்து வந்த ஸ்ரீனிவாசய்யர்

மேலே: தியாகையரும் சிஷ்யர் ராமையரும். ராமையர் எப்படி இருப்பார் என்பதே ஜெயராமனுக்குத் தெரியாது. மைசூர் அரண்மனையில் இவர் படம் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்று ஒவ்வொரு படத்தின் கீழும் எழுதப்பட்டுள்ள பெயரைப் படித்து வந்து கடைசியில் தமது முப்பாட்டனாரைக் கண்டுபிடித்தார்!

கீழே: தெய்விகச் சூழலில் கோஷ்டி கானம்.



எனும் பக்திமானின் புதல்வராய் 1807ல் தோன்றினார் ராமய்யர்.

இளம் வயதிலேயே இசையில் ஞானமும் தெய்வ பக்தியும் மிருந்து விளங்கிய தனயனை அவ்வழிகளிலேயே ஈடுபடுத்தத் தந்தையாரின் மனம் விழைந்தது.

லால்குடியிலிருந்து சிறிது தூரத்தில் காவிரி ஆற்றின் மறு கரையில் உள்ளது திருவையாறு. அக்காலத்தில் திருவையாற்றில் சிறந்த பக்தராகவும், சங்கீத வித்பன்னராகவும் இசையையும், பக்தியையுமே வாழ்க்கையாகக் கொண்டு விளங்கி வந்த மகான் ஸ்ரீ தியாகராஜரைப் பற்றி ஸ்ரீநிவாசய்யர் கேள்வியுற்றார். பல மாணவர்கள் அங்கேயே தங்கி அவரிடம் குருகுல வாசம் செய்து வருவதையும் அறிந்த ஸ்ரீநிவாசய்யர் தம் புதல்வனை அம் மகானிடம் சேர்ப்பிக்க ஆவலுற்றுத் திருவையாற்றுக்கு விரைந்தார்.



லால்குடியின் சிறப்பை விளக்குகிறார் 'லால்குடி'

ஸ்ரீ தியாகையாவிடம்கூட இருந்து குருகுல வாசம் செய்து இசைக் கலை கற்கும் பெரும் பேறு சிறு பாலகன் ராமய்யருக்குக் கிட்டியது. பல காலம் குருவின் நிழலாயிருந்து அன்னாரின் அருளையும், கலையையும் பெற்ற இளைஞர் ராமய்யர், குருவின் ஆசி நிறைந்த அநுமதியுடன் சொந்த ஊராகிய லால்குடி திரும்பினார். குருவைப் போலவே நாத உபாஸனையிலும் ஸ்ரீ ராமபிரானின் ஆராதனையிலும் ஈடுபட்டு வாழ்ந்து வரலானார். பிற்காலத்தில் ராமய்யர் மைசூர் மன்னர் மும்முடி கிருஷ்ணராஜ உடையார் அவர்கள் அழைக்க, மைசூர் சென்று அங்கே ஆஸ்தான வித்துவானாக அமர்ந்தார். அவ்வமயம் ஒரு சமயம் தம் தலையில் எலுமிச்சம் பழத்தை வைத்துக் கொண்டு அது கீழே விழாமல் ஒரு கடினமான நாலு களைச் சவுக்கப் பல்லவியை விஸ்தாரமாகப் பாடி த்ரிகாலம் செய்து மகாராஜாவிடம் 'பல்லவி ராமய்யர்' எனும் பட்டமும், தோடா முதலிய சன்மானங்களும் பெற்றார்.

வயதான காலத்தில் ஸ்ரீ தியாகராஜர் சிஷ்யர்கள் சூழ யாத்திரை புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்தார். அங்கங்கே பக்திப் பாடல்களும் தோன்றின. பெரும்பாலும் ராமபிரான் மீதாகவே பாடி வந்த தியாகையர் இந்த ஸ்தல யாத்திரையின் போது சிவனைப் பற்றியும் அம்பாளைப் பற்றியும் பல பாடல்களை இயற்றினார். சில ஸ்தலங்களில் ஐந்து பாடல்களை அவர் இயற்றப் போக அவை கோவூர் பஞ்சரத்னம், ஸ்ரீரங்கம் பஞ்சரத்னம், லால்குடி பஞ்சரத்னம் என்றெல்லாம் பெயர் பெற்றன. அதிகமாகப் பிரபலமான, நாட, ஆரபி, வராளி முதலான ராகங்களில் அமைந்த பஞ்சரத்ன கிருதிகள் தவிர க்ஷேத்திரக் கிருதிகளான இப்பஞ்சரத்னப் பாடல்களும் வாணிக்கு அவர் அணிவித்த இசை ஆரங்களாகத் திகழ்கின்றன. தியாகையர்தம் குழாத்துடன் ஸ்ரீரங்கம் வந்தபோது, ராமய்யர் தம் குருவை வணங்கி, புண்ணியத் தலமும், தமது ஊருமாகிய லால்குடிக்கு வந்தருள வேண்டி அழைத்தார். மாணவரின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீ தியாகையாவும் லால்குடிக்கு வந்து சேர, குருநாதரைத் தம் இல்லத்தில் தங்கச் செய்து வழிபட்டு ராமய்யர் அளவிலா ஆனந்தம் அடைந்தார்.

ஸ்ரீ தியாகராஜர் லால்குடி ஆலயத்தில் ஸ்ரீசப்தரிஷீசுவரரையும், ஸ்ரீ ப்ரவ்ருத்த ஸ்ரீமதியையும் தரிசித்து வணங்கி மெய்ம்மறந்து லயித்த நல்வேளையில் ரத்தினங்களாக ஐந்து கீர்த்தனங்கள் உதயமாயின. ஸ்வாமியின் பேரில் இரு பாடல்களும், அம்பிகை மீது மூன்று பாடல்களுமாக அவ்வமயம் உதித்த கீர்த்தனைகளே லால்குடி பஞ்சரத்னம். அவை வருமாறு :

1. ஈசபாஹிமாம் (கல்யாணி), 2. லலிதே ஸ்ரீ (பைரவி), 3. மஹித ப்ரவ்ருத்த ஸ்ரீமதி (காம்போஜி), 4. கதி நீவனி (தோடி), 5. தேவ ஸ்ரீ தபஸ்தீர்த்த (மத்யமாவதி) இவற்றில் மூன்று பாடல்கள் தெலுங்கிலும், இரண்டு சம்ஸ்கிருதத்திலும் அமைந்திருப்பவை. பிரபலமான ராகங்களில் அமர்ந்திருக்கும் விசேஷப் பிரயோகங்கள் கொண்டவை. தியாகையரின் இசை ஞானத்தை மட்டுமின்றி சம்ஸ்கிருதத்தில் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமையையும் வெளிப்படுத்துபவை.

லக்ஷ்மி தேவி தவமிருந்ததால் திருத்தவத்துறை என்று பெயர் பெற்ற லால்குடி, தவ சிரேஷ்டர் தியாகையரின் வருகைக்காகத் தவமிருந்தும் சிறப்பெய்தியுள்ளது.

தமிழ்ப் படங்களில் காதல் காட்சிகளைப் பார்த்தால் **பயமும்**

சண்டைக் காட்சிகளைப் பார்த்தால் **சிரிப்பும்**

நகைச்சுவைக் காட்சிகளைப் பார்த்தால் **அழுகையும்**

வருகிறது!



— பாபு

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

